தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 10, சனிக்கிழமை.

சித்திரை 27, அக்ஷய திருவள்ளுவர் ஆண்டு, 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.'

தாமே உணர்கின்ற தன்மை உடையவரின் முன் கற்றவர் பேசுதல், தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிந்தாற் போன்றது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.
மாநில மின் உற்பத்திக் கழகம்.

719 (*வினா எண் 4943)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் மின் உற்பத்தியைத் திறம்பட செய்திட ''மாநில மின் உற்பத்திக் கழகம்'' (Power Generation Corporation, அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மின்சார உற்பத்திக்கென்று ஒரு தனிக் கழகம் ஆரம்பிக்க வேண்டியது மிகச் சிறந்ததோர் சீர்திருத்தம் கர்நாடக மாநிலத்திலே, அதே போல் இங்கிலாந்து நாட்டிலே எல்லாம் இப்படி மின் உற்பத்திக்கென்று தனி கழகம் ஏற்படுத்துகின்ற நிலைமையில், மின் கழகத்திற்கு வந்த நட்டத்தை நிவர்த்தி செய்ய அதிக வாய்ப்பு ஏற்பட்டுஇருக்கிறது. நம் மாநிலத்தில் பார்க்கிறோம், போக்குவரத்துக் கழகங்களை ஆரம்பித்த பிறகுதான் சிறந்த நிர்வாகத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே சிறந்த

போக்குவரத்துக் கழகங்களாக போக்குவரத்தில் இலாபம் ஈட்டுகிற கழகங்களாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ரூ. 200 கோடி நஷ்டம் ஏற்படுகின்ற இந்த மின்துறையில் இப்படிப்பட்ட மின் உற்பத்திக் கழகத்தை உருவாக்குவதில் அமைச்சர் அவர்கள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்திக் கழகம் குறிப்பாக, அனல் மின் நிலையங்களைப் பொறுத்த வரையில் அமைத்துச் செயலாற்றுவது நல்லது. அதற்குரிய சூழ்நிலை இன்னும் வரவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, மின் உற்பத்திக் கழகம் அமைப்பதற்கான சூழ்நிலை வரவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்திலே பெருகிவருகிற மின் தேவையைப் பூர்த்தி செய்ய பல மின் திட்டங்களைப் போட வேண்டும். நிதி ஆதாரங்களைப் பொறுத்த மட்டில், கூடுதலாக நிதி தேவைப்படுகிறது. பல மாநிலங்களில் மின்சாரவாரியங்கள் மூலமாக உலக வங்கியிடம் கடன்வாங்குகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால் இதுவரையில், நம் மின்சாரத் துறை ஒரு பைசா கூட உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் இலாபம் ஈட்டுகிற வகையில் இருந்தால்தான் அவற்றிற்கு உலக வங்கி கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே இந்த நிலையில் மாநில மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்கிற கருத்தினை அடிப்படையாக வைத்தாவது, இலாப நோக்கில் கொண்டு வருவதற்காகவாவது, உடனே மின் உற்பத்திக் கழகம் அமைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவருடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். வட சென்னை அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை உலக வங்கிக் கடனைக் கோரி உள்ளோம். ஒருவேளை, அவர்கள் அதைத் தனிக் கம்பெனியாக மாற்றவேண்டுமென்று கேட்டாலும் கேட்பார்கள். பொதுவாக அனல் மின் உற்பத்தி நிலையங்களைச் சேர்த்து ஒரு கழகம் அமைப்பதன் மூலம் திறமையான நிர்வாகத்தை, நல்ல பயிற்சி பெற்ற பொறியாளர்களை உருவாக்கி நிர்வகிக்க இயலும். இது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துதான் என்றாலும், நாம் இன்னும் உருவாக்காமல் தான் இருந்து வருகிறோம்.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் பல இடங்களில் பவர்புல் ஜெனரேட்டர்களைப் பொருத்த வேண்டியுள்ளது என்றும் மே மாதத்தில் அவை வந்து விடும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அவை வந்து சேர்ந்து விட்டனவா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவரம் என்னிடத்தில் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது, இது உலகம் ஏற்றுக்கொண்டுள்ள திட்டம் என்றும் அதற்கேற்ற சூழ்நிலை மட்டும் வரவில்லை யென்றும் தான் குறிப்பிடுகிறார். உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு திட்டத்தை, நல்ல செயலாக்கம் தரக்கூடிய ஒரு திட்டத்தை உலக வங்கியிலிருந்து கடன் பெற்று பல்வேறு வகையிலே மின் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு வேறு என்ன என்ன சூழ்நிலையை எதிர்பார்க்கிறார் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் சொல்வார்கள், Right decisions need not be the best decistions) என்று. சரியான கருத்துக்கள் ஏற்கத்தக்க கருத்துக் களாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, எல்லா நிலைமைகளும் ஒத்து வருகிறபொழுதுதான் அத்தகைய திட்டங்களை உருவாக்க முடியும்.

தனியார் மின் உற்பத்தி நிலையம்.

720—(*வினா எண். 6157)—திரு. எஸ். இராசாராமன்: மாண்பு மிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தொழிற்சாலை அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக்கொள்ள உரிமை கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(இ) எந்தெந்த நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ. ஆ. மற்றும் இ.) சென்னைநகரிலுள்ள சில தொழிற் நிறுவனங்கள், 110 மெ. வாட் திறன்கொண்ட அனல் மின்நிலையம் அமைக்கும் திட்டம், மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலே அடிக்கடி மின்சார வெட்டு வருவதால் எல்லா தொழிற்சாலைளுக்கும், அவர்களே மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்கும்போது அவர்கள் எல்லோருக்கும் சலுகை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் அனுப்பி கிட்டத் தட்ட 3 ஆண்டுகள் ஆகின்றன. இந்திய அரசு இதைப்பற்றி

கொள்கை முடிவு எடுத்த பிறகுதான் இத்தகைய திட்டங்களுக்கு அனுமதி அளிக்க இயலும். அனுமதி எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம். இந்தத் திட்டத்தை நாம் 6—8—1983 அன்றே அனுப்பியிருக்கிறோம். தனியார் மின் நிலையங்கள் அமைப்பதற்கான கொள்கை பற்றிய முடிவை இந்திய அரசு எடுத்து அனுப்பியபிறகுதான் மற்றவைகளைப் பற்றி நாம் கவனிக்க முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தயாரிக்கும் மின்சாரத்தை வெளியிலே மற்றவர்களுக்கு விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்படுமா? ஆம் எனில், அவர்கள் என்ன விலைக்கு விற்கவேண்டும் என்று உத்திரவு இடப்பட்டிருக்கிறது ? மின் வாரியம் வசூலிக்கும் கட்டணத்தைவிட குறைந்த கட்டணத்திற்கு விற்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எழுப்புகின்ற கேள்விக்கு நிச்சயமாக இப்போது பதில் தர இயலாது. உற்பத்தித் திட்டம் முதலிலே வருமா என்பதே பிரச்சனைக்கு உரியதாக இருக்கிறது பிறக்காத பிள்ளைக்கு பெயரிடவேண்டிய அவசியம் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 1983-ல் இந்த அரசு மத்திய அரசுக்கு இந்த திட்டத்தை சமர்ப்பித்து நாளது வரையில் அதைப்பற்றிய கொள்கை முடிவுகூட எடுக்கவில்லை என்று சொன்னால், இன்னும் எத்தனை வருடங்கள் ஆகும் கொள்கை முடிவு எடுக்க ? அந்த உத்திரவு எப்போது வருவது, நாம் எப்போது நிறைவேற்றுவது என்று தெரியவில்லை. இன்னொரு பக்கம் தனியார் துறையிலே இந்த மின் திட்டத்தை அனுமதித்தால், அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரம், தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக இருக்கும்படியான கிரிட்டோடு இணைத்து, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் பயன்படுத்தியது போக மீதியை மற்றவர்களுக்கும் கொடுக்கலாம் என்ற சுதந்திரம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இத்தகைய ஒரு மின் நிலையம் அமைப்பதற்கு இந்திய அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்ற வகையில் ஒரு தகவல் வந்திருக்கிறது. அது குறித்து இன்னும் சில விவரங்களைப் பற்றியும், இயந்திரங்களை வெளியிலிருந்து கொண்டுவருவது, வெளிநாட்டிலிருந்து கடன் வாங்குவது போன்றவற்றைப் பரிசீலிக்கவேண்டியதால் இந்தக் காலதாமதம் இந்திய அரசிடையே ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் அவர்களுக்குப் போக மீதியை நாம் பெற்றுக்கொள்வோம். எந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வது என்பது ஒப்பந்த அடிப்படையில் பேசி முடிவு செய்யப்படும்.

1986 மே 10]

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் போன்ற தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியிலே இது போன்ற ஒரு திட்டம் வரப்பிரசாதமாக அமையக்கூடிய திட்டம். அமைச்சர் அவர்கள் பதிலில் மத்திய அரசு இன்னும் கொள்கை அளவிலேகூட இதை ஒப்புக்கொள்ள வில்லை என்பதுபோல் சொன்னார்கள். இப்படி தனிப்பட்ட தொழிற்சாலைகளில் ஒரு தன்னிறைவான திட்டமாக இருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை தந்து-மத்திய அரசும் இதைக் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டும்—அதன் முக்கியத் துவத்தை மாநில அரசு விரைந்து மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டும். மின் தட்டுப்பாடு காரணமாக தொழிற்சாலைகளிலே 80 சத விகிதம் பவர் கட் என்று சொன்னால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு வாழ்வு கெடுகிறது. இவற்றை மனதில் நிறுத்தி மத்திய அரசு விரைந்து இதற்கான அனுமதி தர,மாநில அரசு என்ன நடவடிக்கை புதியதாக எடுத் திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து இத்தகைய கருத்துரு வரவில்லை. மணலியிலிருந்து ஒன்று வந்திருக்கிறது. தூத்துக்குடி யிலிருந்து வந்திருக்கிறது. அண்மையிலே மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் அவர்களோடு பேசியபோது தனியார் இத்தகைய மின் உற்பத்தி நிறுவனங்களை அமைப்பதற்கு ஒப்புக் கொள்ள லாம் என்ற வகையிலே தான் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்நியச் செலாவணி போன்றவை இருப்பதால் இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு அறிவிக்கப்பட்டது இந்தத் திட்டம். இதுவரைக்கும் தனியார் தொழிற்சாலையிலே அவர்கள் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அனுமதி கேட்டு, எவ்வளவு பேர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள்? இதுபோன்ற நல்ல திட்டத்தை மத்திய அரசு மூலமாக அனுமதி பெற்றுத்தான் தர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு விரைவாக வாங்குவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் நான் ஏற்கெனவே எடுத்துச் சொன் னதுபோல் 110 மெகாவாட்டுக்கு ஒரு கருத்துரு வந்திருக்கிறது. எஸ். ஆர். கம்பெனி என்பவர்கள் மணலியிலே அமைப்பதற்கு, அதாவது 200 மெகாவாட் திட்டத்திற்கு அவர்களே முன் வந்திருக்கிறார்கள். அதேபோல் ஸ்பிக் நிறுவனத்துடனும், டிட்கோ நிறுவனத்துடனும் சேர்ந்து தூத்துக்குடியில் 210

மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். தூத்துக்குடி எக்ஸ்பன்ஷன் என்கிற ஒரு திட்டமும் இருக்கிறது. அதையும் நிறைவேற்றுவதற்கு அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து இந்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டும். அதற்கு நம்முடைய அரசு வற்புறுத்தும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் அவர்கள் பதிலில் ஏறத்தாழ 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய தனியார் தயாராக இருந்தும் அதுபற்றி 6—8—1983-ல் எழுதியதற்குப் பிறகும் கூட முழுமையான அனுமதி தரவில்லை என்ற தகவலைத் தந்தார்கள். அதேபோல ராதாபுரம் தொகுதியில் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் ஏற்படுத்துவதற்கு எல்லா சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன என்பதோடு அது உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை நமது அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்ததற்குப் பிறகு இரண்டு தினங்களுக்கு முன்பு கோவையிலே சென்னையைச் சேர்ந்த ஒரு அதிகாரி இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை, ஏனென்றால் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் கொண்டு வந்துவிட முடியும். எனவே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை எடுக்கவேண்டும் என்றும், தனியார்கள் அமைக்க இருப்பதற்கு உடனடியாக அனுமதி தரவேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு மின் உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளிப்பது என்பது இந்திய அரசு கொள்கை ரீதியில் எடுக்க வேண்டிய முடிவு. நாம் எப்படி கொள்கை ரீதியில் முடிவெடுக்கிறோமோ அதுபோல்தான் அதுவும். 28-11-1985 அன்று வந்த கடிதத்தில். The Gove nment of India have not objected in principle to set up a captive power pl nt by a consortium of private Indnstries for their own use. என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இதைப்பொறுத்தவரையில் அவர்கள்தான் பரிசீலித்து எடுக்க வேண்டிய முடிவாகஇருக்கின்ற காரணத்தால் இதிலே காலதாமதம் ஆகிறது. நமக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்ற வகையில்தான் இது. திருநெல்வேலியில் உள்ள கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பாரதப் பிரமதருக்குக் கடிதம் எழுதி அது ஆய்வில் இருக்கிறது என்ற வகையில்தான் நமக்குக் கிடைத்திருக்கிற தகவல் இருக்கிறது. பாரதப் பிரதமர் அவர்கள் சொல்கிறபடியே தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் அவ்வளவாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

1986 மே 10]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது தொழிற்சாலைகள் தாங்களே மின் உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது மத்திய அரசிலே இருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் எப்படி அதைச் சொன்னார்கள் என்பதை நான் உள்ளபடியே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டும் ஒன்றுதான். நாம் அனுமதித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்கள் இன்னும் அனுமதிக்க வில்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி என்பது சமூகத்தினுடைய ஜீவாதாரத் தேவையாகும். சமுதாயத்தினுடைய ஜீவாதாரத் தேவையைத் தனிப்பட்ட நபர்கள் உற்பத்தி செய்ய அனுமதி அளிப்பது தனிப் பட்ட நபர்கள் மேலாதிக்கம் செலுத்துவதற்கும், நிர்ப்பந்திப் பதற்கும் உரிய உரிமை வழங்குவதாக இருக்கிறது. எனவே மத்திய அரசு தன்னுடைய மின் உற்பத்தியைத் தனியாருக்குக் கொடுப்பது என்ற கொள்கையைப் பொறுத்தவரையில் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று மாநில அரசு கூறுமா? மாநில அரசைப் பொறுத்தவரையிலும் இவ்வாறு தனியாருக்கு ஒப்படைப் பதில்லை என்ற ஒரு முடிவு எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மின் உற்பத்தியின் மூலம் மேலாதிக்கம் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. அந்த அளவுக்கு உற்பத்தி செய்வது என்பது அவர்களால் இயலாத காரியம். இருப்பினும் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அது துணை புரியும் என்ற வகையில்தான் வர வேற்கிறோம்.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு வெளிநாட்டு உதவி.

721.—(*வினா எண். 6232)—திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளிநாட்டின் உதவியுடன் மின் நிலை யங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1986 மே 10

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) வடசென்னை அனல் மின் நிலையத்திற்காக உலக வங்கியின் நிதி உதவியைப் பெற மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தேசத் திட்டத்தின் மின் உற்பத்தித் திறன் எவ்வளவு? இந்தப் பணி எப்போது தொடங்கப்படும்? இதனால் பயன்படக் கூடிய நிலைமையில் மொத்தம் உற்பத்தியாகக்கூடிய மெகாவாட் மின்சாரம் எவ்வளவு? இதற்கு ஏதேனும் நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா? அரசு ஏதேனும் பரிந்துரை செய்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 630 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட அந்த அனல் மின் நிலையம் 547.79 கோடி ரூபாயில் நிறுவப்பட இருக்கிறது. அந்த திட்டத்திற்கான முழு நிதி உதவியும் பெறுவதற்கு உலக வங்கியிடம் கடன் கோரப்பட்டுள்ளது. அவர்களும் ஆய்ந்து வருகிறார்கள். இந்த 7-வது 5 ஆண்டுத் திட்டத்திலேயே துவக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெர்மன் மற்றும் ஜப்பான் நாட்டு நிபுணர் குழு இது போன்ற ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டிலே ஆய்வு செய்து ஒரு பரிந்துரையைச் செய்ததாக தகவல் இருக்கிறது. அதில் இது அடங்குமா அல்லது ஏதேனும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? வேறு ஏதேனும் இருக்கும் பட்சத்தில் வேறு எங்கு விரிவான புதிய மின் நிலையத்தை உருவாக்குகின்ற திட்டத்தைத் தமிழக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்திய அரசின் மூலமாக உலக வங்கியிடம் கடன் பெறுவதற்குத்தான் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஏனென்றால் குறைந்த வட்டியில் கிடைக்கின்ற கடன் அது. அது இல்லை என்று ஆன பிறகுதான் வேறு நாடுகளின் உதவியைப் பயன்படுத்தலாமா என்று பரிசீலிக்க வேண்டி வரும். உலக வங்கியின் உதவி கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்தியினுடைய இன்றியமையாத தேவையை கணக்கில் எடுத்துக் கொண்டு, சோஷலிஸ்ட் நாடுகளுடன், குறிப்பாக சோவியத் யூனியன் உதவியைக் கொண்டு அணு மின் நிலையத்தை உருவாக்குவதற்குரிய ஆலோசனை ஏதாவது மைய அரசுக்கு மாநில அரசு முன் வைத்துள்ளதா ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

1986 மே 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே கடலூரில் அமைய இருக்கிற அனல் மின் நிலையத்திற்கு சோவியத் யூனியன் உதவ முன் வந்துள்ளது. அது குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப்பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சோவியத் யூனியனின் தலைவர் கோபர்சேவ் அவர்கள் வருகை தருகிறபோது, பேச எடுத்துக் கொள்கின்ற பொருள்களில் இதுவும் ஒரு பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நம்மைப் பொறுத்த வரையில் யார், யார் பணம் கொடுக்க முன் வந்தாலும் பயன்படுத்தி மின் பற்றாக்குறையே இல்லை என்ற நிலையை உருவாக்கினால் அதுவே போதும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வெளிநாட்டு உதவியுடன் மின் நிலையம் அமைப்பதற்கு, வட சென்னையாக இருந்தாலும் சரி: கடலூராக இருந்தாலும் சரி, திட்டக் குழுவின் அனுமதி வந்துள்ளதா? அப்படி வரப்பெற்றிருந்தால் எந்தெந்தப் பகுதியில் வெளிநாட்டு உதவியுடன் மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வட சென்னை மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் 16–4–1986 அன்று திட்டக் குழுவினுடைய அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கிறது. கடலூர் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் திட்டம் ஆய்வு நிலையிலேயே உள்ளது.

திரு. பெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு தற்போது ரஷ்யாவிடமும், பிரான்ஸ் நாட்டிடமும் புதிய அணு சக்தி மின் நிலையத்தை நிறுவுவதற்குப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறது. மைய அரசை வலியுறுத்தி தமிழ் நாட்டிலே வெளி நாட்டினரின் தொழில் நுட்ப உதவியுடன் புதிய அணு சக்தி மின் நிலையத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் நீண்ட நாட்களாக ரஷ்யாவோடு நம்முடைய நாடு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது. அது பற்றி இன்னும் ஒரு முடிவிற்கு இந்திய அரசு வரவில்லை. அதுதான் உண்மையான நிலைமை. ஒரு முடிவிற்கு வந்தபிறகு, என்ன செய்யலாமோ அதற்கான நடவடிக்கையை அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

வெளிநாட்டு தூதர்கள்—அரசு அதிகாரிகள் சந்திப்பு.

722—(*வினா எண். 3251)—திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் உள்ள பல்வேறு வெளிநாட்டு கான்சல் அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் அடிக்கடி சந்திப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அத்தகைய சந்திப்புகள் ஏன் அடிக்கடி நடைபெறுகின்றன ?

(இ) அரசு அனுமதி பெற்று அதிகாரிகள் சந்திக்கின்றார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) சந்திப்பதாகத் தகவல் இல்லை.

(இ) அரசு அலுவல்கள் தொடர்பாக தேவைப்படும் பொழுது சந்திப்பார்கள்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மவுண்ட் ரோட்டில் உள்ள அமெரிக்கக் காரியாலயத்தில் ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி சென்று பேசியதாக, அமெரிக்க அதிகாரத்திற்கு உட்பட்டு வெளியிடப்படுகிற ஒரு தகவல் பத்திரிகையிலே வந்தது. பல்வேறு முறையில் நம்முடைய அதிகாரிகள் அமெரிக்கக் காரியாலயத்திற்குச் சென்று தொடர்பு கொள்வது இன்றுள்ள உலக நிலையில் நம்முடைய அரசின் உரிமைக்கும், நம்முடைய அரசு கடைப்பிடிக்கக்கூடிய கொள்கைக்கும், நாட்டை ஒற்றுமைப்படுத்துகின்றகொள்கைக்கும் பாதகமாக அமையும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அமெரிக்கத் தூதரகத்திற்கு நம்முடைய அதிகாரிகள் சென்று வந்ததாக ஒரு தகவல் பத்திரிகையில் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசிடத்தில் குறிப்பாக வந்ததாகத் தெரியவில்லை. அப்படி ஒருவேளை சென்றிருந்தால் அவர்கள் அரசினுடைய அனுமதியைப் பெற்று சென்றார்களா இல்லையா என்ற தகவலும் அரசிடம் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக ஒரு அரசாங்கத்தின் தூதர

1986 மே 10]

கத்தைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்திய அரசைப் பொறுத்த வரையில் எந்தத் தூதரகங்களுக்கும் அதிகாரிகள் அரசு வேலையாக அல்லது அரசினுடைய அனுமதியைப் பெற்றுதான் செல்ல வேண்டு மென்று இருக்கிறது. தனியாக அவர்கள் அழைத்தால் சில குறிப்பிட்ட காரியங்களுக்கு, பொது காரியங்களுக்குச் செல்லலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிகள் பற்றி பொது நன்மையைக் கருதி நம்முடைய அவையில் அரசு தெளிவாகச் சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தில் அவர்கள் குறிப்பாக அரசினுடைய கவனத்திற்குத் தனியாகத் தருவார்களானால், அது அரசினுடைய அனுமதியோடு நடைபெற்றதா, அரசினுடைய கவனத்திற்கு வராமல் நடைபெற்றதா என்பதை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, சில அரசியல் கட்சிகளினுடைய முன்னணித் தலைவர்கள் சில வெளிநாட்டுத் தூதர்கள், அதிகாரிகளை அவர்களுடைய இல்லங் களில் சந்தித்துப் பேசுகிறார்கள். அவர்கள் பேசியதற்கு சாட்சியாக, தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக இந்த, இந்த நாட்டுத் தூதர் பேசினார் என்று பத்திரிகையில் அந்தப் படங்களைப் போடுகிறார்கள். அந்தப் பத்திரிகை நிருபர்கள் வெளிநாட்டுத் தூதர்களோடு என்ன பேசினீர்கள் என்று அவர்களைக் கேட்டால் சரியாகப் பதில் சொல்லாமல் மழுப்பு கிறார்கள். பதில் பேசாமல் இருக்கிறார்கள். அப்படி அவர்கள் என்னதான் பேசுகிறார்கள்? இப்போது இந்திய துணைக் கண்டத்தில் 'நேஷனல் இண்டகரேஷனுக்கு' ஆபத்து விளைவிக்கக் கூடிய முறையில் பல வெளிநாட்டு சக்திகள் முயற்சி செய்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறபோது, இது போன்று வெளிநாட்டுத் தூதர்களைச் சந்திக்கிற அரசியல் தலைவர்கள் என்ன பேசினார்கள் என்று வெளியிடாமல் மறுப்பது தேச விரோத குற்றமாகாதா? அது போன்ற நட வடிக்கைகளில் ஈடுபடுகிறவர்கள் மீது விசாரணை வைத்துத் தண்டிக்கிற நோக்கம் மத்திய அரசுக்கு இருக்கவேண்டு மென்று மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி அரசு அதிகாரிகள் வெளி நாட்டுத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்கிறார்களா என்பது. அதுபற்றி அரசு கவலையோடு ஆராய்ந்து பதில் சொல்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறது. இந்திய நாடு என்பது உலகத்திலே மிகச் சிறந்த ஜனநாயக நாடு. ஆகவே ஜனநாயகத்திற்கு உட்பட்டு அரசியல் கட்சித் தலைவர்கள் வெளி நாட்டு தூதர் களை அல்லது தூதரக அதிகாரிகளைச் சந்திப்பது என்பது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமை. ஆனால் அவர்கள்

[1986 மே 10

எதற்காக சந்திக்கிறார்கள்? சந்திப்பினால் என்ன பயன் என்ன விளைவுகள் என்பதை மாநில அரசும் கவனித்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் கவனித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள அரசு அதிகாரிகள் வெளி நாட்டுத் தூதர்களைச் சந்தித்து அரசு ரகசியங்களை அவர்கள் மூலமாக வெளி நாடுகளுக்குக் கொடுப்பதாகத் தெரிகிறது. அதேபோல தமிழ் நாடு அரசு அதிகாரிகள் சில எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்து அரசு ரகசிய கோப்புகளைப் பற்றி கூறுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அரசு அதிகாரிகள் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளைச் சந்திப்பது பற்றியதாகும். ஆகவே இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தினுடைய இரகசியங்கள் பலவற்றை அதிகாரிகளிடமிருந்து பெற்று பெரிய நாட்டினுடைய தூதரிடம் அந்தத் தலைவர்—அதாவது ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்று நினைக்கிறேன்—அவர்களிடம் பெற்று உளவு வேலை செய்கிறாரா என்று அரசு கண்காணிக்குமா? அது மட்டுமல்லாமல் அந்தப் பெரிய நாடு உலக நாடுகளில் உள்ள டெலிபோன்களை எல்லாம் 'டேப்' செய்வதாகவும் செய்தி வருகிறது. அதுபற்றியும் அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் முன்பே பதில் சொல்லி விட்டேன். இதற்குத் தொடர்புள்ள மத்திய அரசும், அதனுடைய அறிவிப்புகளை ஒட்டி, அறிவுரைகளை ஒட்டி மாநில அரசும், இந்த இரண்டு அரசுகளும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அரசுகளின் பார்வையிலிருந்து இந்த நிகழ்ச்சிகள் தப்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரங்கில் இந்தியாவினுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாத்திரத்தை முனைமழுங்க வைக்கும் நோக்கத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் அரசாங்க நடவடிக்கைகளில் சீர்குலைவு ஏற்படுத்துகிற உள்நோக்கத்தோடு நூற்றுக்கணக்கான அன்னிய ஏஜன்சிகள், ஏகாதிபத்திய ஏஜென்சிகள் இந்தியாவிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று மைய அரசு கூட அறிவித்திருக்கிறது. அத்தகைய அன்னிய ஏஜென்சிகள் தமிழ்நாடு அதிகாரிகளோடு தொடர்பு

1986 மே 10]

வைத்திருக்கிறார்களா என்பதைப் பற்றி ஆராய்வதற்கு விசேஷ கண்காணிப்பு நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான கண்காணிப்பு நடவடிக்கைகளை எப்போதுமே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அது வெளியிலே சொல்லி எடுக்கப்படுகிற நடவடிக்கை அல்ல.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அதிகாரிகள் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களில் சந்திக்கவில்லை என்று சொன்னார்கள். அப்படி அனுமதி பெற்றுச் சந்திக்காமல் கள்ளத்தனமாக அல்லது திருட்டுத்தனமாகச் சந்திப்பு நடைபெற்றால், சந்தித்து உரையாடுகிறவர்களுக்குத் தண்டனை உண்டா? அது தேசக் குற்றமா? அப்படிச் சந்திப்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும் ஒருசில அரசாங்க அதிகாரிகள் ஓய்வுபெற்ற பிறகு அவர்கள் அரசாங்கத்தினுடைய இரகசியங்களை — காப்புப் பிரமாணம் எடுத்துப் பதவியேற்ற பிறகு—வெளியிலே சொல்கிறார்கள் என்றால் அது குற்றமாகாதா? ஆகவே அரசாங்க அதிகாரிகள் அப்படிப்பட்டக் கருத்துக்களைச் சொல்வது தடை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் சந்திக்கவே இல்லை என்று நான் பதில் கூறவில்லை. சந்திப்பதாகத் தகவல் இல்லை என்று தெரிவித்து விட்டு அரசாங்க அலுவல்கள் தொடர்பாக தேவைப்படும்போது சந்திப்பார்கள் என்றும் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த விவரங்களையொட்டி அவர்களிடத்தில் ஏதாவது தகவல்கள் இருக்குமேயானால் அரசாங்கத்திற்குத் தந்தால் அரசாங்கம் ஏற்கனவே தெரிந்து கொண்டிருக்கிற செய்திகளைவிட, தகவல்களைவிட புதியதகவல்களாக அவைஇருக்குமானால் அவற்றின்மீது தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். அப்படிச் சந்திக்கிற அதிகாரிகள் எல்லாம் இந்த நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்காகத்தான் சந்திக்கிறார்கள் என்கிற முடிவிற்கு வந்துவிடக்கூடாது. ஆகவே யாருடைய அனுமதியோடு சந்திக்கிறார்கள், எதற்காகச் சந்திக்கிறார்கள் என்பதையெல்லாம் அதிகாரிகள் வெளியே சொல்லிவிட்டு சந்திப்பதில்லை. சந்திப்பது என்பதே ஒருவேளை இராஜதந்திரமாகக் கூட இருக்கக் கூடும். ஆகவே இதில் பல பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. இவற்றையெல்லாம் வெளியே விவாதித்து இதில் முடிவு காண முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் நம்பிக்கைக்குரிய சரியான தகவல் ஏதாவது ஆதாரத்தோடு இருந்தால் அரசாங்கத்தினிடத்தில் தெரிவிக்கலாம்.

[1986 மே 10

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற அதிகாரிகள், உயர்தர அதிகாரிகள் தமிழக அரசுக்கு மட்டுமே பொறுப்பானவர்கள். அப்படியிருக்க வெளிநாட்டுத் தூதுவர்களை அவர்கள் சந்திக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அல்லது சந்திப்பது என்ற முறையில் அல்லது பார்ட்டி அல்லது பல்வேறு விழாக்கள் என்ற முறையில் அதிகாரிகள் சந்தித்து அதன் மூலமாக பல்வேறு செய்திகள் வெளியே வருவதற்குக் காரணமாக இருக்குமோ என்ற ஐயம் ஏற்பட்டு விட்ட காரணத்தினால் இனிமேல் அப்படிச் சந்திப்பது முறைப்படுத்தப்படுமா என்பதோடு அப்படி சந்திக்கவேண்டிய அவசியம் இருந்தால் ஒன்றிரண்டு அதிகாரிகள் தவிர வேறு அதிகாரிகள் சந்திப்பதற்குத் தடை விதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுத் தூதுவர்கள் என்பவர்கள் நம்முடைய இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் அனுமதியோடு இங்கே வந்து அவர்களுடைய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறவர்கள். ஆகவே அவர்கள் அனைவருமே நம் நாட்டினுடைய எதிரிகள் என்று எண்ணிவிட முடியாது. அப்படி அனுமதிக்கப்பட்டு அவர்கள் அவர்களுடைய நாட்டின் பணிகளை இங்கே நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது அவர்கள் விரும்புகிறபோது அல்லது அவர்கள் நாட்டுத் தொடர்பாகவோ அல்லது நம் நாட்டின் தொடர்பாகவோ சில செய்திகளைப் பரிமாறிக்கொள்ள அல்லது வேறு நடவடிக்கைகள் காரணமாகவோ உயர் அதிகாரிகளை அவர்கள் சந்திக்க விரும்பக் கூடும். இங்கே அரசாங்கத்தினிடத்தில் சில விதிமுறைகள் இருக்கின்றன. மிகுந்த கட்டுப்பாடுகளோடு அவை கடைபிடிக்கப்படுகின்றன. எந்த அதிகாரி போகலாம், எந்த அதிகாரி விருந்து போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம், எந்தெந்த அளவு உயர் அதிகாரிகள் மற்ற சாதாரண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம் என்பதற்கெல்லாம் கட்டுப்பாடுகள் இருக்கின்றன, விதிகள் இருக்கின்றன. ஆகவே அந்த முறையிலே அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மீறி இரகசியமாகச் சந்திக்கிறார்கள் அல்லது பொதுவாகச் சந்திப்பதைப் போன்று சந்தித்து இரகசியங்களைத் தெரிவிக்கிறார்கள் என்பதெல்லாம் நாமே சில நேரங்களில் கற்பனையில் உருவாக்கிக் கொள்கிற சூழ்நிலையாகவும் இருக்கக் கூடும். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் இங்கே நாம் அனுமதித்து ஒரு நாட்டினுடைய தூதுவராக இருக்கிறவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையைத் தராமல் அவர்களைச் சந்திப்பதே தவறு, சந்திப்பதே ஒரு குற்றம் என்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலாது. அப்படிக் குற்றச் செய்கைகளில் ஈடுபடுகிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். அப்படி ஏதாவது தகுந்த ஆதாரத்தோடு செய்திகள் இருந்தால் அரசாங்கத்தினிடம் தெரிவித்தால் தக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

1986 மே 10]

தமிழ் அரசு பத்திரிகையில் விளம்பரங்கள்

723—(*வினா எண் 8716)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'தமிழ் அரசு' பத்திரிகையில் அரசுத்துறை, அரசுத் துறைச் சார்பு நிறுவனங்களுடைய டெண்டர்களை வெளியிட அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 'தமிழரசு' இதழ்களில் அரசுத்துறை அரசுத்துறைச் சார்பு நிறுவனங்களுடைய டெண்டர் விளம்பரங்களை வெளியிடும் கருத்து அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இப்போது இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இதைப் பரிசீலனைக்கு எடுக்கும்போது தமிழ்அரசு பத்திரிகை அதிகம் விற்பனை ஆவதற்கும், வருவாய் வருவதற்கும் இது ஒரு சிறந்த முறையாக இருக்குமென்று கருதப்படுவதால், அதை விரைந்து அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் இப்போது தமிழ் அரசு எத்தனைப் பிரதிகள் மாதம் இருமுறை விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 'இப்போது இல்லை' என்று பதில் சொன்னதற்குக் காரணமே, முன்னால் பரிசீலிக்கப்பட்டு, நடைமுறையில் பல சிக்கல்கள் எழுந்த காரணத்தால் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே அன்றைக்கு உள்ள சூழ்நிலையையொட்டி, இந்தப் பிரச்னை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். இன்றைய சூழ்நிலையில் தமிழ் அரசு மாதம் இரு முறை வெளியிடப்படுகின்ற ஏடு. டெண்டர், விளம்பரம் போன்ற அரசின் அறிவிப்புகள் வெளியிடுகின்ற நேரத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே நாள் குறிப்பிட்டு, அதற்குள்ளே விவரங்கள் வந்தாக வேண்டும். அப்படி டெண்டர்கள் வந்தாக வேண்டும் என்று விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அந்தத் தேதிக்குள் வெளியிட இந்தப் பத்திரிகை வெளியிடும் தேதிக்கு ஒத்து வராத சூழ்நிலை இருக்கிறது. மேலும் சில நேரங்களில் விளம்பரங்கள் நாட்டிலுள்ள எல்லோருக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் தெரிய வேண்டுமென்ற நிலை இருக்கிறது. சில விளம்பரங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காக, அந்தந்த

மாவட்டங்களில் வெளியிடப்படுகின்ற நாளேடுகளில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. சில விளம்பரங்கள், நீதி மன்றங்களின் தீர்ப்புகளை ஒட்டி, ஒரு தமிழ் நாளேடு, ஒரு ஆங்கில நாளேடு ஆகியவற்றில் வெளியிடப்படுகின்றன. ஆகவே, இதிலே பல சிக்கல்கள் இருந்த காரணத்தால்தான், முன்பு அப்படி ஒரு முடிவு எடுக்கப்பெற்று, நடைமுறையில் சங்கடங்கள் ஏற்பட்டதால், 1972 ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த அரசு நடைமுறை சாத்தியமற்றது என்று முடிவு எடுத்திருக்கிறது. ஆகவேதான், 'இப்போது இல்லை' என்று தெரிவித்திருக்கிறேன். எதிர்காலத்தில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற பரீட்சைகளின் முடிவுகள் எல்லாம் வெளியிடுவதற்குத் தமிழ் அரசு பத்திரிகையைப் பயன்படுத்த முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் அரசு முடிவெடுக்காத ஒரு சூழ்நிலையில், 'இப்போது இல்லை' என்று பதிலளித்திருக்கிறேன்.

திரு. ஏ.எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறை, அரசுத் துறை சார்பு நிறுவனங்களுடைய டெண்டர் விளம்பரங்களை வெளியிடும் பத்திரிகைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதேனும் அடிப்படை முறைகள் இருக்கின்றனவா? எந்த அடிப்படையில் இந்தப் பத்திரிகைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தமிழ் அரசு பத்திரிகையைப் பற்றியது. எனவே, இதுகுறித்து தனியாக கேள்வி கேட்டால், அதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்துப் பதில் சொல்ல முடியும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அரசு பத்திரிகையின் சர்குலேஷன் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் கேட்டார்கள். தமிழ் அரசுப் பத்திரிகை எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றது? அதிலே விலை போடப்பட்டிருக்கின்ற காரணத்தினால் லாபம் வருகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? அதிலே நஷ்டம் வந்தால் அதைச் சரிக்கட்டி, லாப நோக்கத்தோடு நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுமார் 50,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன. தமிழகத்திலே இருக்கின்ற பொது நூலகங்கள், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள், பொது அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பப்படுகின்றன. இன்னும் சில நகரங்களில் ஏஜண்டுகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

1986 மே 10]

தமிழ் அரசு இதழ் என்பது லாப நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற இதழ் அல்ல. நம் அரசின் திட்டங்களை, கொள்கைகளை, செயல்களை மக்களுக்குத் தெளிவாக, முறையாக தெரிவிப்பதற்காக இந்த இதழ் பயன்படுத்தப்படுகின்றது. அரசுத் துறை விளம்பரங்களை தமிழ் அரசு பத்திரிகைக்குக் கொடுப்பது என்பது, இந்தக் கையிலே இருப்பதை அந்தக் கைக்கு கொடுப்பது போன்று இருக்குமே தவிர, இதனால் லாபம் பெறவோ, நஷ்டத்தை ஈடுகட்டவோ முடியாது. தனியார்களின் விளம்பரங்களை வெளியிடுவதால் லாபம் வருமே தவிர, அரசுத் துறையின் ஒரு துறையின் விளம்பரத்தை, மற்றொரு துறைக்குக் கொடுப்பதால், அதிலே லாபம் வந்து விடாது. இன்றைக்கு 50,000 இதழ்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றன. அதிலே என்ன லாபம், நஷ்டம் என்ற கணக்கைப் பார்ப்பதற்கு அரசு முன்வரவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அரசு பத்திரிகையில் இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகள், சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்கள், கேள்வி நேரத்தின் போது வெளியிடப்படுகிற மக்களுக்குத் தேவையான முக்கிய தகவல் போன்ற கருத்துக்களை வெளியிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அரசு இதழ் என்பது மாதத்திற்கு 2 முறை வெளியிடப்படுகிற இதழ். அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு பக்கங்கள் தான் நாம் வெளியிட்டு வருகிறோம். அதிலே முக்கியமாக சட்டமன்றத்திலே, அரசின் சார்பிலே தெரிவிக்கின்ற செய்திகள், திட்டங்கள், உரைகள், முக்கியமானவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து வெளியிட்டுக் கொண்டு வருகிறோம். அரசுத் துறைகளினுடைய பணிகளினுடைய திட்டங்கள், மக்களுக்கு அறிவிக்கின்ற திட்டங்கள், நிறைவேற்றுகிற திட்டங்கள், பணிகள் பற்றியும் அதிலே வெளியிட்டுக் கொண்டு வருகிறோம். அதை ஒரு வறண்ட ஏடாக மக்கள் எண்ணிவிடக் கூடாதே என்பதற்காக நல்ல சுவை உள்ள தமிழ் இலக்கியக், கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு வருகிறோம். இல்லையானால் அரசு வெளியிடுகிற இதழ் என்று பார்த்த உடனே தூக்கி போட்டுவிடக் கூடாது. ஆகவே இந்தச் சூழ்நிலைகளில், சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இதிலே வெளியிடுவது என்றால், நாள்தோறும் பத்திரிகையிலே வந்துவிட்டதற்குப் பிறகு, அந்தந்தப் பத்திரிகைகளுடைய சுவைக்கு ஏற்றவாறு, தரத்திற்கு ஏற்றவாறு, வெளியிட்டதற்குப் பிறகு, பழைய கஞ்சியை, சூடு ஆறிப்போன கஞ்சியை, இன்னும் சொல்லப்போனால், புளித்துப் போன கஞ்சியை ஒரு மாதம் கழித்து தமிழ் அரசு இதழில் வெளியிட்டால் அது அவ்வளவு சுவையாக இருக்காது, அதற்கு வரவேற்பும் இருக்காது.

[1986 மே 10

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாத இதழ்கள், தின இதழ்களை நாம் சந்தித்துக்கொண்டு இருக்கிறோம். தமிழ் அரசு இதழை தின இதழாக வெளியிடும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆபத்தான யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கும் தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : பெருமைமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு லைப்ரரிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் தமிழ் அரசு இதழ் செல்வதாகச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு, புரட்சித் தலைவருடைய நல்ல திட்டங்களைச் சொல்லுகின்ற இந்தத் தமிழ் அரசு பத்திரிகை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அடைவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா? அப்படிப் போகிறபோது, ஊராட்சிகளிடமிருந்து எப்படிப் பணம் வசூல் செய்வது என்ற பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். எனவே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலமாக அவற்றை வசூல் செய்ய முடியும். எனவே அந்த வகையில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு இந்தத் தமிழ் அரசு செல்ல அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் அனைத்திற்கும் தமிழ் அரசு இதழ் அனுப்பப்படுகிறது என்று நான் கருதுகிறேன். நான் இந்தத் தகவலைச் சரி செய்து கொண்டு, அநேகமாக இந்த 50 ஆயிரம் பிரதிகளில் பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் அனுப்பப்படுகின்றன. அப்படி ஒருவேளை விடுபட்டு இருக்குமானால், அந்த முயற்சியை நிறைவாக நடத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அரசு பத்திரிகையில் அதனுடைய சுவை குன்றாத அளவிற்கு அரசியல் தலைவர்களுடைய கட்டுரைகள் எல்லாம் வெளியிடப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே அந்தப் பத்திரிகையிலே சுவை மிக்க கட்டுரைகளாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுதுகின்ற கட்டுரைகள் வெளியிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் சுவை தருகின்ற வகையில் இலக்கியச் சுவையோடு, அறிவுச் சுவையோடு கட்டுரைகளை கவிதைகளை யார் எழுதினாலும், அதைப் பயனுள்ளதாக அரசு கருதினால் வெளியிடும்.

1986 மே 10]

கண்ணதாசன் நினைவு மண்டபம்.

கு.கா.வி. எண் 12 (*வினா எண் 9362)—திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவியரசு கண்ணதாசன் நினைவாக அவர் பிறந்த ஊரில் அரசின் சார்பில் நினைவு மண்டபம் அமைக்கும் பணி துவங்கிவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், கண்ணதாசனின் பொன் விழா கொண்டாடப்படும் 24—6—1986-க்குள் நினைவு மண்டபம் திறக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கவியரசு கண்ணதாசன் நினைவாக காரைக்குடியில் மணி மண்டபம் ஒன்று அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) கவியரசு கண்ணதாசன் பொன்விழா கொண்டாடப்படும் 24—6—1986-க்குள் நினைவு மண்டபம் திறக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காரச் சென்னையில் கடற்கரை ஓரத்தில், பாரதியாருக்கும், பாரதிதாசனுக்கும் சிலை வைத்து இருப்பதைப் போன்று மறைந்த கவியரசு, அரசவைக் கவிஞராக இருந்த கண்ணதாசன் அவர்களுக்கும் சிலை அமைக்க அரசு முன் வருமா? ஆம் எனில், எப்போது சிலை அமைக்கப்படும்?

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 21,75,000 ரூபாய் செலவில், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள முக்கியமான நகரமாக விளங்குகின்ற காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் அவர்களுடைய நினைவு மண்டபம், அதையொட்டி, ஒரு (நூலகம், மக்கள் கூடுகின்ற ஒரு பொது அரங்கம் போன்ற ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு அரசு திட்டமிட்டு பரிசீலித்து வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய நினைவுச்சின்னம் அமைக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறபோது இங்கே ஒரு சிலை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். சிலை வைப்பதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் போன்று கண்ணதாசனிடத்திலே மிகுந்த அக்கறை கொண்ட நண்பர்களெல்லாம் முயற்சித்து அவர்கள் ஒரு சிலையை உருவாக்கித் தந்தால் அரசு சென்னையில் ஒரு இடத்தில் வைப்பதுபற்றி பரிசீலிக்கும்.

[1986 மே 10

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கண்ணதாசன் அவர்களுக்கு மிகச் சிறப்பு செய்வதைப்பற்றி அரசு சொன்னதற்கு நான் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். வருகிற ஜூன் மாதம் 17 ஆம் தேதி வாஞ்சிநாதன் பிறந்த 100 ஆவது ஆண்டு நிறைவு ஆகிறது. 100 ஆண்டு நிறைவாகிற காரணத்தாலே, ஜூன் மாதம் 17 ஆம் தேதியை விட்டால் வேறு சிறப்பான இதுபோன்ற ஒரு தேதி கிடையாது. ஆதலினாலே தமிழக அரசு ஏற்கனவே மேற்கொண்டு இருக்கிற சிலை அமைப்பினை அப்போது ஏற்படுத்துமா? மத்திய அரசிடம் வலியுறுத்தி மணியாச்சிக்கு, வாஞ்சி மணியாச்சி என்று பெயர் சூட்டுகிற விழாவையும் செய்யுமா என்பதையும் இதோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்குத் தொடர்பற்ற கேள்வி என்றாலும், ஒரு நினைவுச் சின்னம் அமைக்கின்ற முயற்சி, ஒரு விடுதலை வீரருடைய நினைவுச் சின்னம் அமைக்கின்ற முயற்சி என்ற காரணத்தினாலே, இருக்கிற தகவலை அவைக்குத் தருவது நல்லது என்று கருதுகிறேன். வீரன் வாஞ்சிநாதனுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதற்கான உருவச் சிலை தயாரிக்கப்பட்டு, மேடையெல்லாம் தயாரிக்கப்பட்டு, செங்கோட்டையிலே தயாராக இருக்கிறது. அடுத்த மாதம் அவர்களுடைய பிறந்த நாள் வருகிறபோது, அந்த நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளலாம் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. (குறுக்கீடு) ஏதோ; ஒரு நாள், நினைவு நாளாக இருந்தாலும் சரி, பிறந்த நாளாக இருந்தாலும் சரி, செப்டம்பர் 11 ஆம் தேதி பாரதியாருடைய இறந்த நாளைத்தான் இத்தனை ஆண்டுகளாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்; நினைவுப் படுத்திக் கொண்டிருக்கிறோம். வீரர்களை இறந்த நாளிலேயும் நினைக்கலாம்; பிறந்த நாளிலேயும் நினைக்கலாம். ஆகவே அந்த நினைவு நாளிலே அந்தச் சிலையை, இதற்கென்று அந்த 100 ஆவது ஆண்டு நினைவு விழாவாக வருகின்ற காரணத்தினாலே அதற்குரிய சிறப்போடு தமிழக அரசு அதை நடத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மணியாச்சி ரெயில் சந்திப்புக்கு, அந்தப் பெயர் மாற்ற பரிசீலனை இங்கே நேற்றுகூட சபையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நினைவகத்தை அறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவகத்தைப் போல் நீங்கள் வைக்கவில்லை என்று, விவரம் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவையிலே கேட்டார்கள். அதிலே பதில் அளிப்பதற்கு எனக்கு வாய்ப்புத் தரவில்லை. தந்திருந்தால் கொஞ்சம் தெளிவாகவே பதில் தந்திருக்கக் கூடும். அப்படி அந்த உணர்வோடு இருக்கின்றவர்கள், அந்த மிகச்சிறந்த நினைவுச் சின்னத்தை, அந்த மணியாச்சி ரயில் சந்திப்பை மாவீரன் பெயராலே மாற்ற மற்றவர்கள் முயற்சி எடுத்தால், தமிழக அரசும் அதற்கு உறுதுணையாக இருக்கும்.

1986 மே 10]

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஏறக்குறைய 21 லட்சம் ரூபாய் செலவிலே மணி மண்டபம் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு எங்களுடைய அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதோடு இங்கே என்னைப் போன்றவர்கள் சிலை அமைக்க, செய்து கொடுக்க முன் வருவார்களானால், இங்கே சென்னையிலே சிலை வைப்பதற்கு இடம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்கும் நன்றி. நான் அமைச்சர் அவர்களுடைய வாயிலாக அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம், சிலையை சென்னையிலுள்ள கடற்கரையிலே வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அத்தோடு பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகு அந்த வரிசையிலே வைத்துப் போற்றப்படும் கவிஞரிலே கண்ணதாசனும் ஒருவர். அவரை அரசவைக் கவிஞராகப் பெருமைப் படுத்தியதும், இந்த அரசுக்கு அந்தப் பெருமை சாரும். அவர்களுடைய சிறப்பு இயல்புகளையும், வாழ்க்கை வரலாற்றையும் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா? ஆம் எனில், வருகின்ற கல்வி ஆண்டிலேயே இதை நடைமுறைப் படுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் சிலையை செய்வதற்கான முடிவு எடுத்து, சிலையை உருவாக்கித் தந்ததற்குப் பிறகு எங்கே வைக்கலாம் என்பதைப்பற்றி அரசு முடிவு எடுக்கும். அதை காமராசர் சாலையிலே, நம்முடைய பீச் ரோட்டிலேதான் வைக்க முடியுமா என்பது எல்லாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. அதற்கு இப்போதே உறுதி தர முடியாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலை வைக்க வேண்டுமென்று விரும்புகின்ற அந்த விருப்பத்தை அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதை நிறைவேற்றும். பாட புத்தகங்களிலே சேர்க்க இயலுமா என்பதைப்பற்றி தனியாக ஒரு கேள்வியை அவர்கள் போட்டால் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விரிவாக பதில் அளிக்க இயலும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கவிஞர் கண்ணதாசனுக்கு நினைவு ஆலயம் வைப்பது பற்றி பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படும் என்று சொன்னார்கள்; மகிழ்ச்சி, ஆனால் இதுபோன்று சென்ற ஆண்டிலே, கொள்கைக் குறிப்பிலே சொல்லும்போது கண்ணதாசனுக்கும், திருப்பூர் குமரனுக்கும் நினைவு ஆலயம் அமைப்பதாக எழுதி இருந்தது. இதற்குத்தனி கேள்வி போட வேண்டுமென்று சொல்லி விடாமல், திருப்பூர் குமரனுக்கு நினைவு ஆலயம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதா? அது எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 மே 10

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைக்குறிப்பில் சொன்னவாறு திருப்பூர் குமரனுக்கும் நினைவு மண்டபம் எழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதைத்தான் இப்போது நான் பதிலாகச் சொல்ல முடியும். கேட்ட கேள்வி கவிஞர் கண்ணதாசன் அவர்களைப் பற்றியது. ஆகவே, அந்தக் குறிப்புகள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. கேள்வி நேரத்தில் ஒரு அமைச்சர் எந்தக்மூலக் கேள்வி கேட்கப்படுகிறதோ அதன் தொடர்பான விவரங்களைத் தான் வைத்துக் கொள்ள முடியும். அதனால் தான் சில நேரங்களிலே தனிக்கேள்வி போடுங்கள் என்று சொல்லுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் குமரனைப் பற்றி கவலைப்படுகிறார்கள். ஏன் என்றால், நீண்டகாலமாக மறந்து விட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தான் இப்படி தியாகிகளைப் பற்றி, தேசத் தலைவர்களைப் பற்றி, அறிஞர்களைப் பற்றி நினைவுபடுத்துகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. (மேசையைத்தட்டும் ஒலி) ஆகவே, அந்தப் புண்ணியத்தாலே இன்றைக்கு திருப்பூர் குமரனை நினைவுபடுத்தியதற்கு நன்றி. தனியாகக் கேள்வி போட்டால் உறுப்பினருடைய மனம் குளிருகிற வகையில் மகிழ்கிற வகையில் விரிவான பதில் சொல்ல முடியும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பற்றி தவறாகப் பேசவில்லை, உங்கள்மேல் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. பெயரைக் கூட சொல்லக்கூடாதா ?

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குத்தான் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டும் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் தன்னிலை விளக்கம் எல்லாம் தர முடியாது. தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறேன் என்று சொல்கிறார் (குறுக்கீடு) இப்படி என்னை இங்கே பேச அனுமதிக்கவில்லை என்றால் நான் இங்கே இருப்பதில் பிரயோசனம் இல்லை. ஆகவே, நான் வெளியேறுகிறேன்.

(திரு. ஏ. எஸ். ரவீந்திரன் வெளிநடப்பு செய்தார்.)

1986 மே 10]

உயர்நிலைப் பள்ளிகளில் பரத நாட்டியம் சிலம்புப் பயிற்றுவித்தல்

724* (வினா எண். 2718)—திரு. க. சோலைராசு மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொன்மை வாய்ந்த ''பரத நாட்டியம்'' தமிழர்களது வீர வீளையாட்டான சிலம்பு (குச்சி விளையாட்டு) போன்றவைகளை, பயிற்றுவிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் பரத நாட்டியம், சிலம்பு போன்றவைகளைக் கற்பிக்க உத்தேசம் இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய கலாசாரத்தை, பெருமைகளை, வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற வண்ணம் இருக்கிற பரதம் இன்றைக்கு உயர்குடி மக்களிடத்திலே மட்டுமே இருக்கிற ஒரு பழக்கமாக இருக்கிறது. எனவே, இந்தப் பாரம்பரியம் மிக்க பரத நாட்டியத்தைப் பள்ளிகளில் கற்றுத் தரவேண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையில் எதிர்காலத்திலே கற்றுத்தருகிற உத்தேசமும் அவர்களுக்கு இந்தச் சிலம்பு என்கிற வீர விளையாட்டு கிராம மக்களுக்காக இருக்கிற இந்த விளையாட்டை அனைத்துத் தரப்பு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் பாதுகாப்பு முறையிலும் அது வருகிற காரணத்தாலும் எதிர்காலத்திலே பரதம், குச்சி விளையாட்டு இவைகளை பள்ளிகளிலே மாணவ-மாணவியர்களுக்குக் கற்றுத் தருகிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே பரத நாட்டியம், சிலம்பு போன்றவைகளைக் கற்பிக்கின்ற உத்தேசம் இல்லை என்றுதான் நான் விடையாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால், மேல்நிலைப் பள்ளிகளிலே பிளஸ் 2 வகுப்புகளில் மாணவிகள் பரத நாட்டியத்தைத் தொழில் பிரிவில் சேர்த்து படிக்க நாம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து இருக்கிறோம். ஆனால் அதிலே மாணவிகள் சேர்ந்து படிப்பது இல்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. ஏதாவது பள்ளியிலே போதுமான மாணவிகள் முன்வந்து நாங்கள் அந்தத் தொழில் பிரிவில் பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி முன்வந்தால் அங்கே பரத நாட்டியம் சொல்லித் தருவதற்கு ஏற்பாடு செய்யலாம். சிலம்பு விளையாட்டு என்பது அவரவர்கள் பழகிக்கொள்ள வேண்டியது தான். அதைப் பாடத் திட்டத்திலே சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. போன்ற பரீட்சைகளில் முதல் மார்க், இரண்டாவது மார்க் வாங்குகிறவர்களுக்குத் தினத் தந்தி போன்ற பத்திரிகைகளில் எல்லாம் அந்த மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பரிசுத் தொகை எல்லாம் கொடுக்கிறார்கள். முன்னாள் சபாநாயகர் பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்கள் இருக்கும்போது சடுகுடு விளையாட்டை ஊக்குவித்தார்கள். அதேபோல் தமிழ்நாடு அளவிலும் எந்த மாணவர்கள் நல்ல முறையில் சடுகுடு விளையாடுகிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுக்கும் வகையில் அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களை அரசு அறிவுறுத்துமா ?

அது மட்டும் அல்ல, பெண்கள் இப்போது சடுகுடு விளையாடுவதை விட்டுவிட்டார்கள். சடுகுடு விளையாட்டை விளையாடினால் பெண்களுக்கு உடம்புக்கு ரொம்பவும் நல்லது. ஆகவே, பணக்கார குடும்பம் என்ற படத்தில் சரோஜாதேவி அவர்கள் சடுகுடு, சடுகுடு, சடுகுடு என்று பிரமாதமாக விளையாடினார்கள். அந்தப் படத்தைப் பள்ளிகளில் குழந்தைகளுக்குப் போட்டுக் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்./

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டுப் பள்ளிகளிலே சொல்லித் தரப்படுகிறது. மாணவ, மாணவியர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

நலிந்த தமிழ்ப் புலவர்களுக்கும் உதவித்தொகை

725—(*வினா எண். 6091)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழைத் தமிழ் புலவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) உதவித் தொகையைக் கூட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1984–85 நிதி யாண்டு வரையில் 214 நலிந்த தமிழறிஞர்கள் பயன்பெற்றனர்.

(ஆ) இல்லை.

1986 மே 10]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு எந்த அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது ? தற்போது வழங்கப்படுகின்ற உதவித் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ரூ. 100 தரப்பட்டது. இப்போது அதை உயர்த்தி ரூ. 250 ஆகத் தந்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9–50)

திருமதி. பா. வளர்மதி : தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களை ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் சிறப்பு ஊழியர்களாக நியமித்து அங்கு தமிழைக் கற்றுத் தருவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இங்கே தமிழ் அறிஞர்களாக வறுமையில் வாடுகின்ற புலவர்களுக்கு 58 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்கின்ற அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. பள்ளிகளில் பாடம் சொல்லித் தருவதற்கு நல்ல இளைஞர்கள் நிறைய பேர்கள், புலவர்கள் இருக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி.

726—(*வினா எண் 6571)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் கல்வி மான்யம் பெறும் தனியார் பள்ளிகள், தாங்கள் நடத்தும் பாடத் திட்டங்களில் 75 சதவீதம் தமிழ் பயிற்சி மொழி வகுப்புகள் நடத்த வேண்டும் என்று உத்தரவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழ் பயிற்று மொழி என்பதைக் கொள்கையாகக் கொண்ட இந்த அரசினுடைய கல்வி மானியத்தைப் பெறுகின்ற தனியார்ப் பள்ளிகளில் தமிழ்ப் பயிற்று மொழி முறை இல்லாமல் இருப்பதால், தமிழ்ப் பயிற்று மொழி இல்லாத பள்ளிகளுக்கு அரசு மானியத்தைக் கொடுக்காது என்று உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கிறது. அதுபோன்று சிறுபான்மை மொழியும் பயிற்று மொழியாக இருக்கின்றது. ஆகவே தமிழ் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில் மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில், தமிழைப் பாட மொழியாக எடுத்துப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழக அரசின் கல்வி மானியத்தைப் பெறுவதற்கு தனியார் பள்ளிகளில் எவ்வளவு சதவீதம் தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஏதாவது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பயிற்று மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்பது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முடிவு. புதியதாக யாருக்கும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக நடத்துவதற்கு நாம் அனுமதி தருவதில்லை. அப்படி விரும்புகின்றவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைக்க வேண்டுமென்றால், அவர்கள் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளாக, அரசினுடைய உதவி இல்லாத பள்ளிகளாக நடத்திக் கொண்டிருக்க வேண்டும்.

முதியோர் கல்வித் திட்டம்.

727—(*வினா எண் 2048)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதியோர் கல்வித் திட்டத்தில் பயன் அடைவோர் எத்தனை பேர்?

(ஆ) தமிழகத்தில் எத்தனை முதியோர்க் கல்வி மையங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 6,93,168 பேர்கள்.

(ஆ) 22,122 மையங்கள்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வியை கிராமப்புறங்களில் கற்றுத் தருகின்ற முறை சென்னை போன்ற நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கப்படுமா என்பதையும், இதிலே எவ்வளவு ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் என்று வருகின்றபோது மையத்திற்கு ஒருவர் இருப்பார். ஆக 22,122 மையங்களில் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். நகரங்களிலேயும் இதைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் தமிழக அரசிற்கு இருக்கிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், அல்லது தொண்டு நிறுவனங்கள் போன்றவை நகர்ப்புறப் பகுதிகளில் இந்த சேவையைச் செய்யலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் எந்தத் துறையின் மூலமாக அல்லது எந்த அதிகாரியின் மூலமாக இந்த மையங்களை ஒன்று சேர்த்து அமைக்கின்ற முயற்சிகள் நடைபெறுகின்றன, யாரைத் தொடர்பு கொண்டால், இந்த மையங்கள் அமைக்கப் படும் என்கின்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் என்ற அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

728—(*வினா எண் 9129)—**திரு. எப். எம். இராசரத்தினம் மற்றும் திரு. டி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாக பணி புரிகின்றவர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த ஒரு சமூகத் தொண்டு புரிகிற அவர்களை எதிர்காலத்திலாவது நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களாக தமிழகத்தில் எத்தனை பேர் பணி புரிகிறார்கள், எவ்வளவு வயது வந்தோர் சென்ற ஆண்டில் பயன் பெற்றார்கள், இவ்வாண்டு எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்பதையும் எந்த அடிப்படையில் மேற்பார்வையாளர்களாகப் பணிக்கு

அமர்த்தப்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் எவ்வளவு சம்பள விகிதம் பெற்றுக் கொள்கிறார்கள், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசீய வயது வந்தோர் கல்வித் திட்டம் தற்காலிகமானது. ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டம் நீட்டிக்கப்படுகிறது. ஆகவே, மேற்பார்வையாளர்கள் பணிக் காலமும் தற்காலிகமாக உள்ளது. திட்டம் ஒரு சுற்று முடிந்த பிறகு, மேற்பார்வையாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். திட்டம் நீட்டிக்கப்படும்போது, மீண்டும் துவங்கும்போது, மேற்பார்வையாளர்கள் கடந்த காலத்தில் பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் நியமிக்கப்படுகின்றனர். தற்போது மத்திய அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் கிராமீய செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்திற்கு 270 மேற்பார்வையாளர்களும், மாநில அரசு செலவில் நடத்தப்படும் மையங்களை மேற்பார்வையிட 363 மேற்பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மைய அரசின் திட்டத்தில் பணி புரிகின்றவர்களுக்கு ரூ.510 பிளஸ் ரூ.150 பயணப்படியும், மாநிலத் திட்டத்தில் பணி புரியும் மேற்பார்வையாளர்களுக்கு ரூ. 600 ப்ளஸ் ரூ.75 பயணப் படியும் அளிக்கப்படுகிறது. தங்களுக்கு ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக பயன் அடைவோர் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதல் கேள்விக்குப் பதிலாக அதை நான் சொன்னேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 6 இலட்சத்து 93 ஆயிரத்து 168 பேர்கள் பயன் அடைகிறார்கள்.

திரு. இரா. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாகப் பணி புரிபவர்களை நிரந்தர ஆசிரியர்களுக்கான தேர்வு செய்யும்போது முன்னுரிமை அளித்து அவர்கள் தேர்வு செய்யப்படுவார்களா? தேர்வு செய்யப்படுகிறபோது, வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாக இருந்த காலங்கள் அவர்களுக்கு வரைமுறைப்படுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே பணியாற்றுகிறவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதில் ஒரு நியாயம் இருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

1986 மே 10]

பழனி சித்த மருத்துவக் கல்லூரி.

729 (*வினா எண். 7007)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை வருகிற கல்வியாண்டில் கூடுதல் ஆக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் சித்த மருத்துவ பட்டதாரிகள் எவ்வளவு பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்? அதோடு, தமிழகத்தில் புதிதாக சித்த மருத்துவக் கல்லூரி துவங்கும் திட்டம் உள்ளதா? தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற 'எய்ட்ஸ்' வியாதிக்கு இந்தச் சித்த மருத்துவத்தின் மூலமாக மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி ஏதாவது குறிப்பு அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் சித்த மருத்துவப் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் இன்னும் வேலைவாய்ப்புக்கள் இருந்தும்கூட, நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை. ஆகவே, அதிகாரபூர்வமாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கு வேலைவாய்ப்பு கேட்டு யாருக்கும் மறுக்கப்படவில்லை. அடுத்தபடியாக இப்போது பழனியிலே ஒரு சித்த மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டுவதற்கான குறிப்புக்கள் நம்மிடத்திலேஇருக்கின்றன. ஆகவே, பழனியில் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டப்பட இருக்கிறது. அந்த சித்த மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சித்த மருத்துவக் கல்லூரியை நாம் ஏற்படுத்த இருக்கிறோம். மேற்படி கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கென ரூ. 60 லட்சம் செலவில் பகுதி-2 திட்டமாக இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அரசுக்கு னுப்பியுள்ளார். ஆனால் இத்திட்டத்திற்கு நிதித் துறை ஒப்புக் கொள்ளாததால் இந்தத் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மருத்துவக் கல்லூரியைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது துவக்கியிருக்கிறோம். எய்ட்ஸ் நோயைப் பொறுத்த வரையில் சித்த மருத்துவத்தில் மருந்து இருக்கிறது என்று அதிகார பூர்வமாக நமக்கு எந்தத் தகவலும் வரவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெரும் பீதியையும், பெரும் பயத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேஷ பயிற்சி பெறுவதற்கு சென்னை டாக்டர்கள் குழு ஒன்று அமெரிக்காவிற்குச் செல்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் அமைச்சரின் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் பழமையும் தொன்மையும் பொருந்திய சித்த வைத்தியத்தில் அந்த எய்ட்ஸ் நோயைக் கண்டிப்பாகக் களைய முடியும் என்று சித்த டாக்டர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, நம்முடைய டாக்டர்கள் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு முன்னால் நல்ல திறமையும் அனுபவமும் மிக்க சித்த டாக்டர்களை அழைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு அதன் மூலமாக இந்த நோயைக் களைவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னது மாதிரி, அதிகார பூர்வமாக சில மருந்துகள் இருக்கின்றன என்பது பற்றி நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் யாராவது சித்த மருத்துவர்கள் இப்படிப்பட்ட மருந்துகள் இருக்கின்றன என்றுகூற முன்வருவார்களேயானால் அதை நம்முடைய இலாகாவின் மூலமாக அல்லது எக்ஸ்பார்ட்ஸ் மூலமாக, சிறப்பு டாக்டர்கள் மூலமாக ஆராய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பழனியிலே உள்ள சித்தர்களிலே பெரும்பாலானவர்கள் திருவண்ணாமலையிலேயிருந்துதான் சென்றிருக்கிறார்கள். இன்றைக்கும் திருவண்ணாமலையில் உள்ள காட்டுப் பகுதிகளிலே சித்தர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மஞ்சள் காமாலை நோய் கண்டவர்கள் திருவண்ணாமலைக்கு வந்து 3 தினங்கள் தங்கியிருந்து சித்த மருத்துவர்களால் பச்சிலை கொடுத்து, வைத்தியம் செய்யப்பட்டு நல்ல முறையில் பலன்பெற்றுச் சென்றிருக்கிறார்கள். உயர் அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள் வந்திருக்கிறார்கள். எனவே, சித்தர்கள் வாழுகின்ற அந்தத்

1986 மே 10]

திருவண்ணாமலையிலே சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படியில்லையென்றால் இனிமேலாவது அமைச்சரவர்கள் அதைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டா எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரி நல்லமுறையில் இயங்க ஆரம்பித்தபிறகுதான் இன்னொரு சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது பற்றி யோசிக்க வேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிக்கு அடுத்த நான்காண்டுகளில் இவ்வளவு தொகை செலவழிக்கக் கருதியுள்ளோம். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது நாம் ஒரு பில்டிங்கை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு இடத்திலே நாம் அமைத்திருக்கிறோம். ஆனால் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக நிரந்தரமாக ஒரு கட்டிடம் தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் வார்டுகள் தேவை. ஆகவே, இவைகளை அமைத்து இந்த சித்த மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தியதற்குப் பிறகு அடுத்து இன்னொரு சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்கலாம்.

அடுத்து, திருவண்ணாமலையில் சித்தர்கள் இருக்கிறார்கள். என்று சொன்னார்கள். அந்தச் சித்தர்களை நிச்சயமாக பழனி சித்த மருத்துவக் கல்லூரி பயன்படுத்திக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் டையலைசர் கருவி.

730. (*வினா எண். 8912)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் டையலைசர் கருவிகள் உள்ளனவா?

(ஆ) 'டையலைசர்' பிரிவு அனைத்துக் கல்லூரிகளிலும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ, ஆ மற்றும் இ) தமிழகத்தில் உள்ள கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மட்டும் டையலைசர் கருவிகளும் டையலைசர் பிரிவுகளும் உள்ளன—

1. சென்னை, அரசு பொது மருத்துவமனை.
2. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை.

3. சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை.

4. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை.

5. மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனை.

6. தஞ்சை. அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை.

7. கோவை. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏழு இடங்களில் மட்டும் டையலைசர் கருவிகளும், அதைச் சார்ந்த வசதிகளும் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். மற்றும் மீதம் இருக்கின்ற மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைப் பயிற்றுவிக்கின்ற இடங்களில் டையலைசர் பிரிவுகளை அமைப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா? ஆம் என்றால் எப்பொழுது அங்கே ஆரம்பிக்கப்படும்? அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, Next stage of programme என்று சொல்ல வேண்டுமென்றால் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கின்ற மருத்துவ மனை, திருநெல்வேலி மருத்துவமனை. இப்படி மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிற மருத்துவ மனைகளிலே முதலிலே ஆரம்பிக்கப்பட்ட பிறகு, படிப்படியாக மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலே கொண்டு வர நாம் திட்டமிட்டிருக்கிறோம். நிதிநிலைமைக்கேற்ப அவை எல்லாம் நடைமுறைப்படுத்தப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப அவை விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏழை, எளிய மக்கள் சுலபமான வகையிலே, குறைந்த செலவிலே, மருத்துவ வசதிகளைப் பெற வேண்டுமென்று திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசு, அதற்கான ஒரு நல்ல திட்டத்தை, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அத்தியாவசியமான, தேவையானதை உடனடியாகச் செய்யுமானால், ஏழை, எளிய மக்கள் அதிலே மருத்துவ வசதியைப் பெற முடியும். இப்பொழுது தனியார் மருத்துவ மனைகளிலே டையலைசர் பொருத்தி வைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு முறை டையலைஸ் செய்ய வேண்டுமென்றால், ஏறத்தாழ, ரூ. 2,000, ரூ. 3,000 ஆகிறது. ஆகவே, ஏழை மக்கள் மருத்துவ வசதி பெற முடியவில்லை. இதைக் கருத்தில் கொண்டு, அதிக நிதி ஒதுக்கம் செய்து, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நிதிநிலைக்கேற்ப என்று மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்து, நிச்சயமாக நியாயமான கருத்து என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆகவேதான் படிப்படியாக நாம் அதை விஸ்தரித்துக்கொண்டு வந்தோம். இந்த விஸ்தரிப்புக்கு நமக்கு ஏராளமாகச் செலவாகியிருக்கிறது. இன்னும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன உணர்வினுடைய அடிப்படையிலே, நிதி இலாகாவோடு தொடர்பு கொண்டு, நிதி அமைச்சரிடம் தொடர்பு கொண்டு நாம் ஆணை பெற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, டையலைசர்ஸ் இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே எழுப்பியபொழுது நிதி நிலைக்கேற்ப அமைப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அமைக்கப்பட்ட டையலைசர்களும் முழுமையாக, எல்லா நாட்களிலும், எல்லா வாரங்களிலும், எல்லா மாதங்களிலும் பயன்படுத்துகிற நிலைமை இல்லையென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைச் சுலபமாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் நோயாளிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அது மட்டுமல்ல; டையலைஸ் முடித்து, கிட்னி டிரான்ஸ்ப்ளான்டேஷன் வரும்போது, நம்முடைய அரசு மருத்துவ மனைகளில் போதுமான வசதி இல்லையென்பதையும் கணக்கில் எடுத்து, அதற்குள்ள ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவ அவர்களே, இந்த டையலைசர் பொறுத்த வரையிலே, பல நேரங்களில் பழுதுபார்க்க வேண்டியிருக்கும் ; மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட கேள்வி எழுப்புவார்கள் என்று தெரிந்துதான் சில விவரங்களைச் சேகரித்து வைத்துள்ளேன். ஒட்டுமொத்தமாக நான் சொல்லியிருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலே 15 டையலைசர்கள் இருக்கின்றன. அதிலே 12 செயல்பட்டு வருகின்றன ; 3 செயல்படவில்லை. அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை டெக்னீஷியன்கள் வந்து ரிப்பேர் செய்து விடுவார்கள். சாதாரணமாக, உலகமெங்கும் 10 டையலைசர் இருந்தால் 1 வேலை செய்யாது ; 10 Per cent of the Dialysers will not work in any part of the world. பெரிய மருத்துவ மனைகளில் கூட அப்படித்தான் இருக்கும். நாம் உடனடியாக ரிப்பேர் செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இந்த 15 டையலைசர்களும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. They are being put to full use

அது மட்டுமல்ல, கிட்னி டிரான்ஸ்பினான்டேஷன் பொறுத்த வரையிலும் நல்ல முறையில் நடத்த வேண்டுமென்றால், நல்ல டீம் அமைய வேண்டும். அதற்கு Nephrologist, Urologist எல்லாம் டீமில் வேண்டும். சில நேரங்களிலே, ஒரு Nephrologist ஒரு Urologist போடுகிறோம், சீனியாரிட்டி பார்க்கிறோம், போடுகிறோம். அரசாங்கத்திலே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையைச் சொல்கிறேன். அப்பொழுது, ஒருவருக்கொருவர் நன்றாகப் புரிந்துகொண்டு, பணியாற்ற வேண்டும். அந்த நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காக, நானே அக்கறை எடுத்துக் கொண்டு, நல்ல டீமாகப் போட முயற்சி எடுக்கிறேன். சென்னையிலே, ஸ்டான்லியிலே ஒரு டீம் அமைத்திருக்கிறோம்; அதே மாதிரி, இராயப்பேட்டையிலே ஒரு டீம் அமைத்திருக்கிறோம். ஸ்டான்லியைப் பொறுத்த வரையிலே, அண்மையிலே கூட, ஒரு மாணவனுக்குச் சிறுநீரகம் மாற்றப்பட்டு, பயன் அடைந்துள்ளதாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

(முற்பகல் 10–10)

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலும் கோவை மருத்துவக் கல்லூரியிலும் இந்த டையலைசருக்குத் தேவையான டையலைசிங் ஃப்ளூயிட் இல்லாத காரணத்தாலே, சரிவர அவை இயங்கவில்லை என்ற குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஃப்ளூயிட் சரியாக இல்லாத காரணத்தினால் சில நாட்கள் இயங்கவில்லை என்ற தகவல் வந்து உடனடியாக சரிசெய்திருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் எந்த ஆண்டு இந்த டயலைசர் கருவி பொருத்தப்பட்டது, அதன் மூலம் பயன் பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு? தற்போது இயங்கவில்லை என்ற குறிப்பு வந்திருக்கிறது. அது தவறான கருத்துதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையில் A Dialiser has been purchased in May 1984. The Dean has stated that a proposal for the construction of a separate water tank has been sent to the Government. அங்கே தண்ணீர் பிரச்சினை ஏற்பட்டது. உடனடியாக கவனித்து, இப்போது டயலைசர் இயங்கிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1986 மே 10]

திரு. சு. பாலன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தொழிலாளர்களுக்கு அயினாவரத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை இருக்கிறது. இப்படிப்பட்ட டயலைசரை ஒரு டீடம் அமைத்து தொழிலாளர்கள் நன்மை பெறுவதற்கு, அமைச்சர் அவர்கள் உடனடியாக வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நல்ல யோசனை. அது கவனிக்கப்படும்.

தாரமங்கலத்தில் விசைத்தறிக் கூடம்

731—(*வினா எண். 7515)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் விசைத்தறிக் கூடம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்குத் தான் விசைத் தறிகளை ஒதுக்க வேண்டும், தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையை மத்திய அரசு இதற்கு முன்னாலே வைத்திருந்தது. புதிய ஜவுளிக் கொள்கையை அறிவித்த பிறகு அந்தக் கொள்கையிலே என்ன மாற்றங்களைச் செய்திருக்கிறது என்ற அந்த விவரத்தையும், அது குறித்து நம்முடைய அரசாங்கம் என்ன கொள்கைகளை வலியுறுத்தி வருகிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிய ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்படுவதற்கு முன்பு விசைத் தறிகளைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரலாம் என்ற நிபந்தனையின் கீழ் மத்திய அரசு 700 விசைத் தறிகளுக்கு தமிழ்நாட்டிற்கு அனுமதி கொடுத்தது 14 இடங்களில் அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய ஜவுளிக் கொள்கை பிரகாரம் விசைத்தறிகளை தனியார்களே நிச்சயமாக எவ்வளவு வேண்டுமானாலும் துவக்கலாம் என்று

சொல்லியிருப்பதால் அதற்கு ஏதும் தடை இப்போது இல்லை. தமிழக அரசு மேலும் விசைத் தறியை விஸ்தரிக்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அனுமதி பெற்று தனியார்கள் விசைத் தறிகளை வைத்துக் கொள்ளலாம் என்று இப்போது புதிய ஜவுளிக் கொள்கை அடிப்படையிலே கொள்கை உருவாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதற்கு ஏதாவது சீலிங் உண்டா ? ஆண்டுக்கு இவ்வளவு ஒதுக்க வேண்டும் என்று அளவுகோல் (டார்கெட்) உண்டா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அதிகார பூர்வமாக சுமார் 1 இலட்சம் விசைத் தறிகளும், அதிகார பூர்வமில்லாத விசைத் தறிகள் 1 இலட்சமும் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதனால் இந்த விசைத் தறியையும் மாற்றி சாதாரண சிறு தொழில் போல், ஸ்மால் இண்டஸ்ட்ரி போல் கருதி மாநில அரசு இந்த விசைத் தறிகளை பதிவு செய்யவும், அதை கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறது.

திருவிடைமருதூரில் நூற்பாலை.

732 (*வினா எண். 8353)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் ஒரு நூற்பாலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

பரிசுச் சீட்டிற்கு விற்பனை வரி.

733 (*வினா எண். 6205)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரிசுச் சீட்டுகளுக்குப் போடப்பட்ட வரி மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

1986 மே 10]

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: பரிசுச் சீட்டு மீது விதிக்கப்பட்ட விற்பனை வரி மூலம், 1984–85 நிதியாண்டில் (ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை) மொத்தம் ரூ. 84,32,983 வருமானமாக கிடைத்துள்ளது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமே இந்த வரி விதிப்பு செய்துள்ளதால் பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலத்தில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகள், சில்லரை விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள், போன்றவற்றை கேரளாவிலே துவங்கிவிட்டனர். எனவே வரியை மேலும் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக 28–1–1984-ல் இதற்கு விற்பனை வரி முறை அமலுக்கு வந்தபோது இது 20 விழுக்காடு ஒருமுனை வரி என்று இருந்தது. 17–3–1986 முதல் 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இப்போது அண்டை மாநிலமான கர்நாடக மாநில அரசுகூட இந்த ஆண்டு 10 விழுக்காடு ஒரு முனை வரி விதித்து இருக்கிறது. கேரள அரசும் கூட பரிசுச் சீட்டுக்கு வரி விதிக்கிற கருத்துருவை ஆராய்ந்துவருகிறது.

அண்டை மாநிலமான ஆந்திராவில் இந்த வரியினை விதிக்கும்படி நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே நம்முடைய அண்டை மாநில பரிசுச் சீட்டுக்கள் மூலமாக வருகிற வரி ஏய்ப்பைத் தடுக்க இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மேலும் தமிழகத்தினுடைய பரிசுச் சீட்டுகளுக்கு விதிக்கப்பட்ட வரியைக் குறைப்பதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழ்நாடு பரிசுச் சீட்டில் போலிப் பரிசுச் சீட்டுகள் விற்கப்பட்டன என்று சொல்லி பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணத்தால் அந்த விற்பனை குறைந்து வருமானம் சற்று குறைந்திருக்கின்றது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி போடுகிற அதிகாரம்தான் வணிக வரித்துறைக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நிதித்துறையைச் சார்ந்தது. எனவே தனிக்கேள்வி போட்டால் விவரம் கிடைக்கும்.

[1986 மே 10

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வெளி மாநிலச் சீட்டுக்கள் எவ்வளவு விற்பனை ஆகின்றன? நம்முடைய மாநிலத்திலே இருந்து எவ்வளவு தொகை வெளியே போகின்றது? அதேபோல் நமது சீட்டுகள் வெளி மாநிலங்களில் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்ற கணக்கு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா.வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தமிழ்நாட்டுப் பரிசுச் சீட்டுக்கள் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றன, எவ்வளவு வெளி மாநிலச் சீட்டுக்கள் இங்கே விற்பனை ஆகின்றன என்ற விவரம் இல்லை. ஆனால் தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலமாக 51 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் வருமானமும், வெளி மாநிலப் பரிசுச் சுட்டுக்களின் மூலமாக 32,60,058 ரூபாய் வருமானமும் தமிழக அரசுக்கு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குதிரைப் பந்தயத்தை ஒழித்ததுபோல் வருகிற ஆண்டில் சாராயக் கடைகளை ஒழிக்க இருப்பது போல் இந்த பரிசுச் சீட்டுக்களை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா, வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழித் தீவனத்திற்கு வரிச் சலுகை

734—(*வினா எண். 8573)—திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழித் தீவனத்திற்கு 5 சத விகிதம் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (அ) மற்றும் (ஆ) 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்படி 17–3–1986 முதல்தான் கோழித் தீவனத்திற்கு 5 சதவிகிதத்திலிருந்து 2 சத விகிதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது. கோழித் தீவனத்திற்கு முழுவதும் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1986 மே 10]

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1986—87 நிதிநிலை அறிக்கையில் 5 சதவீதத்தை 2 சதவீதமாகக் குறைத்து இருப்பதாக இங்கே சொன்னார்கள். கோழி வளர்ப்பது குடிசைத்தொழிலாகத் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்த 2 சதவீத வரியையும் அறவே நீக்கி அந்த வகையில் வரி விலக்கு அளிக்க அரசின் பரிசீலனை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி வளர்ப்பது என்பது குடிசைத்தொழில் என்ற அடிப்படையில்தான் 5 விழுக்காடு பலமுனை விற்பனை வரி என்று இருந்தது. 4—3—1984 முதல் 5 விழுக்காடு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் 17—3—1986-ல் அது 2 சதவீத ஒருமுனை விற்பனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை மேலும் குறைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோல் பொருட்களுக்குத் தனி தொழிற்பேட்டை

735—(*வினா எண் 6184)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு ஏற்றுமதிக்காக தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் தனி தொழிற்பேட்டையை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10—20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பரவாயில்லை. மாதவரத்தில் இதே மாதிரி ஒரு தோல் தொழிற் பேட்டை இருக்கிறது; அங்கு எத்தனை தொழிற்கூடங்கள் இருக்கின்றன? அந்தத் தொழிற்கூடங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதனால் கிடைக்கக் கூடிய அன்னியச் செலாவணி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்திலே தோல் பொருள்களுக்கான தனி தொழிற்பேட்டை சிறப்பாக நடந்து வருகிறது. அங்கே அரசினுடைய 24 தொழிற்கூடங்களும், சிட்கோ கட்டித் தந்த 10 தொழிற் கூடங்களும், ஆக 34 தொழிற் கூடங்கள் அங்கே இருக்கின்றன.

அதேபோல டான்சியினுடைய நிர்வாகத்திலிருந்த பெரம்பூர், மாதவரம், பல்லாவரம் மற்றும் விண்ணமங்கலம் ஆகிய 4 தொழிற்கூடங்களை டால்கோவுக்கு மாற்றியிருக்கிறோம். அப்படி மாற்றப்பட்ட தோல் தொழிற்கூடங்களில் எந்தவிதமான பொருள்களும் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படவில்லை. ஆனாலும்கூட வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் டான்சி நிர்வாகத்தில் இருந்த தொழிற் கூடத்திலிருந்து தோல் பொருள்களை 1983–84 இல் கனடா, இத்தாலி, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும், 1984–85 இல் இத்தாலி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவிற்கும், 1985–86 இல் தென் கொரியா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் சுமார் 1 கோடி 10 லட்சம் ரூபாய் அளவிற்குத் தோல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழிற்கூடங்களினால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அது மட்டும் அல்லாமல் இப்போது புதியதாக தோல் வளர்ச்சி மையம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறோம். அங்கு என்னென்ன பொருள்களைத் தயாரிக்கிறார்கள். இப்போது தோல் வளர்ச்சி மையம் இருப்பதால் லாபம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா அல்லது நட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறார்களா? எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டால்கோ பொறுத்த மட்டில், இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிறுவனம். ஆரம்பத்திலே அது நட்டத்திலே இயங்கினாலும் கூட எதிர்காலத்தில் ஓரளவிற்கு லாபத்தை ஈட்டும் என்று எதிர் பார்க்கப் பெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனி தொகுதியில் தொழிற்கூடங்கள்

736—(*வினா எண் 7829)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனித் தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளதால் 15 நபர்களுக்குக் குறையாமல் தொழில் நடத்த முன் வருபவர்களுக்குத் தொழில்கூடங்களை அரசே அமைத்துக் கொடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) தொழில் நடத்த தகுதிவாய்ந்த தொழில் முனைவோர்கள் முன் வந்தால் சிட்கோ நிறுவனம் தொழில் கூடங்களை கட்டிக் கொடுக்க முன் வரும்.

(ஆ) 15 தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் இப் பகுதியில் வங்கி அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தின் நிதி உதவியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட தொழில் திட் டங்களுடன் விண்ணப்பித்தால் நிச்சயமாக தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம் பற்றி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) பரிசீலனை செய்து நடவடிக்கை மேற் கொள்ளும்.

அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடி

737—(*வினா எண் 5140)— திரு. அ. மலர்மன்னன்: மாண்பு மிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள அமராவதி சிறப்பு அங்காடி கடந்த சில ஆண்டு காலமாக நட்டத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) நட்டத்தில் இயங்கிவரும் இப் பண்டகசாலையை சீரமைக்க வியாபார எல்லைகள் சீரமைத்தல், சரக்கு குறைவை வசூலித்தல், பழைய சரக்குகளைத் துரிதமாக விற்றல், புதிய மூன்று கிளைகளைத்திறந்து கட்டுப்பாடு அல்லாதபொருட்களின் விற்பனையை அதிகரித்து வியாபாரத்தைப் பெருக்குதல், சிப் பந்தி, சாதல்வார், வட்டி செலவினங்களைக் குறைத்து சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அமராவதி சிறப்பு அங்காடி நட்டத்தில் நடப்பதாக ஒத்துக் கொண்டு, அதை எப்படி எல்லாம் சீர்செய்து குறைபாடுகளைக் களைய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புதிய தாக கிளைகள் திறக்க இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கிளைகளின் மூலமாகத்தான் நட்டமே

ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அங்கே திருவரங்கன் கூட்டுறவு சொஸைட்டி என்ற பெயரால் ஒரு சங்கம் பல லட்சம் ரூபாய் வசூல் செய்து கொண்டு, அதைக் கூட்டுறவுத் துறையிடம் கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அத்தோடு மட்டுமல்லாமல் 6 லட்சம் ரூபாயைக் கட்ட வேண்டும் என்றுதாக்கீதுஅனுப்பப்பட்டதால், அங்கிருக்கிற அதிகாரிமாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே இதுபோன்ற குற்றச்சாட்டுக்களைக் குறித்து பல நோட்டீஸ்கள், விளம்பரங்கள் எல்லாம் திருச்சி நகரத்தில்செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்த முறைகேடுகளை குறைப்பதற்கும், அங்கேயிருக்கிற உபரிபொருள்களை, வீணாகிற பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்காமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். 7 ரூபாய், 8 ரூபாய் விற்கிற சாக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினாவை சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. அ. மலர்மன்னன்: சாக்கை ஒருரூபாய்க்கு விற்கிறார்கள். கூட்டுறவுத் துறை என்பதால் இதுபோன்ற நிலைமையெல்லாம் இருக்கிறது. அதனால் தான் அந்தக் கூட்டுறவுச் சிறப்பங்காடி நட்டத்தில் இயங்குகிறது. நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 20 லட்சம் ரூபாய் பெறுமான மூள்ள ஒரு பொருளை, ஜிப்சை, அங்கேயிருந்து வெளியே கொண்டு வந்தபோது பிடித்திருக்கிறார்கள். பிடித்த தொழிலாளி இன்றையதினம் வெளியேற்றப்பட்டிருக்கிறார். திருடுகிற தொழிலாளர்களை திருட விடாமல் அங்கேயிருக்கிற தொழிற் சங்கம் நடவடிக்கையெடுத்தால், அங்கேயிருக்கிற தனி அதிகாரி, அவர்களை வேலைநீக்கம் செய்வதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிறையகேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். திருச்சியில் அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடியில் தனி அதிகாரி மாற்றப்படவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு ஏதோ அங்காடியைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். திருச்சி அமராவதி இல்லை. ஆகவே தனியாக எழுதிக் கொடுத்தால் அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கத் தயாராக இருக்கிறோம்.

அடுத்து நாள்பட்ட சரக்கை விற்பதற்காக தனியாக கமிட்டி அமைத்து இருக்கிறோம். ஏனென்றால் அதிகாரிகள் நாள்பட்ட சரக்குகளை விற்கிற நேரத்தில் டெபிசிட் எல்லாம் அவர்கள் தலையில் விழுந்துவிடும் என்று அதிகாரிகள் நீண்ட நாட்களாக இதிலே நடவடிக்கையெடுக்காமல் இருந்தார்கள். இப்போது

1986 மே 10]

கடந்த 20 நாட்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் அதை ஆய்வு செய்து அந்த சரக்குகளை விற்பதற்குத் தனியாக குழு அமைத்து இதனை விற்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்து ஜிப்ஸ் பற்றி சொல்லியிருக்கிறார்கள். பிடித்த பிறகு அதிகாரிகள் நடவடிக்கையெடுக்கவில்லை என்றால், அதைத் தனியாக எழுதிக்கொடுத்தால் உடனடியாக விசாரணை செய்வோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஸ்டாக் டெபிசிட் இருப்பதை பார்ப்பதற்கு தமிழகம் முழுவதும் நடவடிக்கையெடுத்துக் கொண்டிருக்கிறோம். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே 3½ கோடி ரூபாய்க்கு ஸ்டாக் டெபிசிட் இருப்பதை ஆய்விலே கண்டு பிடித்திருக்கிறோம். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் யார் ஸ்டாக் டெபிசிட் வைத்திருந்தாலும் அவர்களை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: தலைவர் அவர்களே, நான் கேள்வியில் கடந்த சில ஆண்டுகளாக என்று கேட்டிருக்கிறேன். ஆகவே அங்கேயிருந்து நடராசன் என்ற தனி அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார். அங்கேயிருக்கிற ஊழல்களைக் கண்டு பிடித்த காரணத்தால் தான் அவர் மாற்றப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, உட்காருங்கள்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, சென்னையில் சிந்தாமணி சிறப்பங்காடி போன்ற பல சிறப்பங்காடிகள் நஷ்டத்தில் இயங்குகின்றன. முறைகேடுகள் மலிந்திருக்கின்றன. ஆகவே இவைகளைப் பரிசீலனை செய்து ஒழுங்குபடுத்த விசாரணை கமிட்டி நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தவறுகள் நடக்கிறபோது தட்டிக் கேட்கிற வகையில் இப்போது ஸ்குவாட் அமைத்திருக்கிறோம். முன்பு ஸ்குவாட் கிடையாது. இப்போது ஒவ்வொரு ஜே. ஆர்.-ம் மாதத்திற்கு மூன்று தடவைகள் ஸ்குவாட் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் கேட்கிற நேரத்தில் அந்த மாவட்டத்தில் இருக்கிற அத்தனை வெகிகிள்ஸ்-ம் ஜே. ஆர்-க்கு கொடுக்கவேண்டும். எந்த தேதியில் கேட்கிறாரோ அந்த தேதியில் அவருக்கு வெகிகிள்ஸ் கொடுக்க வேண்டும். அவர்கள் யார் யாரை இஷ்டப்பட்டு அழைக்கிறார்களோ அந்த அதிகாரிகள் போய் ஒரு பெரிய அளவிலே செக் பண்ண சொல்லி ஆர்டர் போட்டு கடந்த இரண்டு மாதங்களாக செக் செய்து கொண்டிருக்கிறார்கள். நிறைய பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். தனியாக கேள்வி கேட்டால் எந்தெந்த ஊரிலே செக் பண்ணியிருக்கிறோம், யார் யார் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். டி.யூ.சி.எஸ், போன்ற பெரிய நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் 1,500 ஊழியர்

களுக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களில் 10 பேர் தவறு செய்து கொண்டிருப்பார்கள். அவர்களை பிடித்துக் கொண்டிருக்கிறோம், சஸ்பெண்ட் செய்து கொண்டிருக்கிறோம். தொடர்ச்சியாக நாம் முடிந்த அளவிற்கு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. எம். அண்ணாதாசன் : தலைவர் அவர்களே, திருச்சியில் இருக்கிற அமராவதியில் நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனுடைய முன்னேற்றத்தை குறித்து பலவழிகளை மேற்கொள்ளவிருக்கிறோம் என்றுசொன்னார்கள். அமராவதியில் பழைய சரக்குகள் இருந்த காரணத்தாலும், அதை வாங்குகிற காரணத்தாலும் அங்கே நஷ்டத்திலே ஓடுகிறது என்று தெரிய வருகிறது. எனவே இதைக் கருதி, விவசாயிகளிடம் அவ்வப்போது உற்பத்தி ஆகிய பொருட்களை இந்த அமராவதிக்கு என்று கொள்முதல் செய்து, அதைப் பொது மக்களுக்கு விற்பனைக்கு அமுல்படுத்தினால், அந்த நஷ்டத்திலிருந்து நிவர்த்தி ஆவதற்கு வழி ஏற்படும். இதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா? திருச்சியில் உள்ள அமராவதிதான் நஷ்டத்திலே ஓடுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சிந்தாமணி சிறப்பாக நடந்து கொண்டு இருக்கிறது. அது லாபத்தில் ஓடுகிறதா அல்லது நஷ்டத்தில் ஓடுகிறதா என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திருச்சியிலே இரண்டு கூட்டுறவு சிறப்பங்காடிகள் இருக்கின்றன. ஒன்று அமராவதி. இன்னொன்று சிந்தாமணி. சிந்தாமணி சிறப்பாக லாபத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. காரணம் சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட். திருச்சியிலே இருக்கிற காரணத்தால், வியாபாரத்தை லாபகரமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்னொன்று நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதற்குக் காரணம் கட்டுப்பாடு உள்ள பொருட்களைத்தான் அதிகமாக அங்கே விற்கிறார்களே தவிர, கட்டுப்பாடற்ற பொருட்களை அங்கே விற்பதற்கு அங்கே இருக்கிற ஊழியர்கள் தயாராக இல்லை. அதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போன்று எந்தெந்தப் பகுதியிலே சரக்குகள் உற்பத்தி ஆகிறதோ அங்கே போய் வாங்க வேண்டும் என்ற உணர்வை சொல்லியிருக்கிறோம். இப்போது ஜாயிண்ட் பர்சேஸ் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய நடைமுறையை மாற்றவேண்டுமென்று சொல்லி, ஆந்திராவாக இருந்தாலும் சரி, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியிலே, உதாரணமாக புளி என்று சொன்னால், தும்கூர் என்று சொன்னால்—அங்கே போய் குறைந்த விலைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்த இடத்திலேதான் வாங்க

வேண்டும் என்ற உணர்வைச் சொல்லி இருக்கிறோம். தமிழகத்திலே அதைப்போன்று விவசாயிகளிடத்திலே அதிகமான பொருட்களை வாங்கவேண்டும் என்று நிச்சயமாக அந்த நடவடிக்கையை எடுக்கிற நேரத்திலே லாபகரமாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற கிராமப்பகுதிகளில் இருக்கிற நியாய விலைக் கடைகளில் ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற விதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே இதை இரண்டாகப் பிரித்து, ஒரே அதிகாரியை வைத்து நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா? அதாவது ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்று இருப்பதை மாற்றி 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று பிரித்து, ஒரே சேல்ஸ்மேனை இரண்டு கடைகளுக்கும் வைத்து நடத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல், ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை வைத்துநடத்தவேண்டும் என்று இப்போது உத்திரவு இருக்கிறது. பகுதி நேரக் கடைகளையும் அந்தந்தப் பகுதியில் உள்ள நிலைமைகளைப் பொறுத்து. ஆற்றுப் பாலமோ அல்லது ரயில் பாலமோ இருக்கும் என்று சொன்னால் அங்கே எல்லாம் பகுதி நேரக் கடைகளாக பிரித்து நடத்தச் சொல்லி அரசாங்கத்திலேயிருந்து உத்திரவிட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே உள்ள அமராவதி சிறப்பங்காடி நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொல்லப்படுகிறது. பெரிய நகரத்திலே இருக்கிற அந்த அமராவதி நஷ்டத்திலே ஓடுவதாக சொல்வது வியப்பாக இருக்கிறது. சாதாரணமாக உள்ள பல சரக்குக் கடைகள் கூட மிக லாபகரமாக ஓடுகிற நேரத்தில் இதில் மட்டும் நஷ்டம் ஏன் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. இதற்குக் காரணம், உளுந்தம் பருப்பு என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட இடத்திலேதான் வாங்கவேண்டும் என்றும், கடலை எண்ணெய் என்றால் ஒரு குறிப்பிட்ட இடத்திலேதான் வாங்கவேண்டும் என்றும், நல்லெண்ணெய் என்றால் குறிப்பிட்ட இடத்திலேதான் வாங்கவேண்டும் என்றும் உத்திரவு இடுவதாக அறிகிறேன். எனவே இதையெல்லாம் நிறுத்தி, மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதாசன் அவர்கள் சொன்னதைப் போல, விவசாயிகளிடத்தில் இருந்து கொள்முதல் செய்தால் நஷ்டம் வராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நஷ்டத்தில் ஓடுவதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை

எடுக்கப்பட்டு உள்ளதா? அதைப்போல அமைச்சர் அவர்கள், சுய சேவைப் பிரிவு என்று அடிக்கடி திறப்புவிழா செய்து கொண்டு வருகிறார்கள். எனவே சுய சேவைப் பிரிவு என்றால் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * அரசாங்கத்திலே வைத்து நாம் நடத்துகிறபோது, சரியான கணக்கை வைத்து, சரியான முறையிலே வரி ஏய்ப்பு இல்லாமல் செய்கிற நேரத்திலேதான் இதைச் செய்ய முடிகிறது. இன்றைக்கு நாங்கள் சரக்குகளை வாங்குகிற நேரத்தில் ஜாயின்ட் பர்சேசஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி வைத்திருக்கிறோம். இப்போது 1 வருட காலமாக அந்த நடைமுறையை மாற்றி எங்கெங்கே உற்பத்தி ஆகிறதோ அந்தப் பகுதியிலேதான் வாங்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.

அதைப்போலவே இந்த சுய சேவையைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் மக்களுடைய உணர்வுகளுக்கு ஏற்றார்போல், தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற மெம்பர்களுடைய எண்ணத்திற்கு ஏற்றார்போல அவர்களாகவே தேர்வு செய்யக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குவதற்குதான் புதிய முறைகளை நாம் இந்த சுய சர்வீஸ் திட்டத்திலே உண்டாக்கி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்று சொன்ன அந்தப்பகுதி நீக்கப்படுகிறது.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே அமராவதி இல்லை என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சொல்கிறார். இருக்கிறது என்று இன்னொரு உறுப்பினர் சொல்கிறார். அமைச்சர் அவர்கள் அதை வலியுறுத்துகிறார்கள். இப்படித் தவறான தகவலைத் தரலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர் திடீரென்று எழுந்து கொள்ளக்கூடாது; இது கேள்வி நேரம்.

திரு. ஆ. சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூலக் கேள்விக்கு இது சம்பந்தமில்லை; தனிக் கேள்வி போடவும் என்று கூட சொல்லலாம். ஆனால் நான் மதுரை கூட்டுறவுச் சிறப் பங்காடியில் உதவிப் பணியாளனாக இருந்த காரணத்தினால் அவருடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே நாங்களெல்லாம் பணியாற்றுகின்றபோது அதிகப்படியான

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 10]

லாபத்தை ஈட்டித்தந்திருக்கிறோம். ஆனால் தற்போது மதுரை கூட்டுறவு சிறப்பு அங்காடி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். அதனை ஆய்வு செய்து சீர் படுத்த தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் சூப்பர் மார்க்கெட் சிறப்பாக செயல்படுவதற்கு நாங்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காட்டில் நகர வங்கி.

738—(*வினா எண் 8973)—திரு. த. பழனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகரத்தில் நகர வங்கி எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: ஆற்காடு நகரத்தில் புதிய கூட்டுறவு நகர வங்கி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரிசர்வ் வங்கியின் உரிமம் கிடைத்தவுடன் புதிய வங்கி தனது பணியைத் தொடங்கும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கனவே எங்களுக்கு இடப்பட்ட பணியை இந்த நகர வங்கியின் சார்பாக முடித்துக் கொடுத்து ஏறக்குறைய 4 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இன்றுவரை முதல் கூட்டத்திற்கு அவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. முதல் கூட்டத்திற்கு ஏற்பாடு எப்போது நடைபெறும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனி அவர்கள், அரசாங்கம் சொன்னதைவிட அதிகமாக $1\frac{1}{2}$ லட்சத்துக்குபதில், 1 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வசூல் செய்து சிறப்பாகஅந்தப் பணியை செய்து இருக்கின்றார்கள். அந்த உணர்வை அரசாங்கம் புரிந்து இருக்கிறது. அதிகாரிகளிடத்திலே சொல்லி 2 மாதங்களுக்குள்ளாக அந்த வங்கியை அங்கே ஆரம்பிக்கவேண்டுமென்ற உத்தரவினையும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 மே 10

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அந்த 2 மாத காலம் நீட்டிக்கப்படாமல் அந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாக ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி பெற்று ஆற்காடு நகரத்திலே நகர வங்கியை அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலே பெண்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அது ஆரம்பிக்கின்ற நிலை இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். அதை விரைவில் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து நாள் குறிப்பிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான அந்த தனி வங்கியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

கு.கா.வி. எண் 13—(*வினா எண் 9251)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போதுள்ள காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பலவற்றில் அதிகாரிகளே தலைவர் பொறுப்புக்களில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களில் இருக்கிறார்கள்?

(இ) நிர்வாகப் பொறுப்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) தற்சமயம் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 507 சங்கங்களில், 120 சங்கங்களில் மட்டும் ஊராட்சி ஒன்றிய ஆணையூர்கள் தலைவர்களாக இருந்து வருகின்றனர்.

(இ) ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தலைவர்களாக இருக்கும் சங்கங்களில் அலுவல் சார்பற்றவர்களைத் தலைவர்களாக நியமனம் செய்வது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக இப்படி அதிகாரிகள் இந்தச் சங்கங்களுடைய பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிற இந்த நோக்கத்தை செயல்படுத்துகிற வகையில் அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தச் சங்கங்களுடைய பொறுப்புகளை மக்கள் பிரதிநிதிகளிடத்திலே ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களிலே மிக அதிகமாக அரசு அலுவலர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த உணர்வைப் புரிந்துகொண்டு உடனடியாக அந்தச் சங்கங்களிலெல்லாம் பொது மக்களுடைய பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அரசு வேகமாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

காந்தி நகர் பேரூராட்சி வடிகால் வசதித் திட்டம்.

வினா 2143—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, காந்திநகர் பேரூராட்சியில் வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): காட்பாடி தொகுதி, காந்திநகர் பேரூராட்சிக்கு வடிகால் வசதி அமைக்கும் திட்டம் இல்லை.

2—

துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்.

வினா 2712—திரு. க. சோலைராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் கட்டப்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை விரைவில் கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

வருவாய்த்துறையால் உபரி நிலம் என்று கொடுக்கப்பட்ட 4.34 ஏக்கர் நிலத்தில் திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிராம குடும்ப நல மையம் மற்றும் பணியாளர் குடியிருப்புகளுக்கு கட்டிடங்கள் கட்டும் பணி பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலம் அருள்மிகு கரிகிரி வரதராஜபெருமாள் கோயிலுக்குச் சொந்தமானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் வருவாய்த் துறை அலுவலர் நிர்ணயம் செய்யும் தொகைக்கு கோயில் நிர்வாகியிடமிருந்து இந்த நிலத்தை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலத்தை வாங்கியதும் கட்டிட வேலை தொடரப்படும்.

3—

தாம்பரம் தொகுதியில் குற்றவியல் நீதிமன்றம்.

வினா 2764—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1986 மே 10]

4—

நிலக்கோட்டையில் புறவழிச் சாலை.

வினா 2774—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை நகரில் புறவழிச்சாலை (By Pass Road) அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள திட்டம் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இதுவரை இடம் பெறவில்லை.

5—

திண்டுக்கல் காளகத்திஸ்வரர் கோயிலிலுள்ள அபிராமி அம்மன்.

வினா 2837—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் உள்ள காளகத்தீஸ்வரர் ஆலயத்தில் உள்ள அபிராமி அம்மன், முன்பு திண்டுக்கல் மலைக்கோட்டையில் இருந்ததாகச் சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திண்டுக்கல் வட்டம், அருள்மிகு காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள அருள்மிகு அபிராமி அம்மன் சிலாவிக்கரகம் முன்பு திண்டுக்கல் மலைக்கோட்டையில் உள்ள கோயிலில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

(ஆ) தற்போது மலைக்கோட்டையில் உள்ள கோயில் இடிந்து பாழடைந்த நிலையில் உள்ளது. மேலும் மலைக்கோட்டை இந்திய அரசு தோல்பொருள் ஆய்வுத்துறை நிர்

வாகத்தின் கீழ் உள்ளது. இந்த விக்கரகத்தை மலைக்கோட்டையில் பிரதிஷ்டை செய்தால் பூஜை, திருவிழா ஆகியவை நடத்த நிதி வசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, திண்டுக்கல் நகரில் உள்ள அருள்மிகு காளகத்தீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் உள்ள அபிராமி அம்மன் சிலா விக்கிரகத்தை மலைக்கோட்டையில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்ய இயலாத நிலை உள்ளது.

6—

மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம்.

வினா 2925—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் தேங்கி உள்ள வழக்குகளை முடிக்கும் வகையில் இங்கு ஒரு கூடுதல் முதல் வகுப்பு கோர்ட்டு அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

வத்திராயிருப்பு பகுதியில் தேசிய வேலைவாய்ப்பு திட்டப் பணிகள்.

வினா 3135—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்திராயிருப்பு பகுதியில் கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்ட வேலைகள் யாவை?

(ஆ) அதன் மதிப்பு என்ன?

1986 மே 10]

விடை—

1985–86 ஆம் ஆண்டில் வத்திராயிருப்பு பகுதியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப் பட்ட பணிகள் மற்றும் அவற்றின் மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	பணிகளின் விவரம்.	எண்ணிக்கை.	மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1	பாலம் கட்டுதல் ..	1	0.30
2	அரிசி கிடங்கு ..	1	0.90
3	ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள்.	2	1.20
4	பள்ளி சமையல் கட்டடங்கள்	2	0.30
5	சமுதாய நலக் கட்டடங்கள்	3	1.50
6	இணைப்புச் சாலைகள்	3	0.65
7	சரல் பரத்துதல் ..	5	1.50
8	தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகள்.	25	1.65
9	சமுதாயக் காடுகள் ..	6	2.00
	மொத்தம்	48	10.00

8—

அபிவிருத்தி வரிக்கு உட்பட்ட அணைக்கட்டு பாசன நிலங்கள்.

வினா 3185—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது எந்தெந்த அணைக்கட்டு பாசன நிலங்களுக்கு நில அபிவிருத்தி வரி வசூலிக்கப்படுகிறது?

விடை—

ஒரு விவர அறிக்கை** அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது

** 298—304..ம்] பக்கங்களில் இணைப்பாக அச்சிடப். பெற்றுள்ளது.

9—

கொடகனாறு நீர்த்தேக்கத் திட்டம்.

வினா 3357— மாண்புமிகுவேடசந்தூர்திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், கொடகனாறு நீர்த் தேக்கத் திட்டத்திற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இன்னும் நட்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டும்?

(இ) காலதாமதத்திற்கு காரணம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

10—

ஊரப்பட்டி கிராமத்தில் மேல்நிலைக் குடிநீர்த்தொட்டி.

வினா 3407—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி—ஊரப்பட்டி கிராமத்திற்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, ஊரப்பட்டி கிராமத்தில் தற்போது கை பம்புடன் கூடிய 3 ஆழ் துளைக்கிணறுகளின் மூலம் வழங்கப்பட்டு வரும் குடிநீர் இக்குடியிருப்பிற்கு போதுமானதாக உள்ளதால், மேல்நிலைத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

1986 மே 10]

11—

சைதாப்பேட்டை வி.வி. கோவில் தெருவில் தண்ணீர்த் தொட்டியை மாற்றியமைத்தல்.

வினா 3775— திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சைதை வி.வி. கோவில் தெருவில் உள்ள பயன்படாமல் இருக்கின்ற இரும்பினால் ஆன தண்ணீர்த் தொட்டியினை அகற்றி சிமெண்டினால் ஆன மேல்நிலை தண்ணீர் தொட்டியினை அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

12—

ஓட்டப்பிடாரத்தில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி.

வினா 3843— திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) ஓட்டப்பிடாரத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

13—

தாம்பரம் தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி.

வினா 4072—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

14—

தமிழ்நாட்டில் உள்ள சாலைகள்.

வினா 4094—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு நீளம் ரோடு போடப்பட்டுள்ளது ?

(ஆ) அவற்றில் (National Highways) எவ்வளவு மைல்?

(இ) (State Highways) எவ்வளவு மைல் ?

விடை—

(அ) 39,005 கி. மீட்டர்.

(ஆ) 1,884 கி. மீட்டர்.

(இ) 1,852 கி. மீட்டர்.

15—

நெடுஞ்சாலை ஓரங்களிலுள்ள மரங்கள்.

வினா 4177—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள மரங்கள் ஆங்காங்கே வெட்டப்படுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

விடை—

நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள மரங்களை சட்ட விரோதமாக ஆங்காங்கே வெட்டப்படுவதைத் தடுக்க நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையைச் சார்ந்த சாலைத் தொகுதி ஆட்கள், சாலை ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்கள் கண்காணிக்கின்றனர். இவ்வாறு வெட்டப்படுவது கண்டு பிடிக்கப்பட்டால் காவல் துறையின் மூலம் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

பெருந்துறையில் வீட்டுவசதி வாரியப் பணிகள்.

வினா 4188—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) பெருந்துறையில் வீட்டுவசதித்துறையின் மூலம் நடப் பாண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்புகள் ஆய்வில் உள்ளன. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் வீட்டுவசதித் திட்டங்கள் உருவாக்கப்படும்.

17—

பெருந்துறை தொகுதியில் குறைந்தபட்ச கட்டணம் செலுத்திவந்த விவசாயக் கிணறுகள்.

வினா 4201—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதியில் புதிய கட்டணம் அமலுக்கு வருமுன் குறைந்தபட்ச கட்டணம் (minimum charge) செலுத்தி வந்த விவசாயக் கிணறுகள் எத்தனை ?

விடை—

அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை 1,702.

18—

மேலூர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வண்டி.

வினா 4264—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

விநாயகபுரம் விவசாயப் பயிற்சிப்பள்ளி மாணவர்களுக்கு உதவித் தொகை.

வினா 4265—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் விநாயகபுரத்தில் உள்ள விவசாய பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பயிற்சிக்கால உதவித் தொகையை ரூ. 75-லிருந்து ரூ. 150-க்கு உயர்த்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

1986 மே 10]

விடை—

1985–86 ஆம் ஆண்டிலிருந்து விவசாய பள்ளிகளில் பயிற்சி பெறும் எல்லா மாணவர்களுக்கும் ரூ. 100 உதவித் தொகையாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

20—

கலசபாக்கம் ஒன்றியத்திலுள்ள டிராக்டர்கள்.

வினா 4290—திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலும் பழுதுபட்ட நிலையில் உள்ள டிராக்டர்களைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) இவ்வூராட்சி ஒன்றியங்களில் உள்ள பழுதுபட்ட டிராக்டர்கள் பழுதுபார்த்தாலும் உபயோகப்படாது என்று கருதப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுளளது.

21—

குறிச்சியில் வாரியத்தால் கட்டப்படும் வீடுகள்.

வினா 4315—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குறிச்சி ஹவுசிங் யூனிட்டிலுள்ள இனவாரியாக வீட்டின் விலை எவ்வளவு ?

(ஆ) வீடு ஒதுக்கப்பட்டபோது இருந்த விலையை தற்சமயம் அரசு மாற்றியுள்ளதா ?

விடை—

(அ) விலை விவரம்—

(1) குறிச்சி திட்டம்-1:—

(அ) எம்.ஐ.ஜி. வீடுகள் 'ஏ' டைப்—ரூ. 97,000.
(ஆ) எம்.ஐ.ஜி. வீடுகள் 'பி' டைப்—ரூ. 45,000.
(இ) எல்.ஐ.ஜி. வீடுகள் I டைப்—ரூ. 24,100.
(ஈ) எல்.ஐ.ஜி. வீடுகள் II டைப்—ரூ. 22,000.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. குறிச்சி திட்டம்-2 :

(அ) எச்.ஐ.ஜி. வீடுகள் டைப் III—ரூ. 1,18,000

(ஆ) எச்.ஐ.ஜி. வீடுகள் டைப் II—ரூ. 72,000.

(இ) எச்.ஐ.ஜி. வீடுகள் டைப் I—ரூ. 69,000

(ஈ) எம்.ஐ.ஜி. வீடுகள் டைப் III—ரூ. 54,000

(உ) எம்.ஐ.ஜி. வீடுகள் டைப் II—ரூ. 51,000

(ஊ) எம்.ஐ.ஜி. வீடுகள் டைப் I—ரூ. 40,000

(ஆ) இல்லை. இருப்பினும் வீடுகள் குடியிருக்கத் தயாரான நாளிலிருந்து ஒதுக்கீடு செய்யும் நாள் வரையிலான காலத்திற்கான வட்டி வீட்டின் விலையில் சேர்க்கப்படும்.

22—

உசிலம்பட்டி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி.

வினா 4389—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்த அரசிடம் ஏதும் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இவ்வசதி செய்யப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

அரசுப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள்.

வினா 4679—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சுற்றுச் சுவர்கள் எழுப்பவும், 1985–86 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) 7-ஆவது திட்ட வரைவில் இந்த வேலைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

1986 மே 10]

விடை—

(அ) அரசினர் உயர்/மேல் நிலைப்பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட 1985–86-ல் ரூ. 1.50 கோடி தொகை ஒதுக்கப்பட்டு, அதற்காக பள்ளிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன.

(ஆ) தற்போதுள்ள அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டவும், முன்னாள் கழக உயர் நிலைப் பள்ளிக் கட்டடங்களை செப்பனிடவும், ஏழாவது திட்ட வரைவில் ரூ. 2,607 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

24—

ஓமலூரில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி.

வினா 4723—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூரில் அரசு ஊழியர்களுக்கு சலுகை வாடகை அடிப்படையில் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

25—

ஒன்றியங்களில் இயங்கும் தச்சு, கொல்லுப் பட்டறைகள்.

வினா 4783— திரு. ப. ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு, கொல்லுப் பட்டறைகள் ஒன்றியங்களில் இயங்குகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தச்சுப்பட்டறை—128.

கொல்லுப்பட்டறை—51.

26—

ஓட்டல் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் சிறப்புத் திட்டம்.

வினா 4963—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஓட்டல்களில் பணியாற்றும் குறைந்த வருவாய் உடைய தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரும் சிறப்பு திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

27—

காட்டுமன்னார் கோயில்—பிள்ளையார் தாங்கல் இடையே மணல் வாய்க்காலின் குறுக்கே பாலம்.

வினா 5088—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் வட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கும் பிள்ளையார் தாங்கலுக்கும் இடையில் மணல் வாய்க்காலில் குறுக்கே பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது பணி முடிவுபெறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் எடையார்—திருமூலஸ்தானம் சாலை கி.மீ. 2/4-ல் குறுக்கிடும் மணல் வாய்க்காலில் குறுக்கே கட்டப்பட்டு வருகிறது. இப் பால வேலையில் இதுவரை ஒரு மேல்தளம் போடும் பணி முடிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் பெய்த பெரும் மழையின் காரணமாக மற்ற பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. விரைவில் பாலம் கட்டும் பணி முழுவதும் முடிக்கப்பட்டுவிடும்.

28—

காமராஜர் மாவட்டத்தில் வாரிய வீடுகள்.

வினா 5371—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

(அ) காமராஜர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் எத்தனை வீடுகளைக் கட்ட வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதி ஆண்டில் (1985–86) தமிழக அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் விருது நகரில் ரூ. 72 இலட்சம் மதிப்பீட்டில் 72 குடியிருப்புகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் விருதுநகரில் 98.92 ஏக்கர் நிலமும் சிவகாசியில் 151.22 ஏக்கர் நிலமும் மற்றும் சாத்தூரில் 69.25 ஏக்கர் நிலமும் ஆர்ஜிதம் செய்து பிறகு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

29—

சைதை மலேரியா ஒழிப்பு அலுவலகக் கட்டடம்.

வினா 5436—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதை ஜோன்ஸ் சாலையில் உள்ள மலேரியா ஒழிப்பு அலுவலகக் கட்டடத்தை மாற்றி புதியதாக அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

அரசு பழப்பண்ணைகள்.

வினா 5463—திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த அரசு பழப்பண்ணைகள் எவ்வளவு ?

(ஆ) அவைகள் எவ்வளவு ஹெக்டேர் பரப்பளவில் இயங்கி வருகின்றன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 37 அரசு பழப்பண்ணைகள் உள்ளன.

(ஆ) 2,053.29 ஹெக்டேர் பரப்பளவில் அப்பழப்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

31—

ஆலஞ்சோலை ஆறுகாணி ஹைரேஞ்ச் சாலை.

வினா 5540—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா ஆலஞ்சோலை—ஆறுகாணி ஹைரேஞ்ச் ரோடு வேலை நிறுத்தி வைத்துள்ளது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் ரோடு வேலை முடிக்க ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இப்பணி ஆரம்பிக்கப்பட்டபின், இதில் சில இன வேலைகளில் மாறுதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு, அதன் அடிப்படையில் புதிய விலை விவரக் குறியீடு தயாரிக்கப்பட்டது. இதனையொட்டி நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறைக்கும் ஒப்பந்தக்காரர்களுக்குமிடையே துணை உடன்படிக்கை ஏற்படாததால் வேலை நிலுவையில் உள்ளது. ஒப்பந்தக்காரர்களால் துணை உடன்படிக்கை ஏற்கப்பட்டால், வேலை தொடர்ந்து நடைபெறும். இல்லையேல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு வேறு வழிகளில் பணியை உடனடியாகத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

32 —

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு வி.பி. தேயிலை வழங்கல்.

வினா 5715—திரு. கே. உச்சி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் போதுமான அளவு வி.பி. தேயிலை நாற்றுகள் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

1986 மே 10]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குத் தேயிலை நாற்றுகள் போதுமான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழாது.

33—

படந்தாலுமோடு மீன் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீர்.

வினா 5997—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு வட்ட படந்தாலுமோடு என்னுமிடத்திலுள்ள ஓசியானிக் புராடக்ஸ் என்னும் மீன் பதனிடும் தொழிற்சாலையில் இருந்து ஒவ்வொரு நாளும் வெளி வரும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறதா ?

விடை—

இத்தொழிற்சாலை, அதன் கழிவு நீரை சுத்திகரிக்காமல் தொழிற்சாலை வளாகத்திலுள்ள தென்னை மரங்களுக்காக பயன்படுத்துகிறது.

34—

திட்டக்குடி—சின்ன சேலம்—உளுந்தூர்ப்பேட்டை பேருந்துப் பணிகள்.

வினா 6025—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திட்டக்குடியிலிருந்து ஆவட்டி, மங்களூர் வழியாக சின்ன சேலத்திற்கும், பெருமுனை, சிறுமுனை, வேப்பூர் வழியாக உளுந்தூர்ப்பேட்டைக்கும் பஸ் விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

திட்டக்குடியிலிருந்து ஆவட்டி, மங்களூர் வழியாக சின்ன சேலத்திற்கும், திட்டக்குடியிலிருந்து பெருமுனை, சிறுமுனை, வேப்பூர் வழியாக உளுந்தூர்ப்பேட்டைக்கும் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

35—

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி.

வினா 6265—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) 1983–84, 1984–85-ல் தமிழ்நாட்டின் நெல் உற்பத்தி எவ்வளவு ?

(ஆ) அதில் தஞ்சை மாவட்டத்தில் குறுவையில் எவ்வளவு? சம்பா, தாளடியில் எவ்வளவு ?

விடை—

(அ) 1983–84, 1984–85-ல் தமிழ்நாட்டின் நெல் உற்பத்தி—

	நெல் (இலட்சம் மெ. டன்.)
(1) 1983–84	66.72
1984–85	81.63

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தி பின்வருமாறு :—

	(இலட்சம் மெ. டன்.)
(1) குறுவை :—	
1983–84	1.33
1984–85	7.32
(2) சம்பா :—	
1983–84	11.22
1984–85	9.06

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	(இலட்சம் மெ.டன்.)
(3) தாளடி —	
1983–84	1.00
1984–85	6.06

	நெல் (இலட்சம் மெ.டன்.)
மொத்த உற்பத்தி—	
1983–84	13.55
1984–85	22.44

36—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.

வினா 6270—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் மொத்தத் தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு ?

(ஆ) அதில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கியது எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் விவரம் வருமாறு :—

ஆண்டுகள்.	வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை.	அதில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1983–84	5,975.09	2,142.65
1984–85	5,762.54	2,555.89

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

37—

மாவட்டங்களில் வீட்டு சேவை மையத் திட்டம்.

வினா 6387—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மறு வாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ளது போல வீட்டு சேவை மையம் எல்லா மாவட்டங்களிலும் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை—

சென்னையில் உள்ளதுபோல் வீட்டு சேவை மையத் திட்டம், கீழ்க்கண்ட இடங்களில் துவக்க ஆணை வெளியிடப் பட்டுள்ளது :—

1. கோயம்புத்தூர் .. 3 மையங்கள்.

2. மதுரை 3 மையங்கள்.

3. திருச்சிராப்பள்ளி .. 3 மையங்கள்.

4. சேலம் 2 மையங்கள்.

5. வேலூர் 1 மையம்.

38—

தஞ்சை மாவட்ட ஆற்றுப் படுகைகளின் மணல் அகற்றும் திட்டம்.

வினா 6418—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆற்றுப்படுகைகளில் உள்ள மணலை புல்டோசர்கள் மூலம் அகற்ற அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவசாயத்துறையிடமிருந்தும் இயந்திர வட்டத்திலிருந்தும் புல்டோசர் பெற்று தண்ணீர் விடாத காலத்தில் ஆற்றுப்படுகைகளில் உள்ள மணல் அகற்றப்படும்.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

39 —

தொழில் நுணுக்கப் பள்ளியில் பயின்று தேர்வு பெற்றுள்ளவர்களுக்குத் தொழிற் கடன்.

வினா 6678—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் நுணுக்கப் பள்ளிகளில் பயின்று தேர்வு பெற்ற பின் வேலையற்றிருக்கும் தகுதியுள்ள இளைஞர்களுக்கு அவர்கள் தொழில் துவங்க அரசு கடன் உதவி செய்ய திட்டம் உள்ளதா?

விடை :

இல்லை.

40 —

கட்டடத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா 6714—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கட்டட வேலைகள் கட்டட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுமா?

விடை :

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர் கட்டுமான கூட்டுறவுச் சங்கங்களுக்கு (Registered Labour contract Co-operative Socities) பொதுப்பணித் துறைப் பணிகள (நீர்ப்பாசன பணிகள் உட்பட) ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

2. அவ்வாறு பணிகள் ஒப்படைக்கப்படும்போது இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகளை அரசு வழங்கி வருகிறது:—

(1) தனித்திறன் வேண்டா (unskilled) பணிகள், பணியின் மதிப்பு எவ்வளவு இருந்தாலும் இச்சங்கங்களுக்கே ஒப்படைக்கப்பட வேண்டும்.

(2) ரூ. 50,000 வரை மதிப்புள்ள (பொருட்களின் மதிப்பு நீங்கலாக) தனித்திறன் வேண்டப்படும் பணிகள் (skilled works) இச்சங்கங்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும்

இதற்கு மேற்பட்ட மதிப்புள்ள பணிகளையும் இச்சங்கங்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் எடுத்து நிறைவேற்றத் தகுதியுடையவை ஆகும்.

(3) ரூ. 25,000 வரை மதிப்புள்ள தனித்திறன் வேண்டும் மற்றும் தனித்திறன் வேண்டா அனைத்துப் பணிகளையும் (Skilled and unskilled Works) ஒப்பந்தப்புள்ளி கோராமல் துறையின் மதிப்பீட்டில் இச்சங்கங்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

(4) ரூ. 25,000-த்திற்கு மேல் மதிப்புள்ள தனித்திறன் தேவைப்படும் பணிகளை (Skilled Works) இத்தகைய சங்கங்களுக்கு அவை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் வரை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்படைக்க வேண்டும் :—

(1) குறைந்த ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பை விட 5 சதவீதம் கூடுதலாக இருப்பினும் இச்சங்கங்களுக்கே பணிகளை ஒப்படைக்க வேண்டும்.

(2) விலை தரப் பட்டியலுக்கு (Schedule of Rates) மேல் 5 சதவீதம் கூடுதலாக இருப்பினும் பணிகளை இச்சங்கங்களுக்கே ஒப்படைக்க வேண்டும்.

(3) பணிகளை ஒப்படைக்கும் அதிகாரி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடன் கலந்தாலோசித்து சங்கங்களின் தகுதிகள் பற்றி ஆராய்ந்தறிந்த பின்னரே பணிகளை ஒப்படைக்க வேண்டும்.

(4) ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த தொழிலாளர்களின் ஒப்பந்தச் சங்கங்களுக்கும் மேற் குறிப்பிட்ட சலுகைகள் பொருந்தும்.

3. மேற்கூறிய சலுகைகளை சட்டப்படி அளிக்க வேண்டும் என்பதில்லை. எல்லா ஒப்பந்தக்காரர்களின் தகுதிகளும் சமமாக இருக்கும்பொழுது இந்தச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்.

41—

மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

வினா 6733—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன?

1 986 மே 10]

(ஆ) சென்ற ஆண்டில் (1984) வழங்கப்பட்ட உரிமங்கள் எத்தனை?

விடை :

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 794 (எழுநூற்று தொண்ணூற்றி நான்கு) மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் 25 ரீபேக்கர்ஸ் ஆகும்.

(ஆ) சென்ற ஆண்டில் (1984) வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை மொத்தம் 70 (எழுபது) ஆகும்.

42—

திருவில்லிப்புத்தூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

வினா 6771—திரு. ரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரில் 1985 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் சார்பில் எத்தனை வீடுகள் கட்ட அரசு முடிவு செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு தொகையில் அதன் பணி எப்போது முடிவடையும்?

விடை :

(அ) திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்.

வினா 6888—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் எத்தனை?

(ஆ) இதில் எத்தனை சங்கங்கள் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை :

(அ) தற்போது தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் எண்ணிக்கை 1,600 ஆகும்.

(ஆ) இதுவரை 75 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நெசவாளர்களுக்கு 5,710 வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளன. 1985-86 ஆம் நிதி ஆண்டில் இதுவரை 18 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 2,000 வீடுகள் கட்ட முன் வந்துள்ளன.

44—

மண் பரிசோதனை நிலையங்கள்.

வினா 6889—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மண் ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(ஆ) 1984-85 ஆம் ஆண்டு எவ்வளவு பரிசோதனைகள் இங்கு நடத்தப்பட்டன?

(இ) இதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

விடை :

(அ) தமிழ்நாட்டில் 15 மண் பரிசோதனை நிலையங்களும் (Soil Testing Laboratories) 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டு 8.38 இலட்சம் மண் பரிசோதனைகள் இங்கு நடத்தப்பட்டன.

(இ) இதற்கு ரூ. 57.59 இலட்சம் செலவு ஏற்பட்டது.

45—

அழகர்மலை தீர்த்தத் தொட்டிக்கு அருகே பேருந்து நிலையம்.

வினா 6900—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் அழகர்கோயில் மலை மீது இருக்கும் தீர்த்தத் தொட்டிக்கு அருகில் உள்ள பஸ் நிலையத்தினை விரிவுபடுத்த அரசு முன் வருமா?

1986 மே 10]

விடை—

மதுரை மாவட்டம், அழகர்கோவில் மலை மீது அருள் மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தீர்த்தத் தொட்டிக்கு அருகில் பஸ் நிலையம் ஏதும் கிடையாது. அங்கு வெளியூர்களிலிருந்து வரும் பஸ்கள், வேன்கள், கார்கள் நிறுத்தப்படுகின்றன. எனவே, பஸ் நிலையம் அல்லாத தற்காலிகமாக கார்கள் நிறுத்தும் இடத்தை விரிவுபடுத்த செயற் குறிப்பு ஏதுமில்லை.

46—

கைத்தறி பற்றிய மியூசியம்.

வினா 6955—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி பற்றிய மியூசியம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) கைத்தறி பற்றிய மியூசியம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

47—

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் முதலுதவிப் பெட்டிகள்

வினா 7002—திரு. வை. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசு போக்குவரத்துக்களிலும் முதலுதவிப் பெட்டிகள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் மருந்துகள் உள்ளனவா?

விடை—

(அ) ஆம்.

தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் 160 (H)-ன் படி நகர்ப்புற வழித்தடங்களில் செலுத்தப்படும் நகர் பேருந்துகளுக்கு, முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்பட வேண்டாமென்றும், ஆனால் வரையறுக்கப்பட்ட ஓட்டங்களை முடித்து

சென்றடைகின்ற இடங்களிலோ அல்லது பேருந்துதொழிலாளர்கள் தங்குமிடங்களிலோ முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்படவேண்டும் என்றுள்ளதால் நகர்ப்புற பேருந்துகள் சென்றடையும் அனைத்து இடங்களிலும் மற்றும் பேருந்து பராமரிக்கும் பணி மனைகளிலும் மருந்து மற்றும் முதலுதவி உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) உள்ளன.

48—

பொன்மலைக்கு அருகிலுள்ள எரிசாராய ஆலை கழிவு நீர்.

வினா 7077—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாநகர், பொன்மலைக்கு அருகிலுள்ள தனியார் எரிசாராய ஆலையின் கழிவுநீர் அதன் அருகில் ஓடும் பாசன வாய்க்காலில் கலப்பதனால் அப்பகுதி மக்கள் நோய்க்கு இலக்காவதும், அக்கழிவு நீர் வெளியேற்றத்தால் சுற்றுப்புற பகுதிகளில் துர்நாற்றம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) அரசு அறியும்.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

49—

கோதுமை உணவுகள்.

வினா 7200—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோதுமை உணவு வகைகளை மக்கள் ஏற்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

ஆம். கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை மக்கள் அதிக அளவில் உட்கொள்ள வேண்டும் என்பதை விளக்க 1984 ஆகஸ்டு மாதத்தில் சென்னை இராஜாஜி மண்டபத்தில்

1986 மே 10]

கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. மாவட்டங்களில், அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள கோதுமை உருளைமாவு ஆலைகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. கோதுமையின் பயன், அதில் உள்ள ஊட்டச் சத்து போன்றவற்றை பொதுமக்களுக்கு விளக்க செய்திப்படம் எடுக்கப்படுகிறது. மேலும் கோதுமையை சுத்தம் செய்து சிப்பங்களில் விற்பதற்கான ஏற்பாடுகள் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

50—

தொடுவட்டி—திருவனந்தபுரம் பேருந்துப் பணி.

வினா 7613—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொடுவட்டி சந்திப்பிலிருந்து திருவனந்தபுரத்திற்கு காலையிலும், மாலையிலும் இரு பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தொடுவட்டி—திருவனந்தபுரம் வழித்தடம் தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே உள்ள தடமாக இருப்பதால், இம்மாநிலங்களுக்கிடையே செய்து கொள்ளப் படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க முடியும். ஆனால் தொடுவட்டி—திருவனந்த புரம் தடத்தில் மொத்தத் தூரமான 40 கி. மீட்டரில் 33 கி. மீட்டர் கேரள மாநில எல்லையில் இருப்பதால் அந்த மாநிலம் இத்தடத்தில் பேருந்தை இயக்குவதற்கு ஒப்புதல் அளிப்பது கடினம்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10–40)

2. ஒழுங்குப் பிரச்சனை

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கம் குறித்து மேலவையில் தெரிவிக்கப்பட்ட கருத்து.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான ஒழுங்குப் பிரச்சனைகளை எழுப்புவதற்கு தாங்கள் அருள் கூர்ந்து எனக்கு அனுமதியை

வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக நேற்றையதினம் இந்த மாமன்றத்திலே தமிழ்நாடு சட்டமன்ற மேலவை ஒழிக்கப்படுமா என்று கேள்வி கேட்டதற்கு அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால் இந்த அவை நடந்து கொண்டிருக்கும் இந்த காலக் கட்டத்திலே சற்றைக்கு முன்னால் சட்டமன்ற மேலவையில் கொள்கைஅளவில் சட்டமன்ற மேலவையை ஒழித்து விடுவதாக அரசு முடிவு எடுத்து இருப்பதாகவும், அது சம்பந்தமாக 2 நாட்களில் அறிவிப்புகள் அல்லது தீர்மானங்கள் கொண்டு வரப்போவதாக அவர்கள் அங்கேவெளியிட்டு இருப்பதாக செய்திகள் வந்துஇருக்கின்றனவே கொள்கை சம்மந்தமான முடிவுகள் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் போது இங்கே தான் முதலிலே அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு அவையில் விவாதிக்கப்படுவதை நாம் எப்படி இங்கே விவாதிக்க முடியும். அது இன்னும் வெளியில் வரவில்லை. எனக்கு அது பற்றி தெரியாது. (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடு) அது இந்த அவையில் யாருடைய கவனத்திற்கும் வரவில்லை. என்னுடைய கவனத்திற்கும் வர வில்லை. என்னுடைய கவனத்திற்கு வந்த பிறகு சொல்லுகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சனை. மாண்புமிகு உறுப்பினர் திரு.சித்தன் அவர்கள் கிளப்பிய பிரச்சனை. இந்த சபையிலே நாம் இந்த முடிவு எடுத்து அந்த மேல் சபையை கலைக்கலாம் என்று அரசு முடிவு செய்தாலும் கூட அதை இந்த சபையில் தான் முதலில் நமக்கு தெரிவிக்கப்பட்டு அதன் மீது முடிவு எடுத்து அங்கே போகவேண்டும். அந்த சபையில் சொல்லிவிட்டு இங்கே வர முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத் தான் முதலில் சொன்னேன். அங்கே இருக்கிற விவாதத்தை இங்கே நாம் எழுப்ப முடியாது. அது யாருடைய கவனத்திற்கும் இன்னும் வரவில்லை. என்னுடைய கவனத்திற்கும் இன்னும் வர வில்லை.. இங்கே இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் வரவில்லை. ஆனால் உங்களுடைய கவனத்திற்கு மட்டும் தான் வந்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

நாம் எல்லோரும் வாக்களித்த பிறகு தான் அதை எடுக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியும் (குறுக்கீடு).

அவை முன்னவர் வந்தவுடன் கேட்கலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்) அங்கே என்ன தெரிவிக்கப்பட்டது என்பது எனக்கு ஒன்றும் இன்னமும் தெரியாது. என்னுடைய கவனத்திற்கு வந்த

பிறகு தான் நான் சொல்லமுடியும். என்னுடைய கவனத்திற்கு வந்தபிறகு தான் உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாப்பது பற்றி நான் பேச முடியும். (கூச்சல்-குழப்பம்].

திரு. கு. ரமணி : இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சனை வரும்போது அமைச்சரவை முடிவு பற்றி உங்களுக்குத் தெரியாமல்போய்விட்டது என்று சொன்னால், ...(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன அமைச்சரவையிலா இருக்கிறேன்? அமைச்சரவைக் கூட்டத்திற்கா போகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுப்பியதற்கு என்ன விளக்கங்கள் சொன்னேனோ, அதே விளக்கங்களின் அடிப்படையிலே தான் மேலவையிலும், அங்கே இப்பிரச்சனை எழுப்பப்பட்ட போது விளக்கம் சொன்னேன். நேற்று இங்கே சொல்கின்றபோது, இது செயற்குறிப்பு வடிவிலே திட்டவட்டமாக இன்னும் வரவில்லை, ஆக இன்னமும், இந்த நேரம் வரையில், இந்த நாளில் அதற்கான திட்டம் வரவில்லை என்று நேற்றே நான் குறிப்பிட்டேன். அதே நிலையில் தான் இன்றைக்கும் மேலவையில் எழுப்பப்பட்டபோது, திட்டவட்டமான செயற்குறிப்பு இல்லை, கொள்கை அளவிலே அதுபற்றிய ஒரு எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது, அது ஆய்வில்இருக்கிறது. அப்படி ஏதாவது செயற்குறிப்பு முன்வருமானால், இரண்டொரு நாட்களில் அதுபற்றிய முடிவு ஏற்படும். முறைப்படி சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டதற்குப் பிறகு, உறுப்பினர்களுடைய எண்ணங்கள் அத்தனையும் அறியப்படும். அறியப்பட்டதற்குப் பிறகு, எல்லோருடைய எண்ணங்களின் அடிப்படையில் தான் முடிவு எடுக்கப்படும் என்று தான் நான் குறிப்பிட்டேனே தவிர, திட்டவட்டமாக எதுவும் இன்றைய நிலையில் சொல்லவில்லை. கொள்கை அளவிலே வந்து, ஆய்வு செய்யப்படுகிறதே தவிர, இன்னமும் திட்டவட்டமாக அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை என்று நான் நேற்று சொன்னேன். அந்த நிலைதான் இன்றும் இருக்கிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் தெரியும் என்று தான் அங்கே நான் சொன்னேனே தவிர, வேறு எதையும் வாக்குறுதியாகத் தரவில்லை.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது, பத்திரிகை நிருபர்கள் மூலமாக வெளியிலே வந்திருக்கிற கருத்து நம்முடைய நாவலர் அவர்கள் மேலவையில் கொள்கை அளவில் மேலவையை நீக்குவது என முடிவு எடுத்துள்ளதாகவும் அதைப் பற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் தீர்மானம் வருவதோ, விவாதிக்கப்படுவதோ, சட்டமன்றத்தில் நடைபெறும் என்றும் அந்த அளவிற்கு ஏற்கப்பட்டு விட்டது என்றும் கருத்து சொல்லப்

பட்டதாகத் தெரிகிறது. நிருபர்கள் வெளியிலே என்னைப் போன்றவர்களிடத்தில் அப்படித் தெரிவித்ததனால், அதைப்பற்றி கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆக நிச்சயமாக மேலவையை முடிப்போம் என்ற கருத்து அவை முன்னவர் பேச்சுமூலமாக வெளியே வந்திருக்கிறது. அப்படி தெரிவிக்கவில்லை என்றால், பத்திரிகை உலகத்திற்கு உடனடியாக அவை முன்னவர் விளக்கம் தந்தாகவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

இப்போதும் அப்படி ஏதாவது தவறான கருத்துக்களிலே பத்திரிகை நிருபர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த அவைக்கு வந்திருக்கிற நிருபர்களும், அந்த அவைக்கு செல்கிற நிருபர்களும் வேறு, வேறாக இருந்தாலும் அவர்கள் ஒரே பத்திரிகையைச் சார்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக, அவர்களை இங்கே இருப்பவர்கள் திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஆண்டறிக்கை காலதாமதமாக அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஒழுங்குப் பிரச்சனை. இந்த மாமன்றத்திலே அரசு சார்பாக இருக்கின்ற நிறுவனங்கள், ஆணையங்களுடைய ஆண்டு அறிக்கை உரிய காலத்தில் இங்கே வைக்கப்படுவது இல்லை. பல ஆண்டுக்காலம் கால தாமதமாக வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் எழுப்பப்பட்டிருக்கிறது. அண்மையில் கூட இந்த நிகழ்ச்சியில் புதிதாக சேர்ந்த ஒன்று Annual Report of the Public Service Commission. இந்த தேர்வாணைக் குழுவினுடைய 1979–80 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே கால தாமதத்திற்கு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது, அது வேடிக்கையாக இருக்கிறது. அதாவது அரசு அச்சகத்திற்கு அனுப்பி அதன் மூலமாக பெறுவதற்கு காலதாமதம் ஆகியிருக்கிறது என்று முன்னால் ஒரு செய்தியும், பின்னால் இந்த ஆண்டு அறிக்கையில் 8 இனங்களுக்கான விளக்க குறிப்புகள் துறையிலிருந்து வராத காரணத்தால் தான் இந்த மாதிரி கால தாமதம் ஆகியிருக்கிறது என்று சொல்லி தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரால் இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் உங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த ஆண்டு அறிக்கையிலே Government of Tamil Nadu 1980 என்று போடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும் எவ்வளவு பழைய தாக, கிழிந்த புத்தகமாக இருக்கிறது என்று. எனவே தொடர்ந்து இந்தமாதிரி கால தாமதமாக வைப்பது பற்றி இந்த தேர்வாணைக்

குழுவின் அறிக்கையின் மீது விவாதத்தை நடத்த தாங்கள் அருள் கூர்ந்து ஏற்பாடு செய்வீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு நோட்டீஸ் கொடுங்கள். விவாதிக்கலாம். Papers laid cn the Table of the House என்று ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். That Committee will be definitely look into it. அரசியல் சட்டத்திலே Article 323 (2) says that it shall be the duty of a State Commission to present annually to the Governor of the State a report as to the work done by the commission. இதை 2 வருடம் தாமதமாக கொடுத்து இருக்கிறார்கள். They have not followed the letter of the Constitution. (குறுக்கீடு) ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கவேண்டும் என்று இருக் கிறது. இனிமேல் சரியாக கொடுக்கவேண்டும் என்று அவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

You will all be in the Committee and pull them up.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் பப்ளிஷ் ஆனதை 1986-ல் அவையில் வைத்தால் எப்படி? 1986-ல் வெளியிட வேண்டிய அவசியம் என்ன? முன்பே வெளி யிட்டு இருக்கலாமே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தான் நான் முதலி லேயே சொன்னேன். Papers laid on the table of the House. என்ற ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அதிலே தெரிவித்து, அங்கே விவாதித்து அதைப் பற்றி இந்த அவைக்கு தெரிவிக்கலாம்.

(ஆ) தனி நபர் கார்த்திகேயன் ஊதியக் குழுவின் அறிக்கை குறித்து

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசிடமிருந்து ஒரு மிக முக்கியமான தகவலைத் தெரிந்து கொள்வதற்காக இந்தப் பிரச்சனையைக் கிளப்புகிறேன். மே மாதம் முதல் வாரத்தில் கார்த்திகேயன் கமிஷன் அறிக்கை வந்து விடும், வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இன்று, இரண்டாவது வாரம் முடியப் போகிறது. அந்தக் கமிஷன் அறிக்கை வந்துவிட்டதா? அது வந்ததற்குப் பிறகு அரசு ஊழி யர்கள், ஆசிரியர்களைக் கலந்து பேசி, அவர்களோடு ஒரு பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு அந்த அறிக்கையை வெளியிட அரசு முன்வருமா? அறிக்கை எப்போது வெளியிடப்படும் என் பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவகாசம் கேட்ட வகையில், மே மாதம் 15ஆம் தேதி வாக்கில் தான் அவர்கள்

அறிக்கை தருவதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசு ஆய்ந்து தக்க முடிவு எடுக்கும். அதற்கிடையில் யாரையும் கலந்து எந்த முடிவும் எடுக்கிற தன்மைகள் எந்த ஒரு அறிக்கையைப் பொறுத்தும் மேற்கொண்டதில்லை. அந்த முறையைத்தான் இப்போதும் அரசு மேற்கொள்ளும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்வது சரியல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏர்போர்ட், பஸ் ஸ்டாண்டில் பேசுவதையெல்லாம் அவையில் குறிப்பிடுவது கூடாது.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யூகத்தில் இதுபோன்றெல்லாம் கேட்கக்கூடாது. இவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24-4-1986 அன்று, இந்த அவையிலே பணியாற்றுகிற சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்களுடைய வீடு தாக்கப்பட்டதாகவும், அவர் வருகிற பஸ்ஸைத் தாக்கியதாகவும், ஏற்கெனவே 6 உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கவன ஈர்ப்பை நான் பரிசீலித்திருக்கிறேன். மாவட்டக் கண்காணிப்பாளரிடம் கேட்டு இருக்கிறேன். இன்னும் பதில் வரவில்லை. ரிப்போர்ட் வரவில்லை. (குறுக்கீடு).

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: ஆளுங்கட்சி சார்பிலே 6 பேர் கொடுத்திருக்கிறோம். இன்னும் 2 நாட்கள்தான் சபை இருக்கிறது. எனவே.......

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1986 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுகுள்ளே அதை எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைக் கேட்டு, பார்த்துச் சொல்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1986–87 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு மின்துறை அமைச்சர்
4. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. திரு. உ. சுப்பிரமணியன் (எதிர்க்கட்சித் தலைவர்)
7. திரு. துரை கோவிந்தராசன் (அரசு தலைமைக் கொறடா)
8. திருமதி. டி. யசோதா
9. திரு. சி. பழனிமுத்து
10. திரு. க. அன்பழகன்
11. திரு. கி. மனோகரன்
12. திரு. கு. ரமணி
13. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
14. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
15. திரு. பொ. உத்திராபதி
16. திரு. குமரி அனந்தன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 282-ன் கீழ், 1986–87 ஆம் ஆண்டிற்கான பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக, கீழ்க்கண்ட உறுப்பினர்களை நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
4. மாண்புமிகு சட்ட அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. திரு. உ. சுப்பிரமணியன் (எதிர்க் கட்சித் தலைவர்)
7. திரு. துரை கோவிந்தராசன் (அரசு தலைமைக் கொறடா)
8. திரு. கி. மனோகரன்
9. திரு அ. செல்வராசன்
10. திரு. கு. ரமணி
11. திரு. பொ. உத்திராபாதி
12. திரு. எ. தெய்வநாயகம்
13. திரு. ஈ.வே.கி. ச. இளங்கோவன்
14. திரு. மா. சுந்தரதாஸ்
15. திரு. இரா. அரிக்குமார்
16. திரு. க. இரா. சின்னராசு

பேரவை விதி 282-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(இ) அவைக் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 279 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1986–87 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. க. பாலசுப்பிரமணியன்
2. திரு. கோ. இரகுபதி
3. திரு. வி. கே. சின்னசாமி
4. திரு. பாப்பா சுப்பிரமணியன்
5. திரு. அ. பெரியசாமி
6. திரு. ஏ. பாலுச்சாமி
7. திரு. எஸ். நாராயணன்
8. திரு. எம். சண்முகய்யா பாண்டியன்

9. திரு. அ. வெங்கடாசலம்
10. திரு. க. சோலைராசு
11. திரு. கி. எத்திராசன்
12. திரு. துரை கிருஷ்ணமூர்த்தி
13. திரு. வி. கோ. செல்லப்பா
14. திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்
15. திரு. கே. வி. வேணுகோபால்.
16. திரு. ம. ஆபிரகாம்
17. திரு. பரிதி இளம்வழுதி
18. திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்

பேரவை விதி 279 (1)-ன் கீழ், திரு. கி. எத்திராசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை நகரில் வீட்டிற்கான மின்னிணைப்பு கொடுப்பதில் ஏற்படுகின்ற கால தாமதம் குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரத்தில் வீட்டிற்கான மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தவர்கள் அதற்கான முழுத் தொகையினை செலுத்தி நீண்ட நாட்களாகியும் மின் இணைப்புக் கிடைக்க போதிய மின் கேபிள்கள், மின் மீட்டர்கள் இல்லாத காரணத்தால் சென்னை மாநகர மக்களுக்கு ஏற்படு கின்ற இன்னல்கள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

மனுதாரர்கள் ஈட்டுத் தொகை செலுத்தியும் மின் இணைப்பு பெறாத வகை வீட்டு மின் இணைப்பு மனுக்கள் 7,400 சென்னை நகரில் உள்ளன. இவற்றில் 5,300 மனுக்கள் மூன்று மாதங் களுக்கு குறைவான நிலுவையில் தான் உள்ளன.

1985–86 ஆம் நிதி ஆண்டில், மின்வாரியம் 28,000 மனு தாரர்களுக்கு வீட்டு இணைப்பு கொடுத்தது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1986 மே 10

நிலுவையில் இருப்பதற்கான மூல காரணம் மின் அளவிகளும் புதைவடமும் மின்வாரிய தேவைக்கு ஏற்ப கிடைக்கப் பெறாமல் இருப்பதுதான். புதைவட பற்றாக்குறைக்கு சந்தை நிலை தான் காரணம். இருப்பினும் மின் அளவிகளும் புதைவடமும் சில்லறை விற்பனைக்கும் கிடைப்பதால் மின்வாரியம் மனுதாரர்கள் மின் அளவிகளையும் புதை வடத்தையும் வாங்க அனுமதி அளித்துள்ளது. மனுதாரர்கள வாங்கிக் கொடுத்தால் மின இணைப்பு உடனே அளிக்கப்படுகிறது. புதைவடம் மனுதாரர்களால் கொடுக்கப்பட்டால் அவர்களிடமிருந்து பெறும் தொகையில் புதைவடத்தின் விலை குறைக்கப்படுகிறது. மின் அளவி மனுதாரர்களால் கொடுக்கப்பட்டால் மின்வாரிய ஒப்பந் தப்புள்ளியில் அனுமதிக்கப்பட்டுள்ள மின் அளவியின் விலை அவர்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்னிணைப்புகளைப் புதிதாகக் கொடுக்கின்ற பொழுது வாரியமே மின் மீட்டர்களை வழங்கு கின்ற முறையில் அதற்கு 121 ரூபாய் என்று நினைக்கிறேன் அந்தத் தொகையை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இப் பொழுது புதிதாக இணைப்பு கேட்பவர்களுக்கு மின் மீட்டர் கள் வழங்கப்படுவதில்லை. வெளியே வாங்கிக் கொள்ளுங்கள என்று சொல்கிறார்கள். வெளியே வாங்குகின்றபொழுது 200 ரூபாய்க்கு மேல் ஆகிறது. அப்படி வாங்கிய ரசீதைக் காட்டினாலும் கூட 121 ரூபாய்தான் தருகிறார்கள். ஆகவே, ஏன் இந்தப் பாகுபாடு என்பதை அறிய விரும்புறேன். மேலும் வாரியமே மின் மீட்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை, எடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் வெளியே என்ன தொகைக்கு வாங்கி அந்த பில்லைக் கொடுக்கிறார்களோ அந்தத் தொகையைச் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மின் அளவைக் கருவிகளை வாரியமே வாங்கும் முறையில், தேவைக்கு ஏற்ப கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் தனியார்கள் தங்களுடைய அவசரத் தேவைக்காக அதை வாங்கும் பொழுது, வாரியம் வாங்கினால் என்ன விலை பெறுமோ அந்த விலையைத்தான் வாரியம் தருவதற்கு உரிமை படைத்திருக்கிறது. அதைவிடக் கூடுதலாகத் தந்தால் அதுவே குறையாக ஆகிவிடும். ஆகவே தான் மின்வாரியம் என்ன விலையை நிர்ணயம் செய்கிறதோ அந்த விலை மட்டுமே தரப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது சென்னை மாநகரத் திலே புதிய மின்னிணைப்புகள் கேட்டு வந்த விண்ணப்பங் களின் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு இன்னும் எவ்வளவு காலத்தில் இந்த மின்னிணைப்புகள் வழங்கப்படும்? இந்த மின் மீட்டர்களுக்கு உண்டான தொகையை நிர்ணயிக்க

1986 மே 10] *[திரு. சைதை சா. துரைசாமி]*

ஏற்பாடு செய்யப்படுமா? இதில் அரசால் போடப்பட்ட டெண்டர் முடிந்துவிட்டது என்றும், புதிதாக டெண்டர்கள் போடப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, புதிய டெண்டர்களை விரைவில் அமல்படுத்தி மின் மீட்டர்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு, *1985-86* ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் *33,432*; தரப்பட்ட மின்னிணைப்புகள் *28,018*. இன்னும் பழைய மனுக்களெல்லாம் சேர்ந்து மொத்தம் *11,126* மனுக்கள் தேங்கி இருக்கின்றன. இவற்றில் *7,400* மனுக்களுக்கு மட்டுமே காப்புத் தொகை அளித்திருக்கிறார்கள். மூன்று மாத அளவிற்குள் நாம் தரக்கூடிய அளவு *5,300*. மீண்டும் மின் அளவைக் கருவிகளைப் பெற ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்க மின் வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி அளிக்கும் நாட்கள் விழுக்காடு குறித்து.

(முற்பகல் *11-00*)

*** திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' கைத்தறித் துணிகளின் விற்பனைக்காக வருடத்திற்கு தள்ளுபடி (ரிபேட்) நாட்கள் *60* என்றிருந்ததை *30* நாட்களாகக் குறைத்திருப்பதாலும், தள்ளுபடித் தொகையில் மைய அரசு மற்றும் மாநில அரசு *50* விழுக்காடுகள் ஏற்றுக் கொள்ளும் என்றிருந்த நிலையை மாற்றி *25* விழுக்காடுதான் மைய அரசால் தர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1982-83 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு ஆண்டொன்றுக்கு *30* நாட்களுக்கு சில்லறை விற்பனை மீது *20* விழுக்காடு தள்ளுபடியும், மொத்த விற்பனை மீது *15* விழுக்காடு தள்ளுபடியும் தவிர இந்தியா முழுவதும் ஆங்காங்கே மத்திய அரசால் நடத்தப் பெறும் தேசீயக் கைத்தறிக் கண்காட்சியை ஒட்டி அக்கண்காட்சியில் பங்கேற்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு *20* சதவிகிதம் தள்ளுபடியும் அளித்து வந்தது. இதற்கான தள்ளுபடி செலவை *50 : 50* என்ற விகிதத்தில் மாநில மற்றும் மத்திய

அரசுகள் பகிர்ந்து கொண்டன. அளவுக்கதிகமான துணித் தேக்கத்தைக் குறைக்கும்பொருட்டு மத்திய அரசு தனது திட்டத்தினை மாற்றி அமைத்து 1983–84 ஆம் ஆண்டு முதல் தள்ளுபடி அளிக்கும் நாட்களின் அளவை வருடத்திற்கு 60 நாட்களாக உயர்த்தி அறிவித்தது. அதன்படி சில்லறை விற்பனை மீது 20 சதவிகிதமும், மொத்த விற்பனை மீது 15 சதவிகிதமும் தள்ளுபடி அளித்தது. முக்கியமான பண்டிகைக் காலங்களில் மற்றும் தலைவர்களின் பிறந்த தினத்தையொட்டி மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் 60 நாட்களுக்கு தள்ளுபடி அளிக்கப்பட்டது. மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அவ்வப்போது துணித் தேக்கத்தைக் குறைக்க இந்த 60 நாட்கள் திட்டம் மிகவும் உதவியாயிருந்தது. ஆனால் மத்திய அரசு 1985–86ல் இத்தள்ளுபடி நாட்களை 45 நாட்களாகவும், மொத்த விற்பனையில் ஏற்படும் செலவை 50 : 50 என்ற விகிதாசாரத்தில் மத்திய மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, மொத்த விற்பனைக்கு மாநில அரசு 75 விழுக்காடும், மத்திய அரசு 25 விழுக்காடுதான் ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது அல்லாமல், 1986–87 ஆம் ஆண்டிற்கு 30 நாட்களாகவும் குறைத்தது. 1986–87 ஆம் வருடம் முதல் மொத்த விற்பனைக்கு அறவே தள்ளுபடி கிடையாது என்றும் அறிவித்தது. இது தவிர தேசிய கைத்தறி கண்காட்சிகளில் பங்கேற்கும் சங்கங்களுக்கு கண்காட்சி காலங்களில் 20 சதவிகிதம் தள்ளுபடி உண்டு என்று அறிவித்துள்ளது. தேசிய கைத்தறி கண்காட்சிகளில் எல்லா பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கேற்க இயலாது. எனவே, இக்கண்காட்சிகளினால் தமிழகத்தைப் பொறுத்த வரை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வித பலனும் இல்லை. ஆகையால் தமிழகத்திலுள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 30 நாட்கள் மட்டுமே தம் விற்பனையின்மீது தள்ளுபடி அளிக்கும் நிலை உருவாகி உள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் பல இனத்தவரால் கொண்டாடப்படும் பல்வேறு பண்டிகைகளுக்கு தள்ளுபடி அளிக்க இயலாததால், குறிப்பிட்ட இனத்தவரின் கண்டனத்திற்கு அரசு ஆளாகும் நிலை நேரிட்டுள்ளது. எனவே எல்லா இனத்தவரையும் திருப்திபடுத்துவதல்லாமல், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தனது சரக்குகளை விற்பனை செய்து சரக்கு தேக்கத்தை அவ்வப்போது குறைத்துக் கொள்ளும் பொருட்டு 1983–84, 1984-85 ஆகிய இரு ஆண்டுகளிலும் அளித்ததுபோல் 60 நாட்களுக்கு சில்லறை மற்றும் மொத்த விற்பனை மீது தள்ளுபடி அளிக்க மத்திய அரசுக்கு ஏப்ரல் மாதத்தில் கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசு, இந்த அரசின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

(2) உற்பத்தியை மாற்றி அமைத்தல், தீவிர விற்பனை திட்டங்களை அமுல்படுத்தி விற்பனையை ஊக்குவிப்பது போன்ற வழியிலும் கருத்து செலுத்தப்படுகிறது.

1986 மே 10]

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் கைத்தறித் துணி விற்பனைத் தள்ளுபடிக்காக ரூ.16 கோடியை நாம் ஒதுக்கியிருக்கிறோம். 50இலட்சம் குழந்தைகளுக்குச் சீருடை வழங்குவதன் மூலம், ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 8 கோடியை மீட்டர் கைத்தறி துணியின் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. 5½ இலட்சம் தறிகளை 1,600 கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டுவந்து கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பயன் பெறத்தக்க அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேலும் மைய அரசின் மூலமாக இராணுவத்திற்குக் கைத்தறித் துணிகள் வாங்கவேண்டுமென்று மைய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கைத்தறி நெசவாளர் குடும்பங்களின் வாழ்கைக்யிலே புத்துணர்ச்சியும் ஒளியையும் ஏற்றுவதற்காகத் தமிழக அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழியை உடைப்பது போல, மைய அரசு இந்தத் நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அறிந்து, வேதனை ஏற்படுகிறது. நமது ஒட்டுமொத்தமான சபையினுடைய கருத்தினைத் தீர்மான வடிவிலே, தள்ளுபடி நாட்களை 60 நாட்களாக உயர்த்துவதற்கு மைய அரசை வலியுறுத்திட தீர்மானம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1983–84, 1984–85 இரண்டு ஆண்டுகளிலும், ஆண்டு ஒன்றுக்கு ரிபேட் நாட்களை, 60 ஆகவும், சில்லறை விற்பனையில் 20 சதவீதமும், மொத்த விற்பனையில் 15 சதவீதமும், விற்பனையில் கழிவு தரப்பட்டது. அப்படி 20 சதவீத ரிபேட் சில்லறை வியாபாரத்தில், மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற முறையில் சரிபாதியாக ஏற்று வந்தார்கள். மொத்த வியாபாரத்தில், 50 சதவீத விலை தள்ளுபடியில், மைய அரசு 1985–86-இல் 50 சதவீதம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் மாநில அரசினுடைய வேண்டுகோளுக்கிணங்க வேண்டுமானால், 1985–86-க்கு மாத்திரம், 25 சதவீதம் ஏற்றுக் கொள்வோம், 1986–87 முதல் நடைமுறை ஆண்டிலிருந்து இந்த மொத்த வியாபாரத்திற்காக, எந்த வித ரிபேட்டும் கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள். 1985–86-இல ரிபேட் நாட்களில் ஆண்டு ஒன்றுக்கு அதற்கு முன்பு 60 ஆக இருந்ததை 45 ஆகவும், 1986–87-இல்—நடைமுறை ஆண்டில்—30 ஆகவும் குறைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், கைத்தறித் துணியினுடைய உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 168 கோடி, ரூ. 170 கோடி அளவுக்கு அதிகமாகியிருக்கிற இந்த நேரத்தில், துணித் தேக்கத்தைப் பல்வேறு முறைகளில் மாநில அரசு போக்குவதற்கு முயற்சி எடுக்கையிலே, மைய அரசு பழையபடி ஆண்டு ஒன்றுக்கு 60 நாள் ரிபேட் கொடுக்கவும், மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் இரண்டிலும் 20 சதவீதம் கொடுக்கவும்,

மைய அரசும், மாநில அரசும் 50–50 என்று பகிர்ந்துக்கொள்ளவும் முன் வந்தால்தான் கைத்தறித் துணித் தேக்கம் போக்கப்பட்டு, நெசவாளர்களுடைய வாட்டம் போக்கப்படும். இது பற்றி மாநில அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அண்மையில் மைய அரசு நிதியமைச்சர் அவர்களை தமிழ்நாட்டிலிருந்து கைத்தறி நெசவாளர்களுடைய தூதுக் குழு சென்று வற்புறுத்தி இருக்கிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, இரண்டில் எந்த விற்பனை அதிகமாக உள்ளது? தள்ளுபடி அளிப்பதில் சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, எந்த விற்பனை அதிகமாகப் போகிறது. தள்ளுபடியில் ஆண்டுக்குச் செலவு எவ்வளவு ஆகிறது. இதில் மைய அரசும் மாநில அரசும் எவ்வளவு பங்கேற்றுக் கொள்கின்றன என்ற விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100க்கு 60 அல்லது 70 சதவீதம் மொத்த வியாபாரத்தில் கைத்தறியினுடைய விற்பனை அதிகமாகியிருக்கிறது. விற்பனை அதிகமாவதால் மொத்த வியாபாரத்தில் தான் ரிபேட் அதிகமாக கொடுக்கவேண்டியிருக்கிறது. ரிபேட் தொகையை ஆரம்ப கூட்டுறவு நெசவாளர் சங்கம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் இரண்டுக்கும் 1981–82ல் 5 கோடியாகவும், 1982–83ல் சுமார் 13 கோடியாகவும், 1983–84ல் சுமார் 12 கோடியாகவும், 1984–85ல் 16 கோடியாகவும், 1985–86ல் 17 கோடியே 60 இலட்சமாகவும் மத்திய அரசு மாநில அரசு கொடுத்து வருகிறது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய சட்ட விளக்கங்களைப் பற்றி பின்னால் சொல்லலாம் என்றாலும் கூட, இதிலே புரொசீஜரல் பார்மில் ஒரு தவறு இருக்கிறது என்பதைப் பற்றி

இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து என்னுடைய எதிர்ப் பாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய தமிழ் பதிப்பிலே 60 ஆம் பக்கத்திலே பல ஊர்களைப் பற்றி சொல்லி யிருக்கிறார்கள். ஆனால், திருநெல்வேலியில் தென்காசியைச் சார்ந்த..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த ஊர் விட்டுப்போனது என்பதைப் பற்றி டிஸ்கஷனிலே பேசலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 மே 10

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஈ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்—(தொடர்ச்சி.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

உ. மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

உ. கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

(முற்பகல் 11–10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(ஊ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 மே 10

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஈ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்—(தொடர்ச்சி.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

உ. மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

உ. கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

(முற்பகல் 11–10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(ஊ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. தனியார் அலுவல்கள்.

(அ) கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தனித் தீர்மானம்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

1986 மே 10] [திரு. செ. செம்மலை]

"சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பொதுவாக தென் மாநிலங்களுக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஒரு இன்றியமையாத திட்டமென இப்பேரவை கருதுகிறது.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இத்திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்ப்பதற்கு பரிந்துரை அளித்துள்ளது. மாறுபட்டு வருகின்ற காலச் சூழலில், இத்திட்டத்தின் அவசியம் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்து மகா சமுத்திரம் இராணுவ மயமாக்கப்படுகின்றது (மிலிட்டரைசேஷன் ஆஃப் தி இன்டியன் ஓஷன்) என்ற நிலையிலும், தற்போது நிலவுகின்ற இப்பகுதியின் நிலவியல் சார்ந்த அரசியல் (ஜியோபாலிட்டிக்ஸ்) காரணமாகவும், இத்திட்டத்தை தேசிய பாதுகாப்புக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இத்திட்டத்தினை மேலும் காலதாமதம் இன்றி உடனடியாக மத்திய அரசு செயல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்த மாநில அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது."

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு நலம் பயக்கும் இந்த நல்ல திட்டத்திற்கான தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிகிற ஒரு வாய்ப்பை நான் பெற்றமைக்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை ஒரு பெரிய பேறாக நான் கருதுகிறேன். மன்ற உறுப்பினர்கள் பலபேர் கொடுத்த முக்கியமான பல தீர்மானங்களில் குலுக்கல் முறையில் கூட இந்தத் திட்டம் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இதிலிருந்து இந்தத் திட்டம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதையும், அதனுடைய முக்கியத்துவத்தையும் இது உணர்த்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் முதலிலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இங்கே உள்ள மன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக ஒரு மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. மானியக் கோரிக்கை என்று சொன்னால் கூட பல்வேறுபட்ட கட்சிகளினுடைய உறுப்பினர்கள் அதை மறுத்துப் பேச முடியும். அல்லது அதை மறுக்க முடியும். அதேபோல் சட்ட முன்வடிவுகள் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டால் கூட அந்தச் சட்ட முன்வடிவை எதிர்ப்பவர்களும் இருப்பார்கள். ஆதரிப்பவர்களும் இருப்பார்கள். ஆனால் இந்த சேது சமுத்திரத் திட்டத்தைப் பொறுத்த வரையில் கட்சி வேறுபாடு இல்லாமல் அனைத்து கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் திட்டத்தின் மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே கலந்து கொள்கிற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சியினுடைய தலைவர்கள் ஆகியோர் எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் நிச்சயமாக இந்தத் திட்டத்திற்கு வலுவூட்டக் கூடியதாக வந்து இந்த விவாதம் பயனுள்ளதாக நிச்சயமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு சமயங்களில், வாய்ப்பு வருகிற போதெல்லாம் மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்தினுடைய அவசியத்தை உணர்த்தி வருகிறது என்பதையும் நாம் நிச்சயமாக அறிவோம்.

எனவே மைய அரசு எடுக்கின்ற அந்த முயற்சிகளுக்கு இந்த மன்றத்திலே நாம் எடுத்து வைக்கின்ற விவாதங்கள் நிச்சயமாக துணை புரியும் என்று நான் நம்புகிறேன். மைய அரசினுடைய கருத்துக்கு எட்டுகின்ற வகையில் நம்முடைய விவாதம் அமையுமேயானால், நிச்சயமாக ஆண்டு ஆண்டுக்காலமாக பேசப்பட்டு வந்த அந்தத் திட்டத்தை நம் அனைவருடைய முழுமையான ஒத்துழைப்புடனாலும் அல்லது கூட்டுப் பொறுப்பின் மூலம், நாம் பெறலாம் என்று நான் நம்புகிறேன்.

தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். எனவே தட்ட வேண்டிய முறையில் தட்டிக் கேட்க வேண்டிய முறையிலே கேட்டும், இப்படிப்பட்ட மிக அருமையான திட்டத்தை நாம் பெருவோமேயானால் நிச்சயமாக நம்முடைய தமிழ் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி உயரும் என்பதில் ஐயப்பாடு இல்லை. கடந்த மார்ச் மாதம் தமிழகத்திற்கு வருகை புரிந்த நம்முடைய கடற்படைத் தளபதி தகலியான் என்ற அவர்களிடம் நம்முடைய மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை விளக்கி, உணர்த்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மைய அரசிடம் அவரும் வற்புறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை விடுகின்ற நேரத்தில், நம்முடைய இந்தியக் கப்பற் படைத் தளபதி அவர்கள், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கருத்துக்களை முழுமையாக ஒத்துக் கொண்டு, நிச்சயமாக நம்முடைய பாதுகாப்புத் தன்மையை பொறுத்த வரையில் இந்தத் திட்டம் ஒரு இன்றியமையாத திட்டம் என்பதை வலியுறுத்திச் சொல்லி, ''நான் மைய அரசிடம் சென்று இந்த திட்டத்தை விரைவிலே நிறைவேற்றுவதற்கு வலியுறுத்துவேன்'' என்று உறுதியைக்கூட நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடம் அவர் கொடுத்துச் சென்றார் என்ற செய்தியை பத்திரிகையிலே பார்த்து மகிழ்ந்திருக்கிறோம். எனவே ஆண்டு ஆண்டுக்காலமாகப் பேசப்பட்டு வருகிற இந்தத்திட்டம், இன்றைக்கு செயல் வடிவம் ஆக்கப்பட வேண்டும் என்ற கருத்தோடுதான், இந்த தீர்மானத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். எனவே

நம்முடைய தலை முறையிலேயாவது இந்தத் திட்டம் நிறைவேற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, அந்தத்திட்டம் நிறைவேற்றப் படுகின்ற அந்தக் காட்சியை நாம் பார்க்க வேண்டும் என்ற அந்த அவா நமக்கு இன்றைக்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆங்கிலேயர் காலத்திலிருந்து இந்தத் திட்டம் பேசப்பட்டு வந்திருக்கிறது. அவர்கள் காலத்திலே என்னென்ன காரியங்களுக் காக இந்தத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று காரணங் களை நியாயப்படுத்தினார்களோ, அந்தக் காரணங்களை விட இன்றைக்கு அதிகமான காரணங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கிற நமக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு கிறேன். ஆனால் இது காலதாமதம் ஆகிக் கொண்டே போவ தைப் பார்த்தால் நமக்குச் சங்கடம் அளிக்கும் சூழ்நிலை தான் இருக்கிறது என்பதையும் நிச்சயமாக நாம் எடுத்துச் சொல்லி யாக வேண்டும். இந்தத் திட்டம் மட்டும் காலதாமதம் ஆனால் பரவாயில்லை. ஆனால் நம்முடைய நாட்டினுடைய பொருளா தார வளர்ச்சியே காலதாமதம் ஆகிக் கொண்டே போகிறது என்பதை நினைக்கின்ற போது தான் வருத்தமாக இருக்கிறது.

நம்முடைய கிராமப் புறங்களிலே சொல்லுவார்கள் எதற் கும் ஒரு காலம் வர வேண்டும் என்று சொல்லுவார்கள். அப்படி ஒரு நல்ல காலம் இனிமேலாவது இந்தத்திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் வர வேண்டும் என்று இந்தச் சந் தர்ப்பத்திலே வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு போக்குவரத்து வளர்ச்சியைப் பொறுத்தும், கல்வியினுடைய வளர்ச்சியைப் பொறுத்தும் தான் ஒரு நாட்டினுடைய முன் னேற்றம் இருக்கிறது என்பதை நல்லறிஞர்கள் சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள். எனவே ஒரு நாட்டினுடைய வளர்ச்சி மேலும் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொன் னால் அந்த நாட்டினுடைய போக்குவரத்து வளர வேண்டும். அதேபோல கல்வியும் வளர்ந்தாகவேண்டும். Any transport project has a key role to play in the development of the nationel economy. என்று சொல்லுவார்கள். எனவே பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து வளர்ச்சி எந்த அளவுக்கு முக்கியத்துவம் அடைந் திருக்கிறது, அல்லது முக்கியமாக இருக்கிறது என்பதை நாமெல் லாம் நன்றாக உணர்வோம். அந்த வகையிலே இந்த 28 ஆண்டுக் காலமாக பேசப்பட்டு வந்த அந்தத்திட்டம் இன்னமும் இவ் வளவு காலதாமதம் ஆவது நம்முடைய நாட்டினுடைய பொரு ளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மைய அரசினுடைய பார் வைக்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருது கிறேன்,

[திரு. செ. செம்மலை] [1986 மே 10

(முற்பகல் 11–20)

இன்றைக்கு எத்தனையோ திட்டங்கள் உலக அரங்கிலே நாம் எடுத்துக்கொள்வோமானால் அதில் ஒன்று சூயஸ் கால்வாய்த் திட்டம். அந்தத் திட்டம் இந்தத் திட்டத்திற்குப் பின்னாலே தீட்டப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு சர்வதேச ரீதியில் இலாபகரமான திட்டமாக செயல்பட்டு வருவதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். எகிப்துக்கும் சினாய் பாலைவனத்திற்கும் இடையில் மத்திய தரைக் கடலையும், செங்கடலையும் இணைக்கிற அந்தக் கால்வாய் கிட்டத்தட்ட 190 கி.மீ. தூரத்தை கடக்கிறது. அந்தவகையில் இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கும் கிட்டத்தட்ட 9,700 கி.மீ. தூரத்தை கடல்வழியாக மிச்சப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இல்லையென்றால் ஆப்ரிக்காவை சுற்றித்தான் அங்கே போக வேண்டுமென்ற சூழ் நிலை இருந்தது. அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த அந்த சூயஸ் கால்வாய்த் திட்டம் 1869-ம் ஆண்டிலே திட்டமிடப்பட்டு நிறைவேற்றி செயல்படுத்தி காட்டியிருக்கிறார்கள் என்பதையும் நாம் இந்தத் திட்டத்தை பேசிக்கொண்டிருக்கிற நேரத்திலே எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக பெரிய திட்டமாக பனாமா கால் வாய்த் திட்டம் உருவாக்கப்பட்டது. அதுவும் உலக அரங்கிலே ஒரு பிரசித்திபெற்ற திட்டமாக முழுமைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையே அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்தையும் இணைக்கிற கால்வாயாக அந்தக் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டமும் நம்முடைய சேதுசமுத்திர திட்டத்தைப் பேசிய பிறகு தான், அந்தத் திட்டத்தை சொல்லிக் கொண்டிருந்த அந்த காலக் கட்டத்தில் தான் உருவாக்கப்பட்டு, முடிக்கப்பட்டு 1914 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 5,200 மைல் தூரத்தை இன்றைக்கு மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். நியூயார்க்கிலிருந்து சான்பிரான்சிஸ்கோ போக வேண்டுமென்றால் தென் அமெரிக்காவை சுற்றிக்கொண்டு தான் போக வேண்டும். ஆனால் அவ்வளவு தூரத்தை மிச்சப்படுத்துவதற்கு அந்தத் திட்டத்தை அவர்கள் மிகுந்த அக்கறையோடு உருவாக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை முடிப்பதற்கு மட்டும் 10 ஆண்டுக்காலம் எடுத்துக் கொண்டார்கள். 10 ஆண்டுகளுக்கு பிறகு அவ்வளவு பணச்செலவில் அவர்கள் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றால் அதனுடைய முக்கியத்துவத்தையும், அந்தத் திட்டத்தின் மூலம் ஏற்படுகிற நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் உணர்ந்து அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தை பொறுத்த வரையில் இன்றைக்கு பல ஆண்டுக்காலமாக பேசி வந்தாலும், ஏதோ இலாபகரமான திட்டமாக இது இருக்காது என்று யாராவது கருதுவார்களானால் அதன்மூலம் காலதாமதத்திற்கான

அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியும். ஆனால் மத்திய அரசாலே அமைக்கப்பட்ட சர். ஏ. இராமசாமி முதலியார் குழுவினுடைய அறிக்கை கூட சொல்கிறது. இந்தத் திட்டத்தை பொறுத்தவரையில் The project is financially justified, technically sound, commercially worthwhile and politically expedient என்று சொல்கிறது. இது இலாபகரமான திட்டம், தேவையான திட்டம் என்று அரசு அமைத்த அந்தக் குழு வலியுறுத்தி சொல்லியிருக்கிறது. ஆனால் அந்த காலதாமதத்தை மட்டும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால் எத்தனையோ திட்டங்களை உதாரணமாக சொல்லலாம். இங்கிலாந்து பிரான்சை இணைக்கிற கால்வாய், 'இங்கிலீஷ் கேனால்' என்ற அந்த கடல் பகுதியில் கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடலுக்கு அடியில் சுரங்க பாதை அமைத்து இன்றைக்கு ரெயில்கள், கார்கள் போய் வருகிற அற்புதத்தை நடத்தியிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்றியிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், விஞ்ஞான அறிவின் வளர்ச்சி வளர்ந்துகொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில், சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற முடியாத திட்டமென்று யாரும் நிச்சயமாக கருத முடியாது. எனவே இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தை எடுத்து முடிக்க வேண்டுமென்று வலியுறுத்துவது நம்முடைய கடமையென்று கருதுகிறேன். அந்தவகையில் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இதற்கு காலதாமதம் செய்யக்கூடாது என்பது தான் இன்றைக்கு இங்கேயிருக்கிற மன்ற உறுப்பினர்களின் ஒட்டுமொத்த கருத்தாயிருக்குமென்ற நம்பிக்கையோடுதான் இந்தக் கருத்துக்களை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஏதோ காலதாமதம் ஆகிவிட்டது, எனவே இறந்த காலத்தை பற்றி பேசிக்கொண்டிருப்பதிலே பயனில்லை. காரணம் காலம் பின்னோக்கிச் செல்ல முடியாது. எனவே நடப்பவை நல்லவையாக இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய அணுகுமுறைகள் இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றாது பெரிய குற்றத்தை மத்திய சர்க்கார் செய்திருந்தாலும், மக்களுடைய நலன் கருதி, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், தென்னக மாநில மக்களின் ஒட்டுமொத்த நன்மை கருதி இந்தத் திட்டத்தை மேலும் காலதாமதம் செய்யாமல், செய்த குற்றத்தையே தொடர்ந்து செய்யாமல், இதனை விரைவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தச் சங்கடமும் நிச்சயமாக இருக்க முடியாது. மனம் இருந்தால் மார்கம் உண்டு என்று சொல்வார்கள். எனவே அந்த நல்ல மனது அரசுக்கு வரவேண்டும். அந்த மனது வந்தால் நிச்சயமாக இந்தத் திட்டம் உருவாகும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லி, இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தினுடைய அவசியத்தை பற்றி தெரிந்து இருந்தாலும், இந்தத்

[திரு. செ. செம்மலை] [1986 மே 10

தீர்மானம் முன் மொழியப்படுகிற இந்த நிலைமையிலே ஒருசில கருத்துக்களை, இந்தத் திட்டம் பற்றி வல்லுநர் குழுக்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டுவது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகிறேன்.

அந்த அடிப்படையிலே ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் எடுத்துச் சொல்லி, இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 1860 ஆம் ஆண்டு முதலிலே திட்டமிடப்பட்டது. அந்த ஆண்டிலேயிருந்து இந்தத் திட்டத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 14 ப்ரப்போசல்கள் தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. 1860-லே Commander Taylor's proposal என்ற ப்ரப்போசல். இதுதான் இந்தத் திட்டத்திற்கான முதல் ப்ரப்போசல். அடுத்து 1861-லே Mr. Townshand's proposal அதற்கு அடுத்து 1862-லே Parliamentary Committee proposal கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1863-லே His Excillency Sir William Dennison's R. E. (Governor of Madras) அவர்கள் அன்றையதினம் சென்னையினுடைய கவர்னராக இருந்தவர். அவர்களுடைய ப்ரப்போசல் 1863-லே கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1871-லே Mr. Stoddart's proposal அதற்குப் பிறகு 1872-லே Mr. Roberson's proposal. அதற்குப் பிறகு 1884-லே Sir John Code's proposal. அதற்குப்பிறகு 1903-லே South Indian Railway Engineers' proposal. அதற்குப் பிறகு 1922-லே Sir Robert Bristow's proposal. அதற்குப் பிறகு 1956-லே மத்திய அரசாங்கத்தாலே அமைக்கப்பட்ட டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் தலைமையிலே அமைக்கப்பட்ட குழுவினுடைய ப்ரப்போசல். அதற்குப் பிறகு 1960-லே Captain Davis' proposal அதற்குப் பிறகு 1961-லே மத்திய அரசினுடைய Chief Hydrographer to the Government of India proposal. அதற்குப் பிறகு 1966-லே சி. வி. வெங்கடேஸ்வரன் அவர்களுடைய ப்ரப்போசல். 1967-லே அவர்களுடைய மாடிபைட் ப்ரப்போசல். ஆக இப்படி 14 ப்ரப்போசல்களைப் பெற்று, அதன் மீது பரிசீலித்து, இந்தத் திட்டம் ஒரு லாபகரமான திட்டம், பொருளாதார ரீதியிலே இது ஒரு நியாயமான திட்டம் என்று அந்த திட்டங்கள் எல்லாம் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அந்த திட்டத்தை நியாயப்படுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றைக்கு சுதந்திர இந்தியாவாக ஆனதற்குப் பிறகு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அரசாங்கங்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மட்டும் மொத்தம் 12 கமிட்டிகளை அமைத்துக்கொண்டு இருந்தது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இந்தத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கிட்டத்தட்ட 9 கமிட்டிகள் போடப்பட்டது. அதற்குப் பிறகு சுதந்திர இந்தியாவில் 3 கமிட்டிகள் போடப்பட்டு இந்தத் திட்டத்தை விரிவாக ஆராய்ந்து இந்தத் திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளை எல்லாம் பொறுப்புக்கு வந்த அரசாங்கங்கள், அத்தனையும் செய்து பார்த்துவிட்டுத்தான் இந்தத் திட்டத்தை இன்னும்

சிந்தித்துக் கொண்டு இருக்கிற நிலையில் வைத்துக்கொண்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாகவேண்டும். இந்த 14 ப்ரப்போசல்கள் மட்டுமல்ல. ஒவ்வொரு ப்ரப்போசலினுடைய அடிப்படையில், எந்தெந்தப் பகுதியில் கால்வாய்களைத் தோண்டலாம், எந்தெந்தப் பகுதியில் கால்வாய்களைத் தோண்டினால், செலவை மிச்சப்படுத்தலாம், அல்லது தூரத்தை மிச்சப்படுத்தலாம் என்ற வகையில் மட்டும் கிட்டத்தட்ட 14 அலைன்மென்ட்டுகளை, அந்தக் கமிட்டியினாலே ஆய்வுகளை நடத்திய அந்த அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு அறிக்கைகளாக கொடுத்திருக்கிறார்கள்.

இராமேஸ்வரத்திற்கு இந்தப் பக்கம் அமைக்கலாமா அல்லது மண்டபத்தின் பக்கம் அமைக்கலாமா என்று சொல்லி, உச்சிப்புளி என்ற அந்த இடத்தில் கூட இடத்தை எல்லாம் தோண்டி, அந்த இடத்தினுடைய தன்மைகளை குறிக்கிற வகையில் எல்லாம் ஆய்வுகளை நடத்தினார்கள். பிறகு இறுதியாக இன்றைக்கு இராமேஸ்வரம் பக்கத்திலே தங்கச்சிமடம் என்ற இடத்திலே அலைன்மென்ட் போட்டால் அது சரியாக இருக்கும் என்று இறுதியாக அவர்கள் கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 40 கி. மீ. தூரம் போகவேண்டும், அல்லது 40 கி.மீ. தூரத்திற்கு அந்தக் கால்வாயை அமைக்கவேண்டும் என்று பழைய காலத்திலே போட்ட திட்டங்களை எல்லாம் இப்போது மாற்றி மிகக் குறுகிய தூரம் இருந்தால் போதும், கிட்டத்தட்ட 12, 15 கி.மீ. தூரத்திற்கு உள்ளாக அந்தக் கால்வாய் அமைந்தால் கூட நாம் அதைச் செயல்படுத்த முடியும் என்ற அளவிற்கு இப்போது மறுபரிசீலனை செய்து, இன்றைக்கு அந்தத் திட்டங்களை தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(முற்பகல் 11-30)

எனவே தூரத்தையும் மிச்சப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போல செலவைக் கூட குறைத்திருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப காலத்திலேயே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு இந்தச் செலவைப்பற்றி நாம் கணக்கு போட்டுக்கொண்டிருக்கவேண்டிய அவசியமே இருந்து இருக்காது. 1965-66ல் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் அன்றைய பண மதிப்பீட்டின்படி 25½ கோடி ரூபாய்க்குள் இந்தத் திட்டத்தை நிச்சயமாக முடித்திருக்க முடியும். ஆனால் இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்கவேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 125 கோடிக்கு மேல் ஆகும் என்று கணக்கிடப்படுகிறது. அதைப்போல் ஆறு ஆண்டு காலம் இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது என்று கருதப்படுகிறது. எனவே அந்த வகையிலே இன்றைக்கு அந்த சாத்தியக்கூறுகளையெல்லாம் நம்முடைய

வல்லுநர்கள் ஆராய்ந்து அறிக்கைகளாகச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டத்தை, அரசாலே அமைக்கப்பட்ட டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையிலான அந்தக் குழு இரண்டாவது திட்டத்திலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றுகூட பரிந்துரை செய்து இருந்தது.

அதிலே அவர் சொல்லியிருக்கிறார்; இந்தத் திட்டமும், தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் ஒன்றோடொன்று இணைந்து விரைந்து செயல்படுத்தவேண்டிய ஒன்று என்ற அந்தக் கருத்தை சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர் அந்த அறிக்கை மூலமாக சொல்லியிருப்பது அந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், இன்றைக்கு நம்முடைய தூத்துக்குடி துறைமுகம் மட்டும் ஒரு International Ship Port- ஆக மாற்றப்படக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், பொருளாதார ரீதியில் இந்தத் திட்டம் லாபகரமாக அமையும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த கமிட்டியினுடைய அறிக்கையின்படி. 'Sethu project is economically viable. This Scheme will give 4-1/2% net return on the capital. 80% of the gross earnings from the Sethu Canal will be in the shape of foreign exchange.'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தின் மூலம் இன்றைக்கு தூரத்தையும் குறைக்க முடியும் என்று நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். எப்படி 'பனாமா கால்வாய்' திட்டத்தை நிறைவேற்றும்போது, எப்படி 'சூயஸ் கால்வாய்' திட்டத்தை நிறைவேற்றும்போது, கிட்டத்தட்ட 8 ஆயிரம், 9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தை மிச்சப்படுத்த, அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்களோ அதைப்போல இந்தத் திட்டமும் நிறைவேற்றப்படுமானால் கிட்டத்தட்ட 526 கிலோ மீட்டர் கடல் வழியை மிச்சப்படுத்த முடியும் என்று வல்லுநர் குழு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே தூரத்தை குறைப்பதோடு மட்டுமல்ல, கடல் பயணத்தை, கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ நாட்கள் அந்தப் பயண நேரத்தை குறைக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு இலங்கையைச் சுற்றிச் செல்லவேண்டுமென்று சொன்னால் 526 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். எனவே தூரமும் மிச்சம்; நேரமும் மிச்சம். அதைவிட வியாபார ரீதியில் நாம் பார்க்கிறபோது, நம்முடைய அரசாங்கங்கள், நேராக ரோடு செல்லவேண்டும்; மேடுபள்ளங்களை தவிர்க்கவேண்டும்; வளைவுகளைத் தவிர்க்கவேண்டும் என்று இன்றைக்கு திட்டமிட்டு பணத்தை செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எரிபொருளை மிச்சப்படுத்தவும், அதுதான் மிகமிக முக்கியமாக இங்கே இருப்பது; ஒரு பக்கம் நேரம் மிச்சமானாலும்

சரி, காலம் மிச்சமானாலும் சரி; இன்னொன்று, நாட்டிற்குத் தேவையான மிக முக்கியமாக இருக்கிற எரிபொருளை மிச்சப் படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை நமக்கு இருக்கிறது. அதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இன்றைக்கு எரிபொருளை மிச்சப்படுத்துவது நாட்டினுடைய சிக்கன நடவடிக்கைக்கு மிக அத்தியாவசியமாக இருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை நாம் அணுகி பார்க்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அத்தோடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், இங்கே இராமநாதபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், மதுரை மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே இருக்கிற இந்த 4 மாவட்டங்கள், இப்போது புதிதாக உருவாக்கப் பட்டு அண்ணா மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜர் மாவட்டம் போன்ற இத்துணை மாவட்டங்களிலும் நிச்சயமாக பொருளாதார புரட்சி ஏற்படக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்ன தூத்துக்குடி துறைமுகத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம், International ship Port அளவுக்கு வளரக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் நம் முடைய நாட்டில் ஏற்றுமதி பெருகும்; இறக்குமதியும் கூடும். அந்த அடிப்படையிலே பல தொழில்கள் பெருகும். வியாபாரம் பெருகும். அப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, இந்த மாவட்டத்தி னுடைய மக்களுடைய வாழ்க்கைத் தரம் நிச்சயமாக உயரும்.

அதைப்போல், இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்று பலமுறை நாம் பேசியிருக்கிறோம்; கண்டிருக் கிறோம். அந்த மாவட்ட மக்களுக்கு நிரந்தரமாக ஒரு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு இந்தத் திட்டம் நிச்சயமாக உதவி தரும். கிட்டத்தட்ட ஒரு 10 ஆண்டுகளுக்கு அந்த மாவட்ட மக்களுக்கு ஒரு நிரந்தர தொழிலை அல்லது நிரந்தர வேலை வாய்ப்பை, நிரந்தர வருமானத்தை கொடுக்கக்கூடிய ஒரு திட்டமாக இது உருவாகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எவ்வளவோ பணத்தை நாம் ஒதுக்குகிறோம். எவ்வளவோ திட்டங்களை நாம் தீட்டுகிறோம்; அந்தத் திட்டங்களெல்லாம் மக்களுக்காக, மக்களுடைய வாழ்வுக்காக மக்களுடைய முன்னேற்றத்திற்காக என்பதை இந்த நேரத்திலே நாம் உணர்ந்து பார்க்கவேண்டும். உருப்படி யான திட்டமாக, இந்த மாவட்டங்களை மேம்படுத்தக்கூடிய

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அல்லது வளர்ச்சியடையக்கூடிய ஒரு திட்டமாக, நிச்சயமாக இது இருக்கும் என்ற அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மத்திய அரசு எண்ணிப்பார்த்து செயல்படுத்தவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே என்னைப் பொறுத்த வரையில் தென்னக மாநிலத்தினுடைய வளர்ச்சியில் மத்திய அரசு அக்கறை கொண்டிருக்குமானால் இந்தத் திட்டத்தை மிக விரைவாக எடுத்து நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு இதை ஒரு உதாரண திட்டமாக எடுத்து செயற்படுத்திக் காட்ட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பொருளாதார வளர்ச்சி மட்டுமே இந்தத் திட்டத்தாலே நமக்கு கிடைக்க இருக்கிறது என்றால் சில பேர் பதில் சொல்லக்கூடும், காலம் தாழ்த்துவதற்கு என்ற நியாயத்தை கூட சொல்ல முடியும். ஏதோ பொருளாதார வளர்ச்சி என்று சொன்னால் இந்த 4, 5 மாவட்டங்களுக்கு வேறு திட்டங்கள் கூட நிறைவேற்றலாம் என்றும், வேறு திட்டங்கள் மூலம் அந்த மாவட்ட மக்களுடைய வளர்ச்சிக்கு திட்டங்கள் தீட்டிக்கொள்ளலாம் என்று எடுத்துச் சொல்ல முடியும். அதை விட மிக முக்கியமான ஒரு திட்டமாக, அதை விட ஒரு முக்கியமான நோக்கமாக நான் அதைத் தான் என்னுடைய தீர்மானத்திலே முதலிலே சொல்லி இருந்தேன். பாதுகாப்பு என்ற அந்த அடிப்படையில் என்ன என்ன நோக்கங்கள் என்பதை எல்லாம் நாம் இதுவரை சிந்தித்துக்கொண்டு இருந்தோமோ பொருளாதார நோக்கம் அல்லது வியாபார பெருக்கம், அதில் ஏற்றுமதி, இறக்குமதி பெருக்கம் அல்லது தூத்துக்குடி கப்பல் துறைமுகத்தை வளர்ச்சி பெறச் செய்வது போன்ற இந்த திட்டங்களுக்கு எல்லாம் மேலாக இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் நம்முடைய நாட்டின் பாதுகாப்பே இந்தத் திட்டத்திலே அடங்கியிருக்கிறது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அந்த பாதுகாப்பு என்ற வகையிலே மத்திய அரசு இந்தத் திட்டத்தை கொஞ்சம் கருதி பார்க்குமானால் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் நிச்சயமாக மத்திய அரசினுடைய கவனத்திற்கு வரும்.

ஒரு நாட்டுக்கு ஆபத்து என்பது ஒரு பக்கம் மட்டும் இருந்து வரக்கூடியது அல்ல. பல பக்கத்திலிருந்து ஆபத்து வரக்கூடிய சூழ்நிலை தான் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு மனிதனுக்கு தலையில் பட்டால் தான் அடி அது காலில் பட்டால் அது அடி இல்லை அல்லது முதுகில் பட்டால் அடி இல்லை என்று யாராவது கருதிவிடக் கூடாது. எனவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இந்தியாவுக்கு அபாயம் பாகிஸ்தானுடைய எல்லையில் மட்டுமோ அல்லது சைனாவின் எல்லை வரையில் மட்டுமோ இல்லை

என்பதை மட்டும் இந்த நேரத்தில் மன்ற உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தெற்கேயும் ஆபத்து ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக இந்த கால கட்டத்தில் உணர்ந்து பார்த்து ஆக வேண்டும் வடக்கே மட்டும் பாதுகாப்புக்கு பல கோடி ரூபாய் செலவு செய்து விடுவதால் நாடு பாதுகாப்பாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பது வீட்டின் பின்புற கதவை திறந்து வைத்துவிட்டு முன்புற கதவை பூட்டி வைத்துக்கொண்டு இனிமேல் திருடன் புக மாட்டான், அந்த அளவுக்கு பூட்டை பலமாக பூட்டி வைத்து விட்டேன் என்று சொல்வது போல் இது அமையும் என்பதை நான் இந்த நேரத்தில்சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு பக்கத்திலே இருக்கிற இலங்கை நம்முடைய நேச நாடாகத் தான் இதுவரை இருந்து வருகிறது. ஆனால் என்றைக்கு அந்த உறவு முறிக்கப்படுமோ என்ற சூழ்நிலையில் இருந்து வருகிறது. அதற்கு காரணம் இலங்கையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள் பிரச்சினை இன்றைக்கும் வேதனைக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்திய நாடு தலையிட்டு அந்தப் பிரச்சினையில் முடிவுக்கு கொண்டு வரக்கூடிய சூழ்நிலையில் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. அரசியலிலே நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர பகைவர்களும் இல்லை என்று சொல்லுவார்கள். அதே போல் என்றைக்காவது அந்த நாட்டோடு நமக்கு இருக்கிற உறவு முறியுமானால் அங்கே தான் ஆபத்து ஆரம்பிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்து மகா சமுத்திரத்திலே இலங்கையை சுற்றி வரும் கப்பல்கள் அந்த நேரத்தில் தடுக்கப் படலாம், தாக்கப்படலாம். இதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சொல்வார்கள், வந்த பிறகு யோசித்துக் கொண்டு இருப்பதைவிட வரும் முன் யோசித்து மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அதற்கான அக்கறையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அதை வலியுறுத்துவதற்காகத்தான் இதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாம் போடுவதற்கு மாற்றுச் சட்டை வைத்து இருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்திற்கு மாற்று ஏற்பாடு அல்லது இப்போது இருக்கிற நடைமுறைக்கு மாற்று ஏற்பாடு ஏதாவது நம்மிடம் இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. கப்பல்கள் என்று சொன்னால் இன்றைக்கு சென்னையில் இருந்து பம்பாய் செல்லவேண்டும் என்று சொன்னாலும் சரி, கல்கத்தாவிலிருந்து கொச்சிக்கு செல்லவேண்டும் என்று சொன்னாலும் சரி, அல்லது விசாகப்பட்டினத்திலிருந்து-தூத்துக்குடியிலிருந்து கொச்சிக்கு செல்ல வேண்டும் என்று சொன்னாலும் சரி இலங்கையைச் சுற்றித் தான் நம்முடைய கப்பல்கள் சென்று ஆகவேண்டும். ஆனால் நாம்

எதிர்பார்க்கிற அல்லது பயப்படக்கூடிய அந்த காலக் கட்டம் உருவாகுமானால் நம்முடைய கப்பல்கள் அந்த வழியாக செல்லு கிற போது ஆபத்து எற்படலாம்.

(முற்பகல் 11-40)

நான் சொன்னது போல், தடுக்கப்படலாம். அல்லது தாக்கப்படலாம். இந்தப் பிரச்சினையை எண்ணிப் பார்த்து எச்சரிக்கையாக ஏதாவது ஒரு மாற்று வழி கண்டாக வேண்டு மென்று சொன்னால், சேது சமுத்திரத் திட்டத்தை விரை வாக, விரைவுபடுத்தி முடித்து ஆகவேண்டும்.

இன்றைக்கு அமெரிக்காவினுடைய 'இந்தியன் ஓஷன் ஃப்ளீட்' இந்து மகா சமுத்திரத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கே நிறுத்தப்பட்டிருக்கின்ற அந்தக் கப்பலிலே இருக்கின்ற மாலுமிகளுக்கு இலங்கையிலே, 'ரெக்கரியேஷன் ஃபெசிலிட்டீஸ்' செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி, திரிகோணமலை யிலே 1000 ஹெக்டேர் நிலத்தை அவர்களுக்கு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எப்படியோ அமெரிக்க ஆதிக்கம் திரிகோணமலை யிலே கால் ஊன்றுவதற்கு அவர்களுடைய இடத்தை ஒப்பந்தப் பத்திரத்தின் மூலமாக வழங்கியிருக்கிறார்கள். இதை யெல்லாம் நாம் எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், ஆபத்து எந்த நேரத்திலும் வரக்கூடும், எந்த இடத்திலிருந்தும் இருந்துகொண் ருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை.

கொஞ்ச காலத்திற்கு முன்னாலே, பிப்ரவரி மாதம் என்று நான் கருதுகிறேன். ஹிந்து பத்திரிகையிலே கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. Sri Lanka has declared a security zone off the island's eastern coast giving Government forces power to search and arrest unauthorised people and vessels found there. என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இன்றைக்கு இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் அவர்களின் பாதுகாப்பு இடமாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நம்முடைய கப்பல்களுக்கு, நம்முடைய போக்குவரத்திற்கு, பாதிப்பு வரக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே பொரு ளாதார காரணத்தை தள்ளி வைத்து, பாதுகாப்பு என்று பார்த்தாலும் கூட, பாதுகாப்பு என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் நமக்கெல்லாம் முழுமை யாக காட்டிக் கொண்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பாதுகாப்பு என்கின்ற அடிப்படையில் இன்றைக்கு 'நெசசிட்டி' இருக்கிறது.

அதேபோன்று இந்தத் திட்டத்திற்கு 'possibility' இருக்கிறது. 'feasibility' இருக்கிறது. 'viability' இருக்கிறது. இன்னும் இலாபகரமாக நிர்வகிக்கின்ற அளவிற்கு probitabilityயும் இருக்கிறது. எனவே இவ்வளவு இருந்தும் இந்தத் திட்டம் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது என்ற உணர்வு இருக்கிறது என்று சொன்னால், நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தக் காரணங்களைக் கொண்டு தான் நாம் மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

கல்யாணங்களுக்குக்கூட பொருத்தம் பார்ப்பார்கள். அதற்கு 10 பொருத்தங்களைப் பார்ப்பார்கள். 10 பொருத்தங்களில் 8 சரியாக இருந்தால் கூட, நல்ல பொருத்தம் என்று சொல்லி கல்யாணத்தை முடிப்பார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அனைத்துப் பொருத்தங்களும் சரியாக இருக்கின்றன. ஆனால் நிறைவேற்றுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நிலையில் மத்திய அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது ஒன்றுதான். இந்த காலதாமதத்தைப் பார்க்கிறபோது மைய அரசு தென்னக மாநிலங்களைப் புறக்கணிக்கிறதோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. 'சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டுமென்று, சொல்வது போன்று மத்திய அரசு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, தென்னக மாநிலங்களை நாங்கள் புறக்கணிக்கமாட்டோம், தென்னக மாநிலங்கள் மீது நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம் என்று சொல்வது உண்மையாக இருக்குமானால், அதை நியாயப்படுத்த வேண்டும் என்றால், இந்தத் திட்டத்தை அவர்கள் விரைவு படுத்த வேண்டும். எனவே இந்த களங்கத்தை போக்க வேண்டும். நம்முடைய சந்தேகத்தைப் போக்கியாக வேண்டும். அவர்கள் மீது இருக்கின்ற களங்கத்தை போக்கியாக வேண்டுமென்று சொன்னால், இந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில், சந்தர்ப்பம் வருகின்றபோதெல்லாம் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி மத்திய அரசிடம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள சொல்லிக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தை வலியுறுத்தியும் வருகிறார்கள். எனவே இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில், என்னுடைய பெயரால் இதைத் தனி தீர்மானமாகக் கொண்டு வந்தாலும் கூட, இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கட்சித் தலைவர்கள், மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களை, ஆக்க பூர்வமான கருத்துக்களை எல்லாம் நிச்சயமாக சொல்வார்கள். நான் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது மற்ற கட்சித் தலைவர்கள்,

உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பிறகு, அரசு ஆராய்ந்து பார்த்து, தனித் தீர்மானம் என்கின்ற நிலைமையை மாற்றி அரசாங்கமே கூட எங்களுடைய ஒட்டு மொத்தமான கருத்துக் களை எல்லாம் தெரிந்து கொண்ட பிறகு அரசாங்கமே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் இந்தத் திட்டத்திற்கு வலிவு இருக்கும் என்று கருதி அதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். காரணம் எப்படியும் காரியம் நடந்தாக வேண்டும். அது தனித் தீர்மானமாக, அதன் மூலம் நடந்தாலும் சரி, அரசின் மூலமாக நடந்தாலும் சரி. நம்முடைய ஒட்டு மொத்தமான குரலினுடைய எதிரொலியாக மத்திய அரசு அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் நமக்கு காரியம் நடக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் இந்தத் தீர்மானத்தின் மீது நாம் எல்லாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, அரசு தீவிரமாக இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

மத்திய அரசோடு தொடர்பு கொள்ள வேண்டும். அதைக் காலத்தே செய்வதற்கு வலியுறுத்த வேண்டும். அதுதான் இப்போது முக்கியம். இன்றைக்கு மத்திய அரசு, திட்டத்தை ஒத்துக் கொள்கிறோம், அல்லது திட்டத்தை நாங்கள் நிச்சய மாக செய்வோம் என்ற உறுதியைக் கூட அளிக்கலாம். ஆனால் எப்போது செய்ய இருக்கிறார்கள் என்ற அந்த வரையறையை, கால அளவை நிச்சயம் நாம் பெற்றாக வேண்டும். எனவே, மிக விரைவிலே மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்கிற வகையில் அந்தத் திட்டத்தை அவர்களின் கவனத்திற்கு எப்படி யாவது கொண்டு செல்ல வேண்டும்.

இன்றைக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சேலம் இரும்பாலைத் திட்டம் வரவேண்டும் என்பதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு எழுச்சி நாளை அன்றைக்குக் கொண்டாடி னார்கள். எனவே, இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்கிற வகையில் நம் முடைய புரட்சித் தலைவர், இதயதெய்வம் மாண்புமிகு தமி ழக முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தினுடைய தனித் தன்மையை, முக்கியத்துவத்தை வலியுறுத்துகிற வகையில், இன்றைக்கு ஆட்சி சார்பிலே வலியுறுத்தி வந்தாலும், ஆட்சி சார்பிலே பல சந்தர்ப்பங்களிலே எடுத்துச் சொல்லி வந்தாலும் இன்றைக்கு இந்த மன்றத்திலே இருக்கிற, நாட்டிலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும் அதற்கு ஆதரவு தருகிறார்கள் என்ற நிலையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், கோரிக்கை நாளாக, ஒரு நாளை அறிவிப்பு செய்து, அனைத்துக் கட்சித் தலைவர்களும்,

அந்த நாளை கோரிக்கை நாளாகச் சொல்லி, மத்திய அரசிற்கு அத்திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்த, ஒரு கோரிக்கை நாளைக் கொண்டாட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு எத்தனையோ கோடிகளை மத்திய அரசாங்கம் எவ்வளவோ காரியங்களுக்காகச் செய்கிறது. நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. ஏதோ காரணங்களுக்காகத்தான் செய்கிறது. உதாரணமாக எடுத்துக் கொண்டால, 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டி கூட, டெல்லியிலே நடந்தது. அதற்குக் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் மதிப்பீடு செய்து, அது முடிவுடைகிறபோது 620 கோடி அளவுக்கு அந்தத்தொகை செலவிடப்பட்டதாகக் கூட கணக்குச் சொல்கிறார்கள். 620 கோடி ரூபாய் அளவில் ஒரு ஆசிய விளையாட்டை நடத்துவதை முக்கியமாக நாம் கருதுகிற இந்தக் காலக் கட்டத்தில், நாட்டுப் பாதுகாப்புக்காக, தென்னக மாநிலங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காக இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, ஒரு சில கோடி ரூபாய் — — 150 கோடி ரூபாய் அதிக பட்சமாக இதற்கு ஆகலாம் — —இந்தத் திட்டத்தை நிறைவேற்ற காலதாமதம் செய்வது எந்தவிதமான நியாய அடிப்படையிலேயும் சரியாக இருக்காது. எனவே, மத்திய அரசு ஏற்கனவே சொன்னது போல், தென்னக மாநிலங்களினுடைய வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருந்தால் இந்தத் திட்டத்தை விரைவு படுத்த வேண்டும். அப்படி விரைவுப்படுத்துவதற்கு, அதனுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு நான் கொண்டு வந்திருக்கிற, இந்த மன்றத்திலே இப்போது விவாதித்துக் கொணடிருக்கிற, தனித் தீர்மானம் நிச்சயமாகப் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

இங்கே சர்வ கட்சித் தலைவர்கள் எல்லாம் பேச இருக்கிறார்கள். உறுப்பினர்கள் எல்லாம் பேச இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்கள, எண்ணங்கள், இந்த தீர்மானத்திற்கு வலிவூட்டுவதாக நிச்சயமாக அமையும் என்று சொல்லி, நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்வது போல், இறுதியாக எனக்கு பதில் சொல்கிற வாய்ப்பு இருக்கிறது என்றா் சொன்னாலும் தேவைப்பட்டால் என்னுடைய பதிலுரையில சில கருத்துக்களை நான் அப்போது சொல்லலாம் என்று சொல்லி, மன்ற உறுப்பினர்கள், மாற்றுக் கட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்து வைத்து இந்தத் திட்டத்தை நம்முடைய காலத்திலாவது, நம்முடைய தலைமுறையிலாவது நிறைவேற்றுவதைப் பார்க்க வேணடும் என்ற அடிப்படையில் உங்கள் கருத்துக்கள் அமையவேண்டும் என்று சொல்லி, உங்களுடைய கருத்தை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி, இந்த அளவோடு உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 11-50)

*திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரரும், மணிமுத்தாறு கண்ட மாவீரரும், நெல்லை மாவட்டம் தந்த காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவரும் ஆகிய எங்கள் ஐயா கே. டி. கோசல்ராம் அவர்கள், தன்னுடைய இறுதி மூச்சு வரை தன்னுடைய வாழ்நாளிலேயே கண்டுவிட வேண்டும் என்று காத்திருந்த இந்த சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி இன்றைக்கு அவையினுடைய உணர்வுகளை எல்லாம் தட்டி எழுப்புகின்ற வகையாக, இதன் மூலமாக தமிழக அரசின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கொடுத்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வழி மொழிந்து பேசுகின்ற முறையில் அவருடைய திட்டத்தை நான் வரவேற்றாலும், அவருடைய தீர்மானத்தை வரவேற்றுப் பேசினாலும் கூட, அவர்கள் சொன்ன கருத்துக்களிலே சிலவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்துக்களைச் சொல்ல வேண்டிய ஒரு சரித்திரக் கட்டாயத்திற்கு என்னை தள்ளிவிட்டார்களே என்ற வேதனையோடு பேசுகிறேன். ஏனென்றால், எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் வரவேற்கப்படவேண்டியது தான். நாட்டினுடைய வளர்ச்சிக்காக, ஆக்கப் பணிகளுக்காக இருக்க வேண்டிய திட்டத்தை, இது போன்ற திட்டங்களை எல்லாம் வரவேற்று இந்த மாமன்றத்திலே பேசுகிறபோது, அப்பொழுது மத்திய அரசு குற்றம் செய்தது என்பதைப்போலச் சொல்லி, மத்திய அரசு இதைக் காதாரக்கேட்கவில்லைஎ ன்பது போன்ற வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்துவீர்களேயானால், அதற்கு வார்த்தைக்கு வார்த்தை நாங்கள் பதில் சொல்ல ஆரம்பித்தால் அல்லது எங்கள் பக்கத்திலே சொல்லுவார்களே, எடைக்கு எடை பதில் சொல்வது என்று, அதைப்போல நாங்கள் சொல்ல ஆரம்பித்தால் விவகாரங்கள் விகாரங்கள் ஆகி, இப்படிப்பட்ட நல்லதொரு திட்டம் நாட்டுக்கு வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னைகள் எல்லாம் வந்து இப்படிப்பட்ட நல்ல காரியம் கெட்டுப்போய் விடக்கூடாதே என்பதற்காக நான் நண்பர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், நீங்கள் பேசும்பொழுது தயவு செய்து ஒன்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இன்றைக்கு ஆளுங் கட்சியில் இருப்பவர்களுக்குத்தான், ஆட்சியிலே இருப்பவர்களுக்குத்தான், ஆட்சியிலே உள்ள கஷ்டங்கள், ஆட்சியிலே உள்ள இடர்ப்பாடுகள், ஆட்சியிலே உள்ள துன்பங்கள் எல்லாம் தெரியும். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்ன வேண்டுமென்றாலும் பேசிவிடலாம், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற ஒரே காரணத்திற்காகக்கூட அப்படிப் பேசிவிடலாம் அல்லது We may speak to the galleries அல்லது எங்கள் தரப்பிலே இருப்பவர்கள் கை தட்ட வேண்டுமென்பதற்காகப் பேசிவிடலாம், வெளியிலே இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும் என்பதற்காக வார்த்தைகளை விட்டு விடலாம். ஆனால் இந்த மாமன்றத்திலே பேசுகின்றபொழுது பொறுப்போடு பேச வேண்டும்.

நடந்து முடிந்த ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவில் நான் உறுப்பினராக இருந்தேன். மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக இருந்தபொழுது அங்கே சாலைகளையும் பாலங்களையும் பற்றிய விஷயங்களைப் பற்றி விவாதிக்கின்ற வாய்ப்புகள் எல்லாம் எங்களுக்குக் கிடைத்தது. அதன்மூலம், என்னென்ன சாலைகள் போடப்படவில்லை. என்னென்ன பாலங்கள் கட்டப்படவில்லை என்ற விவரங்களையெல்லாம் நான் தர ஆரம்பித்தால் என்ன நிலைமை ஆகும்? ஒவ்வொன்றுக்கும் பணம் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி, In a developing country finance is the most difficult factor என்பதை உணர்ந்திருப்பதால், அதிலே உள்ள கஷ்டங்களை உணர்ந்திருப்பதால், ஆனால் அவற்றைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் ஒருமுறைக்கு பத்து முறை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தாலாவது என்றாவது ஒருநாள் திட்டம் வரவேண்டும் என்ற முறையில் ஒரு அபிலாட்சையில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நான் இதைச் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், மற்றவர்கள் இதைக் கேட்கவில்லை என்ற கருத்தைத் தயவு செய்து வழங்க வேண்டாமென்று ஏற்கனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்களையும், பிறகு பேச இருக்கின்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் அவசியத்தை, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல எங்கள் அன்பிற்குரிய தலைவர் மறைந்த பெருந்தலைவர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் பாராளுமன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி, இந்தத் திட்டத்தைப்பற்றி வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்து அடுக்கடுக்காகப் பெயர்களைச் சொல்லிக் கொண்டே வந்து கடைசியாக ஏ. ஆர். முதலியார் கமிட்டி என்று சொல்லி முடித்தார்களே, ஏன் கே. டி. கோசல்ராம் அவர்களுடைய பெயரைச் சொல்லவில்லை? அரசியல் காரணத்திற்காக அந்தப் பெயரைச் சொல்ல மறுக்கிறார்கள் என்று நாங்கள் சொல்ல முடியுமா? ஏதோ விட்டு விட்டார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி, குற்றம் கண்டு பிடித்துக்கொண்டிருக்கக்கூடாது. எல்லாக் கமிட்டிகளும் போடப்பட்டது என்று சொன்னார்களே, அவர்கள் இங்கே சொல்லாத கமிட்டியும் ஒன்று இருக்கிறது. அதுதான் நடராசன் கமிட்டி, அப்படி நடராசன் கமிட்டி என்று கூட ஒரு கமிட்டியைப் போட்டார்கள். சேதுவை மேடுபடுத்தி வீதி சமைப்போம் என்று மகாகவி பாரதி சொன்னார். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. நாட்டின் வளர்ச்சிக்கு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, இராமநாதபுரம் மாவட்ட மக்களின்

வளர்ச்சிக்கு என்றெல்லாம் இந்தத் திட்டம் வேண்டியதுதான். இப்பொழுது கடைசியாகச் சொல்லப்படுகின்ற காரணம், நம்முடைய நாட்டினுடைய பாதுகாப்புக்காகவும் இந்தத் திட்டம் வேண்டியது தான். இதை யாரும் மறுக்கவில்லை.

ஆனால், எந்தவொரு திட்டத்தையும் எப்பொழுது செய்ய வேண்டும், யாரால் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதில் பலகால கட்டங்கள், பல விதிமுறைகள் இருக்கின்றன. நான் கேட்க விரும்புகிறேன், எந்தவொரு திட்டமாக இருந்தாலும் மத்திய அரசாங்கம் நிதி தரவில்லை, ஆகவே, இதைச் செய்யவில்லை என்று சொல்வதை விட, மத்திய அரசேகூட இந்தத் திட்டத்திற்கு நிதியைத் தராவிட்டாலும்கூட, மாநில அரசே தன்னுடைய நிதியைக்கொண்டு சேது சமூத்திரத் திட்டத்தைக் கொண்டு வரும் என்று சொன்னால் என்ன? அப்படிச் சொன்னால் அதை இருகரம் நீட்டி வரவேற்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். 150 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னார்கள். 250 கோடி ரூபாய்க்கு துண்டு பட்ஜெட் போட்டிருக்கிறோம். பிறகு 7 கோடி ரூபாய்க்கான துண்டைக் குறைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 240 கோடி ரூபாய்க்கு மிச்சம் வரும் அளவிற்கு அதைக் குறைத்திருக்கிறோம். அதிலேயிருந்து . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எல்லா வரிகளையுமே மாநில அரசுகளே வசூலித்துக் கொள்ளலாம் என்று மைய அரசு அனுமதி கொடுத்து விட்டால் நாங்களே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடுவோம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவரவர்களே, எல்லாச் சலுகைகளையும் மத்திய அரசினுடைய நிதியிலேயிருந்தே செய்து கொள்ளலாம் என்றால் மாநில அரசு என்ற ஒன்றே தேவையில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு என்று ஒன்று இருப்பதால்தான் நாங்கள் கேட்கிறோம். அது கடமையைச் செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்காகத்தான் முதலிலேயே சொன்னேன். கருத்து வேறுபாடு இருப்பதைப்போல நாம் பேசிக்கொள்ள ஆரம்பித்தால், நான் சொல்லும் கருத்தை நீங்கள் மறுப்பதும், நீங்கள் சொல்லும் மறுப்புக்கு நான் பதில் சொல்வதாகவும் இருந்தால்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது என்பது தான் எங்கள் கருத்து. சேது சமூத்திரத் திட்டம் வர வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள்

விளக்கினார்கள். மைய அரசைக் குற்றம் சொல்வதாகக் கருதிக்கொண்டு, அதைப் பாதுகாப்பதற்கான கேடயமாக நம்முடைய வேங்கடரமணன் அவர்கள் பேசுவது சரியல்ல. இதில் அவையின் ஒன்றுபட்ட கருத்தாகப் பிரதிபலிக்க வேண்டும். இந்தக் கருத்து மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுதான் கருத்தே தவிர வேறொன்றுமில்லை. திட்டம் வர வேண்டுமென்பதுதான் முக்கியம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, மைய அரசை வேங்கடரமணன்தான் கேடயமாக இருந்து பாதுகாக்க வேண்டும் என்கிற அளவிற்கு மைய அரசு பலகீனமாக இல்லை. அப்படி மைய அரசைக் காப்பாற்றக்கூடிய அளவிற்கு நான் என்னைக் கருதிக்கொள்ளவும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நீங்கள் பாதுகாக்கின்ற வேலையை விட்டுவிட்டு இந்தத் திட்டத்தினுடைய அவசியத்தை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாரையும் பாதுகாக்கின்ற நோக்கத்திலே இங்கே பேசப்படவில்லை. பேசப்படுகின்ற கருத்துக்கள் யாருடைய மனதையும் புண்படுத்தாமல் இருக்க வேண்டுமென்பதைத் தான், மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். ஆகவேதான் சொன்னேன், பணம் இல்லையென்ற காரணத்தாலே, மைய அரசு இதைச் செய்யவில்லை என்றால், மாநில அரசு கூட அதை எடுத்துச் செய்யலாம் என்று. அந்தக் கருத்து கூட அந்த அடிப்படையிலே எடுத்துச் சொல்லப்பட்டதே, தவிர, வேறு அல்ல. அப்படியானால், மத்திய அரசிலிருந்து அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படவில்லை என்று கூட நாம் சொல்லிக் கொண்டிருக்கலாம். அதைக் கூட சொல்லலாம். ரூ. 2 கோடி செலவிலே ஆரம்பித்த பாம்பன் திட்டத்தினுடைய மதிப்பீடு இன்றைக்கு ரூ. 16½ கோடியாக உயர்ந்து, அதைச் செய்வதற்காக, மத்திய அரசு எக்சிகியூஷன் செய்யுங்கள் என்று மாநில அரசுக்குப் பணம் கொடுத்ததால்தான் அந்த பாம்பன் திட்டம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே, முன் கதவைப் பூட்டிவிட்டு, பின் கதவைத்திறந்து விட்டிருக்கிறார்கள் என்ற வாதங்களெல்லாம் கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும் நாளைக்குப் பத்திரிகையிலே படிப்பதற்குப் பரபரப்பான செய்திகளாக இருந்தாலுங்கூட, வாதத்திற்காகக் கூட அவை உண்மையான செய்திகள் அல்ல என்பதைத்தான் நான் இந்த மன்றத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த சேது சமுத்திர திட்டம் என்பது வரவேற்கக் கூடிய திட்டம்; எல்லோரும் ஏற்றுக்கொள்கின்ற திட்டம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, திரு. வேங்கடரமணன் சொல்கின்ற கருத்து ஆபத்தான கருத்து. திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டது இந்திய நாட்டினுடைய பாதுகாப்பிற்கு வடக்குப் பாகத்தைப் பலப்படுத்திவிட்டு, தெற்குப் பகுதியை நீங்கள் புறக்கணிப்பது அபாயமானது என்பது. அந்தக் கருத்திலே திரு. வேங்கடரமணன் அவர்கள் மாறுபடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்து, அவ்வாறு நீங்கள் சொல்வது தான் தவறு என்பதுதானே தவிர, முன் வாசலைப் பூட்டிவிட்டு, பின் வாசலைத் திறக்க வேண்டுமென்று யாருமே சொல்லவில்லை. நீங்கள் படுகின்ற அச்சங்கள் எல்லாம், இதற்கு அப்பாற்பட்ட அச்சங்களே தவிர உண்மையான அச்சங்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால், ஸ்ரீலங்கா என்பது நமக்கு எதிரி அல்ல. நம்முடைய கருத்து எல்லாம், சேது சமுத்திர திட்டம் வர வேண்டுமென்பதுதான். அதை எவ்வாறு கொண்டு வருவது? அதைச் சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன? அதற்கான பணங்களை நாம் எங்கேயிருந்து சம்பாதிப்பது? அந்தத் திட்டத்தை எதன் மூலமாகச் செயல்படுத்துவது? நம்முடைய மாநில அரசுக்கு எத்தனையோ திட்டங்கள் வருகின்றபொழுது, பார்ட் 2 ஸ்கீமிலே என்று சிலவற்றை நாம் எடுத்துக்கொள்கிறோம். சிலவற்றை நாம் தள்ளி விடுகின்றோம். தள்ளி விடுகின்ற காரணத்திற்காக அந்த ஒரு திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை, இந்த மாநில அரசு அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த மாநில அரசு அந்தத் திட்டத்திற்காக, தம்முடைய சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை என்று அல்ல. என்றைக்குமே, பொருளாதாரத்திலே சொல்வார்கள் Human wants are many bat resources are scarce என்று. அந்த பொருளாதார விதிப் படி, இன்றைக்குத் திட்டங்கள் வேண்டுமென்று விரும்புகிறோம், திட்டங்கள் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். என்னுடைய தொகுதியிலே நான் வரவேண்டுமென்று விரும்புகின்ற திட்டங்களை, நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரிடத்திலே நேரிலே கேட்டிருக்கிறேன். எனக்கு உடனடியாக ஒரு விவசாயக் கிடங்கு தாருங்கள், ஒரு அணையைக் கட்டித் தாருங்கள்; ரூ. 2½ கோடியிலே தென் காசிக்குத் தண்ணீர் திட்டத்தைத் தாருங்கள்; வேறு இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கலாம். தென் காசியிலே தண்ணீர் இருக்கிறது. கடனா நதியிலிருந்து தென் காசிக்குத் தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று சொல்லும் போது, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அது இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்து விட்டாலுங்கூட........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான திட்டத்தைப் பற்றி — தமிழகத்திற்குத் தேவையான ஒரு திட்டத்தைப் பற்றி செம்மலை சொல்பறார். அதற்குப் பதில் சொல்வதாகக் கருதிக் கொண்டு சேது கிமுத்திரம் கால்வாய்க்குப் பதிலாக, தென்காசி கால்வாயைப் பற்றி பேசுவது சரியல்ல.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னதுதான் சரி. அமைச்சர் அவர்கள் குறுக்கீட்டுத் துறை அமைச்சராக இருக்கிற காரணத்தால்......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்தைச் சொல்லுகிறபொழுது, விளக்கம் சொன்னால்தான் சரியாக இருக்கும். அதற்காகக் குறுக்கீட்டுத் துறை அமைச்சர் என்ற பெயர் வைப்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினரே பலமுறை குறுக்கீட்டுத் துறை உறுப்பினராக இருக்கிற காரணத்தால், எனக்கும் அந்த உரிமை உண்டு என்று கருதுகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : திட்டங்கள் என்று வருகின்ற பொழுது சேதுசமுத்திரமும் திட்டம்தான். தென் காசி குடிநீர்த் திட்டமும் திட்டம்தான். அப்படியென்றால் தென்காசி நகருக்கு தண்ணீர் வேண்டாம் என்று சொல்லுகிறார்களா? அதைத் திட்டமே இல்லையென்கிறார்களா? தென்காசி மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் தேவையில்லையென்று சொல்லுகிறார்களா? அது முக்கியம் அல்ல என்று சொல்கிறார்களா? அப்படியென்றால் தென்காசிக் குடிநீர்த்திட்டத்தை நான் வலியுறுத்தவே இல்லை..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் அதை பற்றி அல்ல. சேதுசமுத்திர திட்டம் பற்றி பேசும்போது, ஒவ்வொரு ஊருக்கும் குடிநீர் கொடுங்கள் என்று கேட்பது எப்படிப் பொருத்தமாகும், அமைச்சர் அவர்கள் திட்டத்திற்கு விரோதமாகப் பேசாதீர்கள் என்று சொல்கிறார். நீங்கள் அதை விட்டு விட்டு, தென் காசித் திட்டத்தைப் பற்றிப் பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய இந்த தனி நபர் தீர்மானம் சட்ட மன்றத்திலே எடுக்கப்பட்டவுடனே எனக்கு ஏற்பட்ட எண்ணம், எப்படியும் நம்முடைய மாநில அரசு கேட்கிற கோரிக்கைக்கு ஒரு பெரு வலு ஏற்படும் என்று நான் கருதினேன். இப்பொழுது போகின்ற போக்கைப் பார்த்தால்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்கள் பேசுகின்ற பொழுது உறுப்பினர்கள் உட்கார வேண்டும். திரு. வேங்கடரமணன் நின்று கொண்டே இருக்காதீர்கள். கொஞ்சம் விதிகளை எல்லாம் பாருங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த விவாதம் போகின்ற வழியைப் பார்க்கும்போது ஒருவேளை ஏற்கனவே இருப்பதைப் போல் மத்திய அரசிலே இதற்கு முக்கியத்துவம் குறைந்துவிடுமோ என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

(நண்பகல் 12-00)

எனவே தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்வது மத்திய அரசு மாநில அரசு என்று பார்க்காமல் நமக்குத் தேவையான அந்தத் திட்டம் வரவேண்டும் என்பதற்காக ஆக்கப்பூர்வமான கருத்துக் களைச் சொல்லி மத்திய அரசை நாம் சொல்லுகின்ற போது, அது உள்நோக்கத்தோடு அல்ல, இந்தத் திட்டம் எப்படியாவது வரவேண்டும், இதற்கு எப்படிப்பட்ட முறையை கையாண் டாலும் பரவாயில்லை என்ற உணர்வோடு சொல்லுகிறார் என்று நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். அதே அடிப்படை யில்தான் நீங்கள், மாநில அரசிலே பல பிரச்சனைகளை பேசு கின்றபோதுகூட, காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாகக்கூட அப்படி இடித்து உரைக்கின்ற நிலையை நாம் பல இடங்களில் பார்க்கின்றோம். எனவே இதைத் தவறாக எடுத்துக் கொள் ளாமல் தயவு செய்து இதற்கு மேலே விவரங்கள் இதற்கு வலுப் படுத்துவதாக, மத்திய அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை கொஞ்சம் கேட்டு மேலும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கருத்துக்கு நான் முழுமையாக ஒத்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் நான் பேச ஆரம்பிகின்ற போது, அதே கருத்தை சொல்லித்தான் பேச ஆரம்பித்தேன். இதுபோன்ற ஒருசில மாற்று கருத்துக்களை நீங்கள் சொல்கின்றபோது நல்ல திட்டங்கள் எல்லாம் வீணாக போய்விடக்கூடாது. அவை யினுடைய குறிப்பை எடுத்துப் பார்த்தாலும் சரி, உங்களுடைய நினைவேடுகளை புரட்டிப்பார்த்தாலும் சரி, நான் ஆரம்பிச் கின்றபோது அப்படித்தான் ஆரம்பித்தேன் என்பது தெரியும். தயவு செய்து நல்லதொரு திட்டத்திலே, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டத்திலே, எல்லோரும் விரும்புகின்ற திட்டத் திலே, நாட்டிற்கு நயம் பயக்கக்கூடிய திட்டத்திலே, நீங்கள் பேசுகின்றபோது, பேசுகின்ற வார்த்தைகள் மற்றவர்களுடைய மனதை புண்படுத்தாமல் பேசுங்கள் என்று தான் நான் ஆரம் பத்திலே குறிப்பிட்டேன். திட்டம் வேண்டாம் என்று சொல்ல வில்லை. இருகரம் கூப்பி வரவேற்கிறேன். (குறுக்கீடு).....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை பொறுத்த வரையில், மாற்றார் என்றோ அல்லது வேறு தரப்பினர் என்றோ இல்லை. எல்லோரும் ஒன்றாக இருந்து நாம் சொல்லி யிருக்கிறோம். இப்பொழுது அவையினுடைய கவனத்திற்கு வரவேண்டிய ஒன்று, சேது சமுத்திர திட்டம் என்பது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே தேவையான ஒரு திட் டம். அதை மத்திய அரசிலே உள்ளவர்கள் கூட ஏற்றுக்

கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில், இன்னும் வராமல் இருக்கிறதே என்று நாம் சொல்கின்றபோது, கொண்டு வரவேண்டியவர்கள் நம்முடைய கண்ணுக்கு படுகிறார்கள். ஆகவே தான் மத்திய அரசைப் பற்றி சொல்ல வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்படுகிறது. அதற்காக நாம் மத்திய அரசை ஆதரித்து பேச வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் செய்ய வேண்டிய ஒரு கடமை, தங்களுடைய கட்சி கூட்டத்திலே கட்சி எம்.பி. மூலாமக பிரதமரைச் சந்தித்து நாங்கள் இந்தத் திட்டத்தைத் கொண்டு வருவதற்கு முயற்சி எடுப்போம் என்று சொல்வதுதான் உரிய தாக இருக்குமே தவிர, இது வாத பிரதிவாதத்திற்கு இடமானது என்றோ, இதிலே ஒருவருக்கு தேவை ஒருவருக்குத் தேவை யில்லை என்றோ அல்ல. இது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல. உள்ளபடியே இந்தியாவினுடைய பாதுகாப்பு நலனுக்கு கொண்டு வரவேண்டிய ஒன்று. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டு மென்றால், இதுவரையில் வராமல் இருப்பதற்குக் காரணம், பொருளாதாரக் காரணம் அல்ல, நிதி பற்றாக்குறை அல்ல, ஸ்ரீலங்கா நட்பு நாடாக இருந்தது. அதனுடைய பொருளா தாரம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அதைக் கொண்டுவராமல் இருந்தோமே தவிர வேறல்ல. ஆகவே நிதிப் பற்றாக்குறை என்று தென்காசி திட்டத்தோடு இதை ஒப்பிட்டு பேச வேண்டாம். இதை கண்டிப்பாக கொண்டுவர வேண்டும். நீங்களும் அதை வலியுறுத்துகிறீர்கள். நாமும் அதைச் சொல்கிறோம். இது தனியார் தீர்மானமாக இருந் தாலும், தமிழக மக்களுடைய அனைத்து பேர்களுடைய தீர்மானம் ஆகும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் குறிப்பிட்டதுபோன்ற, காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோ ரும் டில்லியிலே சென்று முதன் முறையாக நம்முடைய பாரதத் தினுடைய பிரதமர் ராஜீவ் காந்தியை நேரிலே சந்திக்கின்ற நல்லதொரு வாய்ப்பை பெற்றபோது, நாங்கள் கொடுத்த மனுவிலே, முதல் திட்டமே இந்த சேது சமுத்திர திட்டத்தை நீங்கள் உடனடியாக எங்களுக்கு பெற்றுத்தரவேண்டும் என்பது தான். அதைத்தான் முதலிலே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் எத்தனையோ ஆங்கிலேயர் களுடைய பெயர்களைச் சொன்னீர்களே, எங்களுடைய கே.டி. கோசல்ராம் அவர்கள் பெயரை நீங்கள் விட்டு விட்டீர்களே என்று தான் நானும் கூட சொன்னேன். எதற்காக அதைச் சொல்கிறேன் என்றால், காங்கிரஸ் கட்சியில் இருக்கின்றவர் களும் சரி, காங்கிரஸ்காரர்களும் சரி, தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கானாலும் சரி, இந்தியாவினுடைய வளர்ச்சிக்கா னாலும் சரி, அவர்கள் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்ல. நல்ல திட்டங்கள் எங்கேயிருந்தாலும் அது வரவேற்கப் படுகின்றன என்ற காரணத்தினால் தான், சத்துணவுத் திட் டத்தை இந்த அவையிலே நானே பலமுறை பாராட்டியும், அந்தத் திட்டத்திலே சில தவறுகள் நடந்தபோது சுட்டியும்

காட்டியிருக்கிறேன் என்று சொன்னார்கள். என்னுடைய உணர்வுகள், நினைவுகள் எல்லாமே அந்தத் திட்டம் வர வேண்டும், அதை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும் என்பது தான். இன்னும் சொல்லப்போனால், எனக்கு ஆரம்ப காலத்திலிருந்து, எனக்கு அரசியலில் வழிகாட்டியாக இருந்த கே.டி. கோசல்ராம் அவர்கள் இரவு பகலாக என்னுடைய வாழ் நாளிலேயே இந்தத் திட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று பலமுறை என்னிடத்தில் கூறியிருக்கிறார்கள். பலமுறை கூட இருந்து அந்த திட்டத்திற்கான.........(குறுக்கீடு).

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் சேது சமுத்திர திட்டத்தை விரைவில் கொண்டுவரவேண்டும் என்று இந்த சபையின் மூலமாகக் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் இந்த சேது திட்டத்தை விரைவில் கொண்டுவருவதற்கு கருத்து சொல்ல விரும்புகிறாரா? அல்லது அவர் சொல்லக்கூடிய கருத்துக்கு விமரிசனமாக பேசிக்கொண்டு இருக்கிறாரா என்பது தெரியவில்லை. ஆகவே சேது சமுத்திர திட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி, மத்திய அரசுக்கு வற்புறுத்துவதற்கு தயாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : பேரவை துணைத் தலைவர் அவர்களே கே.டி. கோசல்ராம் அவர்கள் இதற்காக பாடுபட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அவருடைய எண்ணத்தை நிறைவேற்றுவதாகவே வைத்துக் கொண்டு, இதை செயல்படுத்துகிறோம். அதில் ஒன்றும் தவறு இல்லை.

இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோது பாரதியார் பாடலை நாம் சொல்கிறோம். ''சேதுவை மேடுறுத்தி'' என்று. ஆகவே அது மேடுறுத்துவது. இது பள்ளமாக்குவது. ஆகவே இந்தத் திட்டம் வேறு; இவர் சொன்ன திட்டம் வேறு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் முதலிலே இருந்து என்னுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்களா என்புது எனக்கு ஐயமாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் முதல் முறையாக டெல்லிக்குச் சென்றபோது மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து நாங்கள் கொடுத்த முதல் மனுவில் முதல் பிரச்சினையாக சேது சமுத்திர திட்டத்தைத் தான் வைத்திருந்தோம். அதுபற்றி பத்திரிகையிலேகூட வந்தது. எனவே நான் ஏற்கெனவே என்ன பேசினேன் என்பதை அவர்கள் கேட்டிருந்தார்கள் என்றால் நன்றாக இருந்திருக்கும். எனவே மீண்டும், மீண்டும் நான் என்ன வலியுறுத்த விரும்புகிறேன் என்று சொன்னால் இந்தத் திட்டம் வரவேண்டிய திட்டம் தான்; எனவே கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டும். அதிலே கால தாமதம் கூடாது என்பதில் யாருக்கும் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால், இந்தத் திட்டங்கள் செயல்படுகிறபோது அதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் உலகம் தெரிந்த பிரச்சினைகள்தான். அமைச்சருக்கும் தெரியும்; எல்லோருக்கும் தெரியும். அதிலே டெக்னிக்கல் டிஃபிக்கல்ட்டீஸ் கூட இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஆராய்ந்து ஒவ்வொன்றாக முறைப்படுத்திச் செய்யவேண்டும். எனவே, இந்த அவையின் மூலமாக இந்த நாட்டு மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானம் மத்திய அரசினிடத்தில் வலியுறுத்திச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். அந்த வகையிலே இதை எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, நம்முடைய கருத்தை வலியுறுத்துவதற்கு ஆதாரமாக இதை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு மற்றவர்களைக் குறை சொல்வதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்துவது சரியல்ல என்ற வகையில்தான் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேனே தவிர, தென்காசித் திட்டத்தோடு மற்ற திட்டத்தோடு ஒப்பிட வேண்டுமென்ற நோக்கம் எனக்குக் கிடையாது.

காந்தி அவர்கள் சொன்னது போல் நம்முடைய கருத்துக்கள் மட்டும்நல்லவையாக இருந்தால் போதாது; அது செயல்படுகிற விதமும் நல்லவையாக இருக்கவேண்டும். The end should not Justify the means. அந்த மீன்ஸ் சரியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில்தான் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே தவிர யாரையும் குற்றம் சொல்வதற்காக அல்ல. குற்றம் சொல்பவர்களைக் குற்றம்சொல்லவேண்டும் என்ற நோக்கம் கூட எனக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தின் வாயிலாக நாட்டுக்கு நலன் பயக்கக்கூடிய, தேவையான, அவசியமான இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டியது அவசியம்; அதைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. அதைக் கொண்டுவருவதற்காகத்தான் ஏற்கனவே நாங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மரியாதைக்குரிய பாரதப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கிறோம். மீண்டும், அவர்களைச் சந்திக்கிறபோதெல்லாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட மீண்டும், மீண்டும் இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்துகிறார்கள். அந்தத் திட்டம் விரைவிலே வரவேண்டும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கான சிறப்பான வேலைகளை எல்லாம் செய்ய வேண்டும். இதிலே மாநில அரசு தன்னுடைய ஒத்துழைப்பாக என்ன செய்யப் போகிறார்கள், என்ன செய்ய முடியும் என்பது தெரியவில்லை. இரயில்வே, ஓவர் பிரிட்ஜ் வேலையிலே காஸ்ட்ரேஷியோ என்ற அடிப்படையில் மாநில அரசும், மத்திய அரசும் 50, 50 என்ற வகையில் பிரித்துக் கொள்வதுண்டு. அந்த

வகையில் இந்தத் திட்டம் வந்து நிறைவேற்றப்படுமே யானால் தமிழ்நாட்டிற்கும், தூத்துக்குடி துறைமுகத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் பலன் தரக்கூடிய திட்டமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். கேரள மாநிலத்திலே இரயில்வே வசதிக்காக பல நிலங்களை எல்லாம் மாநில அரசு இனாமாகக் கூட தருகிறார்கள். அதுபோல் இங்கே லஸ் டூ பாரிஸ் என்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் கூட நிலத்தை இனாமாக இந்த மாநில அரசு கொடுத்திருக்கிறது. இதுபோன்ற சிறிய உதவிகளைச் செய்யக்கூடிய வகையில் இந்த மாநில அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டத்தை மிக விரைவாக, வேகமாக, நன்மை பயக்கக் கூடிய திட்டமாகக் கொண்டுவர முடியும். அதற்கு காங்கிரஸ் பேரியக்கம் தன்னுடைய முழு உழைப்பையும் முழு முயற்சியையும் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்கள் பேசுகிறபோது மறைந்த மரியாதைக்குரிய திரு. கே. டி. கோசல்ராம் போன்றவர்கள் இந்தத் திட்டத்திற்காகப் பாடுபட்டதை எல்லாம் செம்மலை மறைத்துவிட்டாரோ என்று ஐயப்பாடாக இருக்கிறது என்று கருத்துச் சொன்னார்கள். தயவு செய்து அப்படி இதை ஒரு அரசியல் காரணமாக ஆக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னதுபோல் இதிலே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

(பிற்பகல் 12-10)

எனவே நான் சொன்ன விவரங்கள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கமிட்டியின் ரிப்போர்ட்டைத்தான் சொன்னேனே தவிர, மதிப்பிற்குரிய கோசல்ராம் அவர்கள் பாராளுமன்றத்திலே பேசிய பேச்சுக்களை நான் மறுக்கவில்லை. மனதார வரவேற்கிறேன். அப்படி எடுத்துக் கொண்டால் இங்கே வீற்றிருக்கிற பெருமதிப்பிற்குரிய அப்துல் சமத் அவர்கள் கூட அங்கே இதுபற்றி பேசியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அத்துணை பாராளுமன்ற உறுப்பினர்களும் சமயம் வரும்போதெல்லாம் வலியுறுத்தி பேசிவந்திருக்கிறார்கள். என்னுடைய வருத்தம் எல்லாம் மரியாதைக்குரிய கே. டி. கோசல்ராம் அவர்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் எதற்காகப் பாடுபட்டார்களோ, அவர், பட்ட பாட்டிற்கு இப்போதாவது பயன் கிடைக்க வேண்டும் அதற்கு மைய அரசு முன்வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆதங்கமே தவிர, வேண்டும் என்றே அரசியல் காரணங்களாக அதை விட்டுவிட்டதாகக் கருதக் கூடாது. தொடர்ந்து சொல்ல

வேண்டும் என்றால் எத்தனையோ தலைவர்கள் அதுபற்றி பேசியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி பேசாத தலைவர்களே இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்திற்காகவே பல முறை வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே தயவு செய்து அரசியல் காரணங்களைச் சொல்ல வேண்டாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கம் போதும். இன்னொரு உரையே ஆற்ற வேண்டாம். உட்காருங்கள். திரு. குமரி அனந்தன்.

*திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் வேண்டும் என்று அது தென் மாநிலத்திற்கும் குறிப்பாக தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஒரு இன்றியமையாத திட்டம் என்று இப்பேரவை கருதுகிறது. (குறுக்கீடு). சொல்கிறேன். சொல்கிறேன். அமைச்சர் பெருமகனார் சொல்வதையும் சேர்த்து பின்னால் சொல்கிறேன். ஆகவே, இத்திட்டத்தினை மேலும் காலதாமதம் இன்றி உடனடியாக மத்திய அரசு செய்து தரவேண்டும் என்று வலியுறுத்தி மாநில அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது என்று மாண்புமிகு செம்மலை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அத்தீர்மானத்தை வழிமொழிந்து, காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் சார்பிலே பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுத்ததற்கு நான் நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு அறிஞர்களும், பல அரசியல் பெரியவர்களும் இந்தத் திட்டம் வேண்டும் என்று கடந்த காலத்தில் வலியுறுத்தினார்கள் என்பதும், அதிலே நமது அருமைக்குரிய நமது மாண்புமிகு அப்துல் சமத் அவர்களிலிருந்து, நமது பெருமதிப்பிற்குரிய கே. டி. கோசல்ராம் வரையில் அதனை வலியுறுத்தினார்கள் என்பதை இங்கே திரு. செம்மலை அவர்கள் திரும்பவும் வலியுறுத்திச் சொன்னதை நான் பாராட்டுகிறேன். பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இங்கே பேசிக்கொண்டிருக்கிற நானும் அதனை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். எனவே, என்னுடைய பங்கும் பாராளுமன்றத்திலே இருந்தது என்பதை நினைவுபடுத்தி, இந்த அருமையான திட்டத்தை காலதாமதம் இன்றி விரைந்து செயல்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சீதைத் திட்டம் என்று ஒன்று ஏற்பட்டிருந்தது. இது சேதுத் திட்டம் என்று வருவதற்கு முன்னாலேயே, சீதைத் திட்டத்திற்காக தான் அதே கடல் கருணை மிக்க ராமனால் ஒரு பக்கத்திலே பார்க்கப் பட்டது என்பதும், ஆக சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் என்று பாரதி பாடினானே, அதைக்குறித்து அது மேடுறுத்துவது, இது பள்ளம் வெட்டுவது என்று கல்வி அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். உண்மை. அப்படி மேடுறுத்தியது 30 மைல் தூரம். இராமேஸ்வரம் முனையிலேயிருந்து, தனுஷ்கோடி அழிவதற்கு முன்னால் தனுஷ்கோடி முனையிலிருந்து பார்த்தால், இலங்கை 30 மைல் நீளம். அந்த 30 மைல் தூரம் கடலிலே

இருந்துக்கொண்டிருக்கிறது. அந்த 30 மைல் நீளம் கடலிலே மேடுறுத்துகின்ற பணிகளை ராமன் ஒரு காலத்திலே செய்த தாக புராணம் கூறுகிறது. ராமன் செய்ததற்குக் காரணம் சீதையை மீட்கின்ற திட்டத்திற்காக. ஆக, காலால் நடந்துச் செல்ல வேண்டுமென்ற நிலை இருந்தபோது அந்த ராமனும், ராமனுக்கு துணையாக நின்ற வானரங்களும் அமைத்த, அத்தகைய ஒரு பெரிய பாதை 1,480 வரை ஓரளவுக்கு வெளியே தெரிந்துகொண்டிருந்தது என்று இராமேஸ்வரத்திலே இருக்கிற கோவில் ஆவணங்கள் சொல்லுகின்றன.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1480ஆவது ஆண்டு வரை 30 மைல் தூரத்திற்கு, ஒரு சங்கிலி தொடர்போல சிறு சிறு பாறைகளால் போடப்பட்ட அந்த இடமே ஒரு பாறை போல் தெரிந்துகொண்டிருந்தது. 1480க்கு மேலே வந்த பெரும் புயலின் காரணமாக, சிதறி சின்னாபின்னமாகி சீர்குலைந்து கடலிலே போய் விழுந்தாலும் கூட, மேடு தட்டிப் போய் அந்த இடம் இருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு ஒரு உயர்வான பகுதியாக இருந்துக்கொண்டிருக்கிறது. அப்படி ஒரு மேடான இடமாக இருந்துக்கொண்டிருக்கிற காரணத்தாலே, கப்பல் போக்குவரத்திற்குச் சரியாக இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆக, அதை நாம் நம்பலாமா, வேண்டாமா என்பது எல்லாம் ஒரு புறம் இருக்க— நமது அமைச்சர் பெருமான் சொன்னதிலிருந்து சில செய்திகளை நான் சொல்கிறேன் என்று அப்போதே சொன்னேன். அங்கே இந்த பாறைகளை எல்லாம் எப்படிக் கொண்டு வந்தார்கள் என்பதற்கு ஒரு அருமையான பாடல் இருக்கிறது. வானரங்கள் அதனைக் கொண்டு வந்து போட்டன என்பதை கம்பன் சொல்கிறான். காலிலே உருட்டி உருட்டி சில பாறைகளை கொண்டு வந்து போட்டன. தோளிலே சுமந்து வந்து சில பாறைகளைக் கொண்டுவந்து போட்டன. வாலில் இழுத்து வந்து சில பாறைகளைக் கொண்டுவந்து போட்டன. அதிலே சொல்கிறபோது கம்பன் சொல்வான்,

"காலிடை ஒருமலை உருட்டி, கைகளின்
மேலிடை இருமலை ஏந்தி, விண்தொடும்
சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை ஒருமலை ஈர்த்து வந்தவால்"

என்று. ஆகவே காலால் ஒரு மலையை உருட்டி, கைகளுக்கு மேலே இருக்கிற தோளால் ஒரு மலையை உருட்டி தூக்கி வந்து. அதன் பிறகு "விண்தொடும் சூலுடை மழைமுகில் சூழ்ந்த சுற்றிய வாலிடை ஒருமலை ஈர்த்து வந்தவால்"; மலைகளை எல்லாம் தன்னுடைய வாலால் இழுத்து வந்து, ஒன்றை உருட்டி வந்து, ஒன்றைத் தூக்கி வந்து, ஒன்றை இழுத்து வந்து அங்கே கொண்டு போட்டன என்று சொல்கிறான் கம்பன். அப்படி போடப்பட்ட இடங்களாக 30 மைல் இருந்தது என்பது ஆங்கிலேயர் வந்து கணக்கு பார்த்து சர்வே செய்திருக்கிறார்கள். அதற்கு "ஆடம்ஸ் பிரிட்ஜ்" என்று பெயர் சொன்னார்கள் என்பதையும் ஆவணங்களில் இருந்து பார்க்கிறோம். ஆகவே, இதனை நம்பலாமா, இல்லையா என்பது வேறு.

இராமன் கட்டிய இடத்தில் இராஜீவ் வெட்ட வேண்டுமென்று கேட்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. ஆகவே, இராமன் கட்டி அங்கேயிருந்து சீதையை மீட்டதைப் போல, இங்கே ஒரு பள்ளம் வெட்டி, கப்பல்கள் அங்கே போகாமல் மீட்டு, இந்த வழியிலே கொண்டு வருவதற்காக உரிய கால்வாயை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தனி நபர் தீர்மானம். ஆகவே இந்தத் தனிநபர் தீர்மானம் பாலம் கட்டுவதற்கு அல்ல. அங்கே ஒரு பள்ளம் வெட்டுவதுதான். அந்தப் பள்ளம் வெட்டுவதற்கு என்னென்ன சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்பது மட்டுமல்ல. இந்த மலைகளை எல்லாம் தூக்கித் தூக்கி கொடுக்கிறபோது, அவைகளை எல்லாம் அடுக்கி அடுக்கி வைத்து, இந்தப் பாலத்தை சமைத்தவனுடைய பெயர் நளனாம். அந்த நளனுடைய பெயரைச் சொல்லுகிறபோது கம்பன் சொல்வான், எத்தனை பாறைகளை இவர்கள் கொண்டுவந்து கொடுத்தாலும் கூட அவைகளை வாங்கி வாங்கி, ஏந்தி ஏந்தி வைத்தது எப்படி இருந்தது என்று சொன்னால், தஞ்சம் என்று வந்தவர்களை சடையப்ப வள்ளல் எப்படித் தாங்கிக் கொள்வானோ அப்படி இருந்தது என்று நன்றியுணர்வோடு சொல்கிறான் அல்லவா, அதைப் போல நாம் இராஜீவையும் நன்றியுணர்வோடு நினைப்பதற்கு.......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். பத்திரிகைகாரர்கள் உறுப்பினரது பேச்சை எழுத முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய பேச்சின் ஒரு காப்பியை கடைசியாக பத்திரிகைகாரர்களுக்குத் தருவதற்கு உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, எனக்கு அமைச்சர் பெருமகனார் அளித்த பாராட்டாக அதை நினைத்துக் கொள்கிறேன். ஏனென்றால் இராமச்சந்திரனைப் பற்றி பேசுகிறபோது இராமச்சந்திரன்தானே பாராட்டும் தரவேண்டும். ஆகவே அதைத் தாங்கிக் கொண்டது சடையப்பவள்ளல் எப்படி தஞ்சம் என்று வந்தவர்களைத் தாங்கிக் கொள்வானோ அப்படி இருந்தது என்று நன்றியுணர்வோடு சொன்னதைப்போல இந்த மாமன்றத்தின் தீர்மானத்தை ஏந்தி வாங்கி நெஞ்சில் தாங்கி, அந்தப் பள்ளத்தை வெட்டிக் கொடுத்து நன்றியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் இராஜீவ் அவர்கள் என்பதுதான் இங்கே தனி நபர் தீர்மானமாகக் கொண்டு வந்திருப்பதன் நோக்கமே தவிர வேறு எதுவுமில்லை. ஆகவே 30 மைல் தூரம் நான் 1340 வரையில் அங்கே ஒரு பாதை போல தெரிந்து கொண்டிருந்தது என்று சொன்னேன். அதற்குப் பிறகு அவைகள் எல்லாம் பலமுறை புயல் தாக்கியதன் காரணத்தால், பெரிய பெரிய சுழல்கள் வந்ததன் காரணத்தால் போய்விட்டன என்பதை நஸ்வர் சாகர் என்பவர் மிக அருமையாக ஆராய்ச்சிக் குறிப்பிலே

சொல்லியிருக்கிறார்கள். ஈஸ்வர் சாகர் சொல்லுகிறபோது நாம் நம்ப வேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்றால், நம்முடைய கண்முன்னாலே தனுஷ்கோடி போய்விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு யார் யார் எல்லாம் இதற்காக அறிக்கை கொடுத்தார்கள் என்றால் 1892 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி எல்பின்ஸ்டன் கொடுத்த அறிக்கையில் இவைகளை எல்லாம எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்பின்ஸ்டன் கொடுத்த அறிக்கைகளை எல்லாம் நான் விரிவுபடுத்தி பேசாமல் ஒரு வார்த்தையில் சொல்ல விரும்புகிறேன். யாருக்கு கடிதம் எழுதுகிறார்கள் என்றால், Secretary of st te to India இந்தியாவினுடைய செயலாளராக இருந்து கொண்டிருக்கிற, அங்கே இலண்டன் மாநகரில் இருக்கிற பெரிய அதிகாரிக்கு எழுதுகிற கடிதத்தில் எழுதுகிறார் இங்கேயிருந்து, Every month is beginning with greater imp rance to the commerce and Trade of the East ஒவ்வொரு மாதமும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகிக் கொண்டேயிருக்கிறது. எனவே கால்வாயை வெட்ட வேண்டுமென்று சொல்கிறான். அவன் கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொன்ன இடம் சேதுசமுத்திரம் இல்லை. இராமேஸ்வரத்திலிருந்து கொண்டிருக்கிற பாம்பனுக்கு பக்கத்திலே நிலத்தை வெட்டி ஒரு கால்வாய் கொண்டு வரவேண்டுமென்று சொன்னான். அந்த நிலம் வெட்டுகிற பணியை 1892 ஆம் ஆண்டே தொடங்கவேண்டுமென்று சொன்னவன் நம்முடைய எல்பின்ஸ்டன் என்பவன்.

ராபர்ட்சன் என்பவன் 72 அடி அகலமுள்ள கால்வாய் என்னால் வெட்ட முடியும். அதற்கு 60 இலட்சம் ரூபாய் போதும் என்று சொல்லியிருக்கிறான். ஆகவே, மண்ணைத் தோண்டி, அதிலே ஒரு கால்வாய்க்கொண்டு வந்து, இந்த இரண்டு கடல் முனைகளையும் இணைத்து அதிலே கப்பல் விடுகிற முயற்சி இருக்கிறது. நிலத்தைத் தோண்டி கப்பல் கொண்டு வருகிற முயற்சி இருக்கிறது. அது எப்படியோ விடுபட்டு, அதற்குப் பிறகு இப்போது என்ன சொல்கிறோம் என்றால் மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி இரண்டும் சேர்ந்து இணைக்கப்படுகிற இடம்தான் சேது சமுத்திரம். அதைப் பக்கத்தில் வைத்து ஆண்டுகொண்டிருந்ததால்தான் சேதுபதி என்று அவருக்கும் பெயர் வந்தது. அது அந்தக் காலத்தில் இருந்தது என்பதற்காக இந்த சேதுவில் பாலம் கட்டுவதற்குக்கூட சேது பந்தனம் என்றுதான் பெயர். எனவே, சேது என்ற இடத்தில் இப்போது கால்வாய் வெட்ட வேண்டும். பள்ளம் வெட்ட வேண்டுமென்று இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே ஆடம்ஸ் பிரிட்ஜ் என்று சொல்லப்படுகிற, அந்த மேடான இடத்தை பள்ளமாக்குவது எப்படி என்பதுதான் நம்முடைய சிந்தனை.

1986 மே 10] [திரு. குமரி அனந்தன்]
(பிற்பகல் 12—20)

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்குத்தான், ஏன் இதைச் செய்ய வேண்டும் என்பதற்குத்தான், பலவேறு அறிக்கைகள், இராமசாமி முதலியார் அவர்களுடைய அறிக்கை, இப்படி பல்வேறு அறிக்கைகள் இருக்கின்றன. அதிலே இது உடனடித் தேவை என்று சொல்வதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், நமது நாட்டிலேயிருந்து, தூத்துக்குடியிலிருந்து ஒரு கப்பல் புறப்பட்டு சென்னைக்கு வரவேண்டும் என்று சொன்னால்கூட, அது கொழும்பைச் சுற்றித்தான் வரவேண்டும். இப்போது அது 750 மைல் சுற்றி வருகிறது. ஆனால், இந்தச் சேது சமுத்திரக் கால்வாய் வந்துவிடும் என்று சொன்னால், 310 மைல் தூரத்திலே வந்துவிடலாம். ஆகவே 434 மைல் மிச்சமாகும். தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வருகின்ற ஒரு கப்பல் இப்போது அதிகமாகப் போய்க்கொண்டு இருக்கிற தூரம் எவ்வளவு என்றால் 434 மைல். அதைப் போலவே தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டிணத்திற்கு ஒரு கப்பல் போகிற நேரத்திலே, இப்போது போய்க்கொண்டிருப்பதை விட சேது சமுத்திரக் கால்வாய் வந்துவிட்டது என்று சொன்னால், மிச்சம் வருகிற தூரம் 304 மைல். தூத்துக்குடியிலிருந்து கல்கத்தா ஒரு கப்பல் போவதற்கு சேது சமுத்திரத்தைத் தாண்டிவிட்டால் மிச்சம் வருகிற தூரம் 265 மைல். இப்படி ஒவ்வொன்றையும் நான் குறிப்பிட்டு நீளமாக எழுதி வைத்திருக்கிறேன். இவைகளை எல்லாம் பேசி நேரத்தை அதற்குப் பயன்படுத்துவதற்கு நான் விரும்பவில்லை.

இப்போது வெட்டுகின்ற இடம் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 82ஆவது மைலிலே இருக்கிறது. ஆகவே, தூத்துக்குடிக்கு அருகிலே இல்லை, வெகு தூரத்திலும் இல்லை. 82-ஆவது மைலிலே அதை வெட்ட வேண்டும் என்று சொல்கிறோம். ஏன் என்று சொன்னால், இப்போது போய்க்கொண்டிருக்கிற கப்பல்கள் எல்லாம் அந்தக் கொழும்புத் துறைமுகத்தைச் சுற்றியே வந்து கொண்டு இருக்கின்றன. கொழும்புத் துறைமுகத்தைச் சுற்றி வந்து கொண்டு இருக்கிற நேரத்தில், அவர்களுக்கு நாம் கொடுக்கின்ற கட்டணம் வேறு, ஒரு தடவை ஒரு கப்பல் போய்விட்டு வருகிற நேரத்தில், போவதற்கு மட்டும், சுற்றி வருவதற்கு மட்டும் 60 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலவாகிறது.

அதுமட்டுமல்ல, இந்தத் தூரத்திற்காக 1½ நாள் அதிகப் பயணம் செய்ய வேண்டி வருகிறது. ஆகவே இந்தச் சேதுக் கால்வாயைத் தோண்டிவிட்டால், சென்னைக்கு வருவதிலே மட்டும் 1½ நாள்—ஸ்டீமிங் டே—போய்க்கொண்டிருக்கிற நேரம் மிச்சமாகும். இது நமக்குத் தேவைப்படுகிறது என்று சொல்வதற்குக் காரணம்; இது இழுத்துக் கொண்டே போகின்றது என்பதுதான். இந்தக் கப்பல் இந்த வழியாக வருகின்ற நேரத்தில், இந்தப் பகுதிகள் எல்லாம், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி பகுதிகள் எல்லாம் செழித்து ஓங்கும் என்பது

ஒன்று. நமது நாட்டிலே இப்போது நிலவிக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் நம்மோடு நடந்து கொண்டு இருக்கிற நிலைமையில், கொழும்புத் துறைமுகம் என்றால், நிரந்தரமாக நமக்கு உதவி செய்வதற்கு முன்வரப் போகிறது என்று யார் உறுதியைச் சொன்னார்கள். அந்தத் துறைமுகத்திலே நம்முடைய கப்பல் போய் வரலாம் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கும் எனறு யார் உறுதி கூற முடியும். அவர்கள் போய்க் கொண்டு இருக்கிற போக்கு, வல்லரசுகள் அங்கே தங்களுடைய காலை ஊன்றுவதற்கு எடுத்துக்கொள்கின்ற முயற்சிகள், இவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது, ஒரு கணம் கூட கொழும்பை நம்பி நமமுடைய கப்பல் போக்குவரத்து இருக்கக் கூடாது என்பதிலே எல்லாம் சிந்தனையாளர்கள் ஒருமித்த கருத்திலே இருப்பார்கள் என்பதிலே ஐயம் இல்லை. ஆகவே நாட்டினுடைய பொருளாதாரம் மட்டுமல்ல, நாட்டினுடைய சுதந்திரத்திற்கு நாட்டினுடைய உரிமைக்கு, ஆளுகைக்கும், நாட்டினுடைய இந்த பெருமை மிக்க இந்த வரலாறு படைத்திருக்கிற இந்த சுதந்திர இந்தியா, அதற்குக் கூட ஆபத்து வராத சூழ்நிலை இருக்கவேண்டும் என்று சொன்னால், சேதுக்கால்வாய்த் திட்டம் வேண்டும். Defence Point of view இந்தப் பாதுகாபபு நாக்கிலே கூட, இந்தச் சேது சமுத்திரம் திட்டம் என்பது உடனடியாக தேவைப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

1968—லே இருந்து பல்வேறு திட்டங்கள், நெருங்கி வந்ததைப்போல் இருந்தது அப்போது 21 கோடி ரூபாயிலே செலவை முடித்து விடலாம் என்று சொன்னார்கள். இப்போது எத்தனை எத்தனையோ கோடி ஆகிவிட்டது. பரவாயில்லை. எத்தனை கோடியானாலும், இந்தக் காரியத்தை நாம் செய்து விடலாம். இதிலே செய்ய வேண்டியது என்ன? ஒரு பெரிய காரியம் ஒன்றும் அல்ல. நமது நாட்டிலே இருக்கிற Engineering Silk நமது நாட்டிலே இருக்கிற Technical know-how நமது நாட்டிலே இருக்கிற Infrastructure என்று சொல்கின்ற அத்தனையையும் வைத்துக்கொண்டு நாம் இந்தக் காரியத்தைச் செய்து விட முடியும். ஏன் என்று சொன்னால், நாம் அதை தோண்டுகிற இடத்திலே, கால்வாய் தோண்டுகிற இடத்திலே, என்ன செய்யப் போகிறோம் என்று சொன்னால், வட புறத்திலே 450 அடி அகலத்திற்குத் தோண்டுகிறோம். 450 அடி அகலத்திலே தோண்டி 36 அடி ஆழத்திற்குச் கொண்டு போகிறோம். இந்த 450 அடியைச் சுருக்கி சுருக்கி, தெற்கு நோக்கி, 150 அடியில் கொண்டு வருகிறோம். ஆகவே, 36 அடி ஆழம், 450 அடியிலே தொடங்கி, 150 அடிக்கு இப்படி வருகிறது.

தெற்குப் புறத்திலே இருந்து 750 அடி அகலத்திற்குத் தோண்டி 36 அடி ஆழத்திலே, அதைச் சுருக்கி சுருக்கி, 150 அடியிலே கொண்டு வருகிறோம். ஆகவே இங்கே தென் புறத்திலே 750 அடி, அப்படியே வந்து, 155 ஆகும். வடபுறத்திலே 450—லே தொடங்கி பிறகு 150 ஆக ஆகும். ஆகவே 150 அடி அகமும், 36 அடி ஆழமும உள்ள ஒரு பெரிய கால்வாய். இந்தப்

1986 மே 10] [திரு. குமரி அனந்தன்]

பெரிய கால்வாயிலே 30 அடி, அடிப்பாகம் தண்ணீரிலே அமிழ்கின்ற கப்பல் போக முடியும். ஆகவே, பெரிய பெரிய கப்பல்கள் எல்லாம் போக முடியும் என்று சொல்கிற காரணத்திற்காகத்தான், ரூபாய் எவ்வளவு செலவானாலும், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று சொல்கிறோம்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில், தூத்துக்குடி 82 மைலிலே இருக்கிறது என்று சொன்னேன். அங்கு பொருளாதார செழிப்பு ஓங்கும் என்று சொன்னேன். வேலையில்லாத் திண்டாட்டம் போகும் என்று சொன்னேன். தென் பகுதியிலே இருக்கிற தென்னை, பனை, இவைகளில் இருந்து வருகிற பொருட்கள், உப்பிலிருந்து வருகிற பல பொருட்கள், இவைகள் எல்லாம் ஏற்றுமதி ஆவதற்கு உரிய பெரிய நிலைமைகள் எல்லாம் உருவாகும். ஆகவே, அந்தப் பகுதிகளை எல்லாம் பார்க்கிறோம் என்று சொன்னால், செல்வச் செழிப்பிலே செம்மாந்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கையைத் தருவதற்கு இந்தச் சேதுத் திட்டம் நமக்கு உதவியாக இருக்கும்.

இந்த சேதுக் கால்வாய் வெட்டப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. விரைந்து வெட்டப்பட வேண்டும். உடனே வெட்டுவதற்கு உரிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதுதான், இந்தத் தனி நபருடைய தீர்மானம். இந்தச் சேதுக் கால்வாய் வெட்டப்படுகிற நேரத்திலே, இது உலகத்திலே நான்காவது கால்வாயாக இருக்கும். முதல் கால்வாய் சூயஸ் கால்வாய், இரண்டாவது கால்வாய் பனாமா கால்வாயாக, மூன்றாவது கால்வாய் கீழ்க்கால்வாய் என்று அழைக்கப்படுகின்ற கால்வாயாக, நான்காவது கால்வாய் சேது சமுத்திரக் கால்வாய் என்கிற பெயரோடு இருக்கும் என்று சொன்னால் இந்தியா முழுவதும், நான் அன்றே சொன்னேன். ஒரு தீபகற்பம் என்ற பெயரை இந்தியாவிற்கு வாங்கிக் கொடுத்தது தமிழ்நாடுதான். வேறு எந்த மாநிலமும் 3 பக்கமும் கடலால் சூழப்பட்டதில்லை. தமிழ்நாடு மட்டும்தான் 3 பக்கமும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. எனவே, இந்தியாவிற்கே 'தீபகற்பம்' என்று சொல்கின்ற ஒரு பெயரை வாங்கிக் கொடுத்த இந்த தமிழ்நாட்டில், இந்தத் திட்டம் வர வேண்டுமென்று, எத்தனையோ ஆண்டு காலம் கர்ப்பத்தில் இருக்கிறது. 10 மாத கர்ப்பம் அல்லது இது. 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள கர்ப்பத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அது குழந்தைப் பெறுவது போலே; நமக்கு ஒரு பேரன் கிடைப்பதைப் போலே, வேறு எந்தத் தடங்கலையும் சொல்லாமல் உடனடியாக இந்தக் கால்வாயை வெட்டிக் கொடுப்பதன் மூலம் இந்திய நாட்டினுடைய பாதுகாப்பை, நமது நாட்டில் இருக்கிற மக்களுடைய வேலைவாய்ப்பு வசதியினை, வேறு எல்லாவற்றையும் செம்மைபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சேது கால்வாய் உடனடியாக வெட்டப்பட வேண்டுமென்று சொல்கிற இந்தத் தீர்மானத்தை எல்லோருமாக, கருத்தொருமித்தவர்களாக இருந்து நிறைவேற்றி அதனையே வலியுறுத்தி மத்திய அரசாங்கத்தை செயல்பட வைக்கவேண்டுமென்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே கேட்டு அமைகிறேன். வணக்கம், வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சேது சமுத்திர திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தனி நபர் தீர்மானத்தை ஆதரித்து இந்தியத் துணைக் கண்டத்திலே சிறப்பாகச் சொல்லக்கூடிய இந்தத் திட்டத்தை வேகமாகக் கொண்டு வரவேண்டுமென்ற காரணங்களை விளக்கி நான் ஒருசில கருத்துக்களை சொல்ல முன் வருகின்றேன். எனக்கு முன்னர் பேசிய பல்வேறு உறுப்பினர்களும், சீதையைப் பற்றியும், பாரதியின் பாடல் பற்றியும் அதற்குப் பிறகு ராமன் நிலை பற்றியும், ஆஞ்சநேயர் அவதாரம் பற்றியெல்லாம் பல்வேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அது கதையா? கற்பனையா? காவியமா என்ற நிலைக்கு போகாமல் சேது சமுத்திரத் திட்டம், குறிப்பாக தமிழகத்திற்கும், பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திற்கும் எந்த அளவிற்கு அவசியம் என்பதனை எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் நான் ஒரு சில வரிகளை இங்கே எடுத்துச் சொல்ல முன் வருகின்றேன்.

பொதுவாகவே, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழி தமிழகத்தில் வந்ததும், தமிழன் கடல் வாணிபம் செய்தான். கப்பலில் சென்று அவன் தொழில் நடத்தி இருக்கின்றான் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். அப்படிப்பட்ட நிலையில், 'கலை முதலாக' தொழில் முறையாக காத்து வளர்த்தது தமிழ்நாடு' என்று சொல்லக்கூடிய வகையில், உலகம் வியக்க சுதேசி கப்பல் ஓட்டியதும் தமிழ்நாடு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கடல் வாணிபம் இன்று இருக்கக்கூடிய இந்த வாணிப வழி - அந்தக் கடல் வழி - உலக வழியோடு இணைக்கக்கூடிய வகையிலே உருவாக்குவதற்கு இந்தத் திட்டம் இன்றியமையாதது என்று சொல்லக்கூடிய வகையிலே நான் இந்தத் திட்டத்தை வற்புறுத்திச் சொல்ல முன் வருகின்றேன். இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், 'பாக்' ஜலசந்தியையும், மன்னார் வளைகுடாவையும் இணைக்கக்கூடிய ஒரு அற்புதத் திட்டம். நாட்டுக்கு பயன் உள்ள இந்தத் திட்டம் உலக கப்பல் போக்குவரத்து மார்க்கத்தை இந்திய கப்பல் போக்குவரத்து மார்க்கத்தோடு இணைக்கக்கூடிய மிகப் பெரிய ஒரு கால்வாய் திட்டம். நாம் 'லிங்க் ரோடு' போடுகிறோமே, அது மாதிரி. Rural area -க்கும் ஹைவேஸுக்கும் லிங்க் ரோடு கொடுக்கிறோமே அதைப் போலத்தான்.

மிகப் பெரிய அளவிலே உலக கடல் மார்க்கத்தோடு இணைப்பதற்கு இது வழி செய்கிறது. தலைமன்னாருக்கும், தூத்துக்குடிக்கும் இடையிலே கிட்டத்தட்ட ஒரு 22 மைல்கள் இருப்பதாகவும், அங்கே ஆழமற்ற கடலில் பாறைகள் தொடர்ந்து இருப்பதால், ஆழமற்ற கடல் பகுதியை ஆழப்படுத்த இலங்கையைச் சுற்றாமல் குறுக்குப் பாதையில் செல்ல, தரைப் பகுதியாக இருந்தாலும், கடல் பகுதியாக இருந்தாலும், வெட்டி, ஆழப்படுத்தி கப்பல் போகக் கூடிய நிலைமையை உருவாக்குவதுதான் சேது சமுத்திரத் திட்டம். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே

சுமார் 22 மைல் நீர் பகுதியிலே சுண்ணாம்புக்கல் பாறைகள் நிரம்பி இருப்பதன் காரணமாக பெரிய கப்பல்கள் போக முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இலங்கையைச் சுற்றுவதால் மிகப் பெரிய பாதகங்கள் ஏற்படு கின்றன என்பதனை எடுத்துக் காட்டி, நாம் நமக்கு ஒரு வழியைக் காண வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கொண்டு வருகி கிறோம்.

இந்தத் திட்டம் இது வரையிலும் இன்னும் உயிரோடு இருக் கிறது என்பதற்கான காரணமே 1860 ஆம் ஆண்டு இந்தத் திட் டத்தைப் போட்டிருக்கிறார்கள். 125 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் இந்தத் திட்டத்தைப் பற்றி நாம் பேசுகிறோம் என்று சொன்னால் இந்தத் திட்டத்தின் சிறப்பு, காங்கிரஸ் ஆட்சி அல்ல; தி.மு.க. ஆட்சி அல்ல; அண்ணா தி.மு.க. ஆட்சி அல்ல; பிரிட்டீஷ் அரசாங்கத்தில் 125 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் திட்டத்தை போட்டு இருக்கிறார்கள். 1860 ஆம் ஆண்டு போட் டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, வரிசையாக ஒவ்வொன்றாக; 1861-லே Mr. Town Shed's proposal 1862-லே சென்னை கவர்னர், 1871-லே Mr. Stoddarts proposal 1872 ஆம் ஆண்டு Mr. Robertson போன்றவர்கள் அதைப் போலவே, ரிடையர்டு என்ஜினியர், கோயில் பிள்ளையை வைத்து சர்வே செய்தது. 1882-லே Sir John Khinte 1920-லே சென்னை ராஜதானி ஆலோசகராக இருந்து தலைமை என்ஜினியர் அதை சர்வே செய்தது; 1921-லே சென்னை மாநில அரசே முயற்சி செய்தது; லார்ட் வெல்லிங்டன் கமிட்டி போட்டது; லண்டனில் பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த நேரத்திலே இங்கே எல்லாமும் முடிவு செய்து நடைமுறைப் படுத்த வேண்டும் என்று சொல்கிறபோதே அனுமதி லண்டனிலே வாங்க வேண்டும். அப்போது 1920-லே சென்னை ராஜதானி யின் ஆலோசகராக இருந்து தலைமை என்ஜினியராக இருந்து முடிவு செய்துவிட்ட அந்தப் பிரச்சினையை 1921-லே சென்னை மாநில அரசு முயற்சி செய்து முடிவு செய்துவிட்ட பிரச்சனைக்கு பணம் ஒதுக்குவது லண்டனிலே பிரிட்டிஷ் அரசிடத்திலே இருந்தது. அதை ஒதுக்காத காரணத்தால்தான் அது நடைமுறைக்கு வரவில்லை.

(பிற்பகல் 12-30)

இன்றைய தினம் டெல்லியிலே இதுவரையில் பணம் ஒதுக்காத காரணத்தால், இந்தத் திட்டத்தை எடுக்காத காரணத்தால், இன்னும் முடிவுக்கு வரவில்லை. நடைமுறைக்கு வரவில்லை. அது தான் இதில் இருக்கிற விஷயம்.

1945-ல் அதேபோல் டெக்னிக்கல் கமிட்டி அமைத்து இருக்கிறார்கள். 1955-ல் டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் கமிட்டி, 1963-ல் மத்திய அரசு எமர்ஜென்சி கமிட்டி என்று கூட்டி 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட சேர்த்து இருக் கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

அதுமட்டுமல்ல, 1965-ல் வி. சி. வெங்கடேஸ்வரன் தலைமையில் ஒரு கமிட்டி, 1981-ல் மத்திய நிதி மந்திரி திரு. ஆர். வி. அவர்கள் உறுதி மொழி கொடுத்தார்கள். இங்கே கொடுத்து இருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள், டெல்லிக்கு போய் இருக்கிறது. அங்கே டெல்லியிலே இருக்கிற சர்வ கட்சி உறுப்பினர்கள் வாதாடி இருக்கிறார்கள், போராடி இருக்கிறார்கள். 1981-ல் ஆகஸ்ட்டில் மீண்டும் ஒரு கமிட்டி, திரு. எச். ஆர். லட்சுமி நாராயணன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி திரு. கோசல்ராம் அவர்கள் வேகமாக போராடியிருக்கிறார்கள். நான் இந்த பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கிறபோதே இதை பெற்று விட வேண்டும் என்று இந்த சேது சமுத்திரத் திட்டத்தை நடத்தி முடிக்கின்றேன் என்ற முயற்சியை எடுத்து தன்னுடைய முயற்சி பலிக்காமல் அவர் போய்விட்டார். ஆனால், இந்தத் திட்டம் மட்டும் வரவில்லை. இந்த அளவுக்கு இத்தனை ஆண்டு காலமாக அது உயிரோடு இருக்கிறது, விவாதம் செய்கிறோம், தேவை என்று கோருகிறோம், எந்த அரசாக இருந்தாலும் அது காங்கிரஸ் ஆக இருந்தாலும் சரி, வேறு கட்சியாக இருந்தாலும் சரி, இந்தத் திட்டத்தை வலியுறுத்துகிறோம் என்று சொன்னால் இதனுடைய உண்மை என்ன? தெரிந்து கொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு இது உதவி செய்கிறது. இந்தியாவினுடைய கடல் மார்க்க வாணிப பயணம் வெற்றி பெறுவதன் மூலம் பெருமை கிடைப்பதற்கு இது உதவி செய்கிறது. அன்னிய செலாவணியை வெகுவாக நாம் குறைத்துக் கொள்ள இது முக்கிய அளவில் உதவி செய்கிறது என்ற காரணத்தால் இதனை நாம் மேலும் இன்றைய தினம் தனி நபர் தீர்மானமாக இங்கே கொண்டு வந்து, அதை ஆதரித்து வரவேற்று மத்திய அரசு இணங்க வேண்டும், காலத்தே ஒரு முடிவை கொடுக்க வேண்டும், உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்ற கேள்வியை எழுப்பக்கூடிய வகையில் இன்றைய நிலையில் இங்கே இதைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

இங்கே பல்வேறு கால்வாய்களைப் பற்றி சொன்னார்கள். உலகத்திலேயே சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய், கீழ் கால்வாய் என்ற இந்த கால்வாய் பிரச்சனை எல்லாம் இதற்கு பின்னால் தான் புரபோசலாக வந்தது. சேது திட்டத்திற்கு பிறகு உருவான சூயஸும், பனாமாவும் - சேது சமுத்திரத் திட்டம் அப்படியே இருக்கிறது - எல்லாம் முடித்து விட்டார்கள். சின்னஞ்சிறிய நாடுகள் மிகப்பெரிய அளவுக்கு பலவீனமாகக் கூட இருக்கக்கூடிய நாடுகள், அந்த நாடுகள் எல்லாம் போட்ட திட்டங்களை மிக எளிதாக நிறைவேற்றி, அந்தத் திட்டங்கள் இன்றைய தினம் உலகத்திலேயே தலைசிறந்து விளங்கக்கூடிய வாணிப நிறுவனங்களை நடத்தக்கூடிய வகையில் கப்பல் வழி போக்குகளை அவர்கள் பெருக்கியிருக்கிறார்கள். போக்குவரத்தில் என்று சொன்னால் நாம் இன்னும் அந்த நிலைக்கு வராமல் இருப்பது இந்தியாவின் துரதிருஷ்டம் என்று தான் கருதுகிறேன். இதை நாம் வெகு

1986 மே 10] [டாக்டர் கே. சமரசம்]

வேகமாக கொண்டுவரக் கூடிய அத்தியாவசியத்திலும் அவசரத்திலும் இருக்கிறோம். ஒரு நாடு என்று சொன்னால், எது அவசியமானது, எது அவசரமானது, எது அத்தியாவசியமானது என்று பார்க்க வேண்டும். இந்திய துணைக் கண்டத்தினுடைய வெற்றி, தோல்வி அல்லது அதனுடைய சுக துக்கங்களை பார்க்கும்போது இந்தியாவுக்கு ஆபத்து கடல் வழியாகவும் வரலாம், தரை வழியாகவும் வரலாம். இந்தியாவுக்கு ஆபத்து கடல் வழியாகவும் வரலாம், தரை வழியாகவும் வரலாம் என்று சொல்லுகிறபோது பல்வேறு வகையில் தரை வழியாக ஆபத்தை நாம் சந்தித்து இருக்கிறோம். கடல் வழியாகக் கூட வரக்கூடிய ஆபத்து இருக்கிறதா என்று சொன்னால் இப்போது அது மேலும் பெருகி இருக்கிறது. நேச நாடுகள் எல்லாம் மோச நாடுகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. நம்மோடு பாசமாக இருந்த பாகிஸ்தான் இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது. அந்த நிலையில் இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தின் அருகில் இருக்கிற இலங்கையாக இருந்தாலும் சரி, பாகிஸ்தானாக இருந்தாலும் சரி இப்போது....

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல இலக்கிய உரையை கேட்டுக் கொண்டு இருக்கிறோம். நேச நாடு எல்லாம் மோச நாடு என்று சமரசமாக இருப்பவர்கள் எல்லாம் சண்டையிட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் சேர்த்துக் கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : மாற்றுத் தலைவர் அவர்களே, சமரசம் என்பது சண்டைக்குப் பிறகு ஏற்படக்கூடிய ஒன்றுதான். போருக்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று சொன்னால் சமாதானத்திற்கு வழி ஏற்படுகிறது என்று பொருள்; நாம் பலமாக எப்போது இருக்கிறோமோ பலத்தோடு இருந்துகொண்டு சமரசத்திற்கு போனால் தான் சமரசம் முடியுமே தவிர, பலவீனமாக இருந்து சமரசத்திற்குப் போனால் நடக்காது. பலவீனமானது பலத்தோடு இருந்தால், பலவீனமானது பஸ்பம் ஆகிவிடும். ஆகவே அந்த அடிப்படையில்...

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சண்டைக்குப் பின்னால் மட்டுமல்ல, சமரசம் சண்டைக்கு முன்னால் இருந்தால் நல்லதாக இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : எப்போதுமே புயலுக்குப் பின்னே அமைதி என்பதாக நாம் படித்திருக்கிறோம். அடிக்கிற கைதான் அணைக்கும், அணைக்கிற கைதான் அடிக்கும் என்றும் படிக்கிறோம். இலை முந்தியா, காய் முந்தியா என்று சொல்லிக் கொண்டிருப்பது வாதப் பிரச்சினையே தவிர, இதெல்லாம் நியாயங்கள் ஆகாது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். விவாதங்கள் எல்லாம் நியாயங்களும் அல்ல. ஆனால் எப்படிப்

பட்ட நியாயங்களை எல்லாம் விவாதத்திற்கு உட்படுத்தலாம் என்பது அவரவர்களுக்கு இருக்கின்ற திறமையால். ஆகவே இன்றைய தினம் சேது சமுத்திர திட்டத்தைப் பார்க்கிறபோது, இது மிகப் பெரிய தேவையான ஒரு திட்டம்.

1977-78 வரவு-செலவுத் திட்டத்தில் கூட, இது சொல்லப் பட்டது. ஆனால் 1979-80-ல் இத்திட்டம் பற்றி எதுவும் சொல்லாமல் விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு, மீண்டும் 1983-லே கூட இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மன்றத் திலே கூட, பல நண்பர்கள், பல உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு முறை இலங்கையைச் சுற்றி வர 384 மைல் கூடுதலாக ஆகிறது. போகவர, 768 மைல் கூடுதலாக வருகிறது. இதனால், காலம் மற்றும் எரிபொருள் வீணாகிறது. இது எல்லோரும் சொல்லக்கூடிய கருத்து.

தூத்துக்குடி-சென்னை நேர் வழி 316 மைல், இலங்கையைச் சுற்றி வருவதால் 768 மைல்கள் கூடுதலாக இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றினால் ஒரு ஆண்டுக்கு 90 இலட்சம் எடை யுள்ள 2,000 கப்பல்கள் போய் வரும். இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலை மாறி, இந்தத் திட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றினால், தமிழகத்திலுடைய அனைத்துக் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்று, இந்திய அரசு நிறைவேற்றினால், எதிர்காலத்திலே இந்தத் திட்டம் வழியாக, இந்தப் போக்கு வரத்தின் மூலமாக, 2,000 கப்பல்கள் போய் வரும். இதனால் ஆண்டுக்கு ரூ. 1.35 கோடி வருமானம் வரும் என்றும், ரூ. 39 இலட்சம் செலவினங்கள் போக ரூ. 96 இலட்சம் மிச்சப்படும் என்றும் 1960-61, 62-ல் ஆய்வுப் புள்ளி விவரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதை அண்ணா தி. மு. க. சொல்லவில்லை, அமைச்சர்கள் சொல்லவில்லை, எங்களுக்காகச் சொல்லவில்லை இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்ந்து செய்த புள்ளி விவரத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்கள் ஆகும். ஆகவே மத்திய அரசு, இந்தியாவை முழுமையாக ஆட்கொண்டிருக்கக் கூடிய அந்த அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று சொல் கிறோம். இங்கே சொல்லும்போது கூட, நம்முடைய நண்பர்கள் கூட, ஏனோ சில நேரத்தில் கோபப்படுகிறார்கள். நாம் எதற்காக வரவேண்டும்? 'எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிர தானம்' என்கிறோம். அங்கே தான் பேசுவதற்கு, பார்ப் பதற்கு, கேட்பதற்கு எல்லாம் இருக்கின்றன. நாம் கீழே பாதி யாக இருக்கிறோம். ஆனால் பெருவிரலில் அடி பட்டால் கூட, உயிரே போய்விடும். உயிருக்கு ஆபத்து தலையிலே அடிப்பட்டுத்தான் வரவேண்டுமென்று இல்லை. காலில் பட்டுகூட வரலாம். அதுமட்டுமல்ல, இந்த விஷச் செடிகள் கூட தலையிலே தொடாது. காலைக் கூடத் தொடும். ஆக க்ளோஸ் ஆகிவிடலாம். நம்மைச் சுற்றியுள்ள இந்த விஷக்

1986 மே 10] [டாக்டர் கே. சமரசம்]

கிருமிகளை பரவ விடக்கூடாது. இந்தியத் துணைத் கண்டத்திலே அங்கே காஷ்மீர் பக்கத்திலே மட்டுமே நம்முடைய எதிரிகள் இருக்கிறார்கள என்றோ, அல்லது உளவாளிகள் இருக்கிறார்கள என்றோ, இந்தியப் பேரரசு கருதக்கூடாது. இங்கே தமிழகத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள், லிபியாவிற்கும், அமெரிக்காவிற்கும் ஏற்பட்ட சண்டையிலே நம்முடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஆதரவாகப் பேசினார்கள் என்ற காரணத்திற்காக அமெரிக்க அதிகாரி என்ன பேசினார் என்பதை மறந்து விட்டீர்களா? அந்த அமெரிக்கா இன்றைய தினம் இலங்கையோடு எந்த அளவிற்கு உறவு வைத்திருக்கிறது என்பதை மறந்துவிட்டீர்களா?

அமெரிக்காவினுடைய போர்த் தளங்கள் எல்லாம் இன்றைக்கு பாகிஸ்தானுக்கு வந்து கொண்டிருக்கின்றது என்பதை மறந்து விட்டீர்களா? இப்படி இருக்கக் கூடிய இந்தச் சூழ்நிலையில் இந்தியாவைப் பாதுகாப்பதற்கு அங்கே காஷ்மீர் பக்கத்திலே மட்டும் நாம் மிகப் பெரிய வேலிகளை அமைத்து விட்டால் முடியாது. இது தமிழகத்திற்கும் தேவை என்டது அத்தியாவசியம் இல்லையா? இதுவரையில் எந்த காரணத்திற்காக இப்படி இருந்தாலும் சரி, இப்போது மிகப் பெரிய அளவிலே போக்குவரத்துத் தடம் என்ற நிலையிலே இல்லாவிட்டாலும் கூட, இந்தியாவைப் பாதுகாக்கக் கூடிய வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இந்தியப் பேரரசிற்கு இருக்கிறது என்பதனை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அங்கே இலங்கையைச் சுற்றி வருகின்ற காரணத்தினாலே—இப்போது சாதாரணமாக செகரட்டரியேட்டிலிருந்தே ரகசிய ஃபைல்கள் எல்லாம் போகிறது என்கின்றார்கள். நமது பிரதமரையே சுட்டுக் கொன்றது யார் என்றால், அவருடன் இருந்த பாதுகாப்பு காவலர் என்று சொல்கிறார்கள். இந்தியாவின் ரகசியம் பல்வேறு வகையிலே வெளியே போகின்ற காரணத்தினாலே பல்வேறு அமைச்சர்களை, பல்வேறு அதிகாரிகளை டில்லியிலே நீக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நாம் இலங்கையைச் சுற்றி வருகின்ற காரணத்தினாலே, இந்த ராணுவத்தினுடைய பல்வேறு ரகசியங்கள் வெளியாகும் என்கின்ற நிலை இல்லையா? இப்படிப்பட்ட ரகசியம் வெளியே வராமல் தடுப்பதற்கு, தற்காப்பிற்காவது, இந்த சேது சமுத்திரத் திட்டம் தேவை என்கின்ற ஒரு உணர்வு மத்திய அரசிற்கு வேண்டாமா? இதை தமிழக அரசு அல்லது அண்ணா தி. மு. க. நண்பர்கள், எங்களைப் போன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வது தவறா?

[டாக்டர் கே. சமரசம்] [1986 மே 10

(பிற்பகல் 12-40)

அருள்கூர்ந்து எண்ணி பாருங்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே தான் இந்தத் திட்டத்தை நாம் கொண்டு வந்தாக வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, அந்த நேரத்திலே இதற்காக போடப்படும் முதல் என்று சொன்னால் 50 இலட்சம் ரூபாய் இருந்தால் போதும் என்றார்கள், அதாவது, 1860–இல். அந்தத் திட்டத்தை போடுகிறபோதே, கமிட்டி அமைக்கின்றபோதே, முதல் கமிட்டி ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறது, 50 இலட்சம் என்று. இன்றைக்கு அது ரூ. 120 கோடிக்கு மேலே போய்விட்டது. அது கூட 1981-82-இல். இப்போது 1986, ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். 200 கோடி ரூபாயும் ஆகலாம். அந்த அளவுக்கு இருந்தாலும், ஆண்டு ஒன்றுக்கு, முதலிலே 5 சதவீதம் அப்புறம் 15 சதவீதம், அப்புறம் 30 சதவீதம், பிறகு 40 சதவீதம் இப்படி முழுமையாக வருமானம் வருவதற்கு வாய்ப்புள்ளது என்று புள்ளி விவரம் சொல்கிறது.

அத்தகைய நிலையில், இது ஒரு அத்தியாவசியமான திட்டம் என்று இந்தியத் துணைக் கண்டம் அப்படிக் கருதி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அது முன் வரவேண்டும். இந்தத் திட்டத்தை இப்போது ஆரம்பித்தாலே, அது 6, 7 ஆண்டுகள் ஆகும். ஆகவே, அதை இப்போது கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறோம்.

அதுமட்டும் அல்ல. இப்படிக் கொண்டு வந்தால் தமிழ் நாட்டிற்கு என்ன இலாபம் என்றால், நிரந்தரமாக வறட்சி மாவட்டம் என்று சொல்லக்கூடிய ராமநாதபுரத்தில், நிரந்தரமாக எப்போது பார்த்தாலும், அங்கே என்ன இருக்கிறது? பனைமரம் இருக்கிறது, அங்கே என்ன இருக்கிறது? வாய்ப்பு இல்லை, பசுமை இல்லை என்று எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே, அந்தப் பேச்சு அடியோடு நீக்கப்படுவதற்கு இந்தத் திட்டம் உதவி புரிகிறது.

வறட்சி மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு, தொழில் வளம் பெருகும். இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும். அந்த மாவட்டத்தில் என்றும் இல்லாத அளவுக்கு இலங்கையிலிருந்து குடி பெயர்ந்து வந்து இருக்கிற பல்வேறு அகதிகளுக்கு வாழ்வு கிடைக்கும். இந்த நாட்டில் நாம் ஒரு குடும்பம் என்று சொன்னால், 5 பேருக்கு மாமூலாக சாப்பாடு பண்ணுவோம். ஒன்றிரண்டு பேர் 'கெஸ்ட்' ஒன்று, இரண்டு நாட்கள் வந்திருந்தால் கூடுதல், குறைச்சல் ஆகும். அவர்கள் நிரந்தரமாக நம்முடைய குடும்பத்திலே என்று ஆகிவிட்டால் நம்முடைய வருமானத்திலே துண்டு விழும். இந்தியாவில் இலங்கைக்கு ஆதரவு கொடுத்து, பல்வேறு வகையில் உதவி செய்யக் கூடிய நிலை தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

நாம் இப்படி செய்யக் கூடிய உதவி மட்டும் போதுமா? போதாது. சிறப்பாக இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை, அவர்கள் நிம்மதி பெற வேண்டும் என்றால் வேலை வாய்ப்பு தேவை. அந்த வேலைவாய்ப்பு இந்தத் திட்டத்தால் பெருகும், உருவாகும். இதன் மூலம் அவர்கள் நிம்மதி பெற முடியும். இந்தியாவிலே இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்கள், வந்திருக்கக்கூடியவர்கள் மட்டும் அல்ல. இன்னும் அங்கே தத்தளித்துக் கொண்டிருக்கிற இலங்கைத் தமிழர்களுக்குக் கூட வாழ்வு கிடைப்பதற்கு சேது சமுத்திரத் திட்டம் பலன் அளிக்கும் என்பதை எண்ணிப் பார்த்து அதைக் கொண்டு வரவேண்டும்.

இலங்கையைச் சுற்றாமல், நேரடிப் பயணம், ஒரு பயணத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 67 ஆயிரம் ரூபாய். பழைய கணக்கு. ஒரு முறை போய்விட்டு வந்தால், ஒரு இலட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி ஆகும். இலங்கையைச் சுற்றி வருவதற்கு ஒரு ரவுண்டுக்கு, ஒரு இலட்சம். அப்போது, எத்தனை முறை போகிறோமோ, அத்தனை முறை இந்தியப் பேரரசுக்கு அந்நியச் செலாவணி இலாபம். இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை நான் இன்றையதினம் எடுத்துச் சொல்லவில்லை. என்றோ சொல்லி வைத்து விட்டார்கள். அதை நினைவு படுத்துகிறோம். அவ்வளவுதான். ஆகவே, அந்த அந்நியச் செலாவணி எத்தனை முறை சுற்றி வருகிறார்களோ, எத்தனை கப்பல் போய் வருகின்றனவோ, எத்தனை ஆயிரம் கப்பல்கள் பெருக்கம் ஏற்படுகிறதோ, அவ்வளவும் அந்நியச் செலாவணி கொடுக்கக்கூடிய வகையில் இந்தியப் பேரரசுக்கு துணையாக இருக்கக்கூடிய வகையில் இருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு பல்வேறு வகையில், பல்வேறு அந்நியச் செலாவணியை இந்தியப் பேரரசு பெறுவதற்கு உதவி புரிந்து கொண்டிருக்கிறது.

அந்த வகையில், இதுவும் உதவி புரிந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வேண்டிய நிலக்கரி, ஸ்பிக் நிறுவனத்திற்கு வேண்டிய நிலக்கரி, ஆல்கலின், ரசாயனம் ஆகிய பொருட்களின் இறக்குமதி அளவு அதிகரிக்கக் கூடிய அளவில் உதவியாக இருக்கும். அது மட்டும் அல்ல. ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில் 80 சதவீதம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதில் 20 சதவீதமும் கப்பல்கள் மூலம் நடைபெறுகிறது. இது ஒரு புள்ளிவிவரம். ஐரோப்பிய நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்வதும், இந்தியாவிலே இருந்து நாம் ஏற்றுமதி செய்வதும் எவ்வளவு என்று பார்க்கிறபோது, இது ஒரு 80 சதவீதம், அது ஒரு 20 சதவீதம் என்று இப்படி நடக்கிறது என்று சொன்னால், இது இலங்கையைச் சுற்றி வருவதால் ஏற்படக் கூடிய நேரம், எரிபொருள் அதிகமாகிறது. இவை எல்லாம் குறைந்தால் கப்பல் வாணிபம் பெருகும்.

பல கதைகள், இலக்கியங்கள், எல்லாம் படிக்கிறோம். அவை எல்லாம் கொஞ்சம் மறந்துவிட்டு, இன்றைய நிலைக்கு வரும்போது, பொருளாதாரத்தை நினைவு படுத்திப் பார்த்து, எந்த அளவுக்கு அப்போதே திட்டம் இட்டு செய்து இருக்கக்கூடிய இவைகள் எல்லாம் தேசப் பாதுகாப்பிற்கு மிக முக்கியமான திட்டமாக இருக்கிற காரணத்தினால் இதை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டும் அல்ல. சர். ஏ. ராமசாமி முதலியார் கமிட்டி மிக அருமையாகச் சொல்லி இருக்கிறார்கள் :

The project is fin ncially justified, technically sound, commerci lly worthwhile and politic lly expedient

அப்படி அவர் அருமையாகச் சொல்லிவிட்டுப் போனார். அவர் எப்போதோ சொன்னார். அப்படிச் சொன்ன அந்தத் திட்டம் இதுவரையில் நிறைவேறாமல் இருப்பது மிக மிக சங்கடமான ஒரு நிலையாகும். ஆகவே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல்வேறு வகையில் நாம் பாதிக்கப்பட்டிருக் கிறோம். கடல் வழி கைவிடப்பட்டிருக்கிறது. கடலோரப் பாதை கைவிடப்பட்டிருக்கிறது ; தென் அகல இரயில் பாதை கைவிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு என்று வரு கின்ற பொழுது, தமிழகம் என்று வருகின்றபொழுது, இந்தியத் துணைக் கண்டத்திலே நமக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களை சொல்ல வேண்டுமென்றால் அங்கேதான் சொல்லியாக வேண்டும். இங்கே பேசுகின்றபொழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள் எல்லாம், மத்திய அரசாங்கத்தையே சொல் கிறீர்களே என்று கேட்கிறார்கள். அங்கேதான் கேட்டாக வேண்டும். மத்திய அரசு என்பது உள்ளங்கை. மாநில அரசு என்பது விரல். இந்த விரல் உள்ளங்கையோடு இணைந் திருக்க வேண்டும். விரல் இல்லாவிட்டால் மத்திய அரசாங்கம் என்கின்ற உள்ளங்கைக்கு நோய் என்றுதான் பொருள். அந்த விரல் சரியாக இல்லாவிட்டால், அந்த விரல் பழுது பட்டு விட் டால், அந்த விரல் குறைந்து போய்விட்டால் உள்ளங்கைக்கு ஏதோ நோய் என்றுதான் அர்த்தமாகும். அப்படிப்பட்ட நோய்பிடித்த நிலையில் மத்திய அரசு இருக்கக்கூடாது, சீராக இருக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர, குறை சொல்ல வேண்டும், குற்றம் காண வேண்டும் என்பது அல்ல என்பதைத் தெளிவுபடுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், உப்பு வியாபாரத்தைப் பெருக்கும் வகையில், வங்காளத்திற்கு ஏற்றுமதி செய்கிறோம் ; அங்கிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கும் இது உதவும். இங்கிருந்து பெரிய அளவில் உப்பு வியாபாரம் செய்து அதையெல்லாம் கொண்டு வருவதற்கு மிக நல்ல முறையிலே இது இருக்கும் என் பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இங்கே பேசுகின்றபொழுது பல்வேறு பிரச்சினைகளைப் பற்றித் தொட்டுப் பேசும்பொழுது செம்மலை அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கோரிக்கை வைக்கலாமா என்ற கருத்தில் கூட அவர்கள் கேட்டார்கள். இதற்கு வழிகாட்டியாக பேரறிஞர் அண்ணா அவர்கள் சேலம் இரும்பாலை குறித்து எழுச்சிநாள் கொண்டாடி வெற்றி பெற்றிருக்கிறார்கள். அப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எழுச்சி நாள் கொண்டாட வேண்டிய அவசியம் வந்தால், அதை கட்சியின் சார்பில் என்று சொல்ல மாட்டேன், அனைவரும் ஒன்று சேர்ந்து எழுச்சி நாள் கொண்டாடுவதற்கான அப்படிப்பட்ட காலம் வர வேண்டும். சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்வது என்பது மட்டுமல்ல, மக்கள் மன்றத்திலேயும் ஒருமித்த அந்தக் கருத்தைச் சொல்வதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். அப்படி எழுச்சி நாள் கொண்டாடி இந்தியப் பேரரசுக்கு நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றவும், உடனடியாக நடைமுறைப்படுத்தவும் உதவ வேண்டுமென்று உங்கள் அனைவரையும் மனம் விரும்பி கேட்டுக் கொண்டு, திரு. செம்மலை அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களால் தனி நபர் தீர்மானம் என்ற முறையிலே கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் அல்லது முழுமையாக இந்த மாமன்றம், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுபபி வைக்கப்பட வேண்டிய முக்கியமான தீர்மானம் இது என்கின்ற வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் சில கருத்துக்களை, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'' சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பொதுவாக தென் மாநிலங்களுக்கும், குறிப்பாக தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டிற்கும் ஒரு இன்றியமையாத திட்டமென இப்பேரவை கருதுகிறது'' என மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து பேசுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த மாமன்றத்தில் ஒன்றை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம், இந்த மன்றத்தில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தில் இருவேறு வகையாக கருத்துக்கள் நமக்கு இருக்க வேண்டியதில்லை என்பதைத் தான் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய வேங்கடரமணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை வலியுறுத்தி எந்த அளவிற்கு டெல்லி பார்லிமெண்டிலே பேசியிருக்கிறார்கள், அதைப்

பற்றி ஒரு வார்த்தை கூட மதிப்பிற்குரிய உறுப்பினர் செம்மலை அவர்கள் சொல்லவில்லையே என்று வருந்தினார்கள். நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புவது, பேரறிஞர் அண்ணா அவர்களாக இருந்தாலும் சரி அல்லது முதலமைச்சராக இருந்த எங்களுடைய கலைஞர் அவர்களாக இருந்தாலும் சரி அல்லது எதிர்க்கட்சித் தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற பேராசிரியர் அவர்கள் டெல்லியிலே பார்லிமெண்டிலே உறுப்பினராக இருந்த காலத்திலேயும் சரி அல்லது வாய்ப்பு கிடைக்கும்பொழுது பொதுவுடமைக் கட்சியின் கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு திரு. கல்யாணசுந்தரம் அவர்களாக இருந்தாலும் சரி, எல்லோரும் இந்தத் திட்டத்தை வலியுறுத்தி, இந்தத் திட்டம் மிகவும் அவசியமானது என்று பேசியிருக்கிறார்கள். என் கவலையெல்லாம், இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புவது, காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற எந்தவொரு தனி நபரையும் சொல்லி, உங்களுக்கு இந்தத் திட்டத்தில் அக்கறை இல்லை என்று நான் குற்றம் சாட்டிப் பேசக் கூடியவன் அல்ல. ஆனால் ஏதோ ஒரு வகையில் வலியுறுத்த வேண்டிய சில பிரச்சினைகளை வலியுறுத்தி அப்படியே அது பேச்சாகவே நின்று போய் விடுகிறது.

(பிற்பகல் 12—50)

எங்களைப் பொறுத்த அளவில், அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வாக இருந்தாலும் சரி, தி. மு. க. வாக இருந்தாலும்சரி, இந்திய நாடு சுதந்திரம் பெற்றபிறகு பல்வேறு திட்டங்கள் போட்டு, ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, வளர்ச்சித் திட்டங்களுக்கான தொகைகள் ஒதுக்கீடு செய்கிற நேரத்தில், 30 ஆண்டுகளாக நாங்கள் கூக்குரல் போட்டவர்கள். ஹிராக்குட் திட்டமாக இருந்தாலும் சரி, ராம்நா நதி அணைக்கட்டு திட்டமாக இருந்தாலும் சரி, ரூர்க்கேலா இரும்பு உருக்காலை திட்டமாக இருந்தாலும் சரி, கண்ட்லா ஹார்பர் திட்டமாக இருந்தாலும் சரி, இவையெல்லாம் அங்கே நிறைவேறுகிற காலத்தில், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் என்னவாயிற்று, சேது சமுத்திரத் திட்டம் என்னவாயிற்று என்று கூக்குரல் போட்ட அந்தப் பாரம்பரியத்திலே வந்தவர்கள் நாங்கள். வடக்கு வாழ்கிறது என்று குற்றம் சாட்டியவர்கள். வடக்குத் தொழில் வளம் பெறுகிறது ; தென் நாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொன்ன நேரத்தில், அதற்காக வாதாடி, இந்த மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில், ஆளுகிற பொறுப்பிலேயிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய மதிப்பிற்குரிய பெருந்தலைவர் பெரியவர் காமராஜர் அவர்களிடத்திலே கூட என்ன சொன்னார் என்றால், எங்களைக் காட்டியாவது, ''இவர்கள் பிரிவினை கேட்கக் கூடியவர்கள், இவர்கள் வாயை அடைக்கவாவது தென்னாடு தொழில் மயம் ஆகவேண்டுமென்று சொல்லுங்கள்'' என்று உதாரணத்திற்குச் சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டுமென்றால், எங்களை இராணுவத்திலே இருக்கிற '' ஸாப்பேர்ஸ் அண்டு மைனேர்ஸ் '' என்கின்ற பிரிவைப்போல், எங்களைப் பயன்படுத்துங்கள் என்று சொன்னார்கள்.

இன்னொன்றையும் குறிப்பிட்டார், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினருடைய கவனத்திற்காகச் சொல்கிறேன். குற்றச் சாட்டாக அல்ல.

இதே தமிழ்நாட்டில் ஒருகாலத்தில் கவர்னராக இருந்த மேதகு ஆளுநர் பிஷ்னுராம் மேதி ஒருகாலத்தில் அசாமினுடைய முதல் அமைச்சராக இருந்தவர். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், பழுத்த காங்கிரஸ் தியாகி. ஆனால் அசாமிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வரவேண்டுமென்று பலமுறை போராட்டம் நடத்தி, கோரிக்கை வைத்து, மதிப்பிற்குரிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடத்தில் வேண்டுகோள் வைத்து, அது நிறைவேறாத நிலைமையில் ஒரு பிரகடனத்தைச் செய்தார்; இன்ன காலத்திற்குள் மத்திய அரசாங்கம் அசாமில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தவில்லையென்றால்,
* * *
என்று எச்சரித்தார். அவரும் காங்கிரஸ்காரர்தான்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி அவர் அறிக்கை விடவும் இல்லை, சொல்லவும் இல்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ரெக்கார்ட் பூர்வமாக, நம்முடைய உறுப்பினருக்கு நான் அவர் பேசிய பேச்சினுடைய குறிப்பையும் எப்பொழுது பேசினார் என்பதையும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முக்கியமான ஒருவர் சொன்னார் என்பதை அவர் மறுத்திருக்கிறார், ரெக்கார்ட் இருந்தால் கொடுத்து விடுங்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரெக்கார்டைக் கொடுத்து விட்டு, தங்கள் அனுமதியைப் பெற்றுப் பேசட்டும். இல்லையென்றால், ஒரு கவர்னராக இருந்தவர்,
* * *
என்று சொன்னதாகச் சொன்ன அந்தக் கூற்றை இந்தச் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் குறிப்பிடுவது, காங்கிரஸ் கட்சி என்ற காரணத்திற்காக, மாநிலத்தினுடைய உரிமையை, மைய அரசு புறக்கணிக்கக்கூடாது என்று

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

காங்கிரஸ்காரர்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் குறிப்பிடுகிறார். மேற்கு வங்காளத்து முதலமைச்சராக இருந்த பி. சி. ராய் அவர்கள், மைய அரசைக் கண்டித்து தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, மாநிலத்தினுடைய உரிமையை வலியுறுத்துகிறார்கள் என்பதைக் குறிப்பிடத்தான் அவர்கள் அப்படி சொல்கிறார்களே தவிர அது ஒன்றும் ஆபத்தான கருத்தல்ல, அது ஒன்றும் பிரச்சினைக்குரிய கருத்தாகவும் தெரியவில்லை.

திருமதி டி. யசோதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
* * *
என்று கவர்னராக இருந்தவர் அறிக்கை கொடுத்தார் என்று பேசுவது ரெக்கார்ட் இருந்தால் பேசட்டும். இல்லையென்றால் அதை நீக்கிவிடுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பகுதியை மட்டும் நீக்கி விடுகிறேன். நீங்கள் டேட் பிக்ஸ் பண்ணிச் சொன்னார் என்று சொல்லுங்கள். அதற்குப் பிறகு
* * *
என்று அறிவித்ததாக சொன்னதை மட்டும் நீக்கி விடுகிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் தவறாக எண்ணக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். கவர்னராக இருக்கும்போது அறிவித்தார் என்று சொல்லவில்லை; கவர்னராகப் பின்னால் பொறுப்பேற்றார். அதற்கு முன்னால் அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், அந்த அளவு கோபமிருந்து தன்னுடைய மாநிலத்திலே தொழில் வளம் ஏற்பட வேண்டுமென்பதற்காக, எங்களை அடியோடு புறக்கணிப்பார்கள் என்றால், * * *
என்று சொன்னார் என்று சொன்னேன். அவைக்குறிப்பிலே அது இடம் பெற வேண்டுமென்பதல்ல. அந்த உணர்வை இந்த மன்றத்திலே உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். அவருடைய கோபத்தைக் கிளறுவதற்காக அல்ல.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் அல்லது தென்னாட்டில் இந்த சேது கால்வாய் திட்டம் என்று சொல்வது 2 வழிகளில் சிந்திக்க வேண்டியது: (1) பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு (2) சுதந்திரம் வந்ததற்குப் பின்பு என்று இரண்டு வகையிலே நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். முன்பே சொன்னது போல், கே. டி. கோசல்ராம் போன்ற

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், முக்கியமானவர்கள், சேது கால்வாய் திட்டத்திலே எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அதை வரவேற்கிறேன். அதுபோன்ற உணர்வை மேலும் நாம் வெளிப்படுத்தி, அந்த உணர்வை மத்திய அரசுக்கு ஒரு நிர்பந்தமாக வைத்துத்தான் இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய அடிப்படை நோக்கமே தவிர வேறு அல்ல.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீக்கியதையே மறுபடியும் அவர்கள், கவர்னராக இருந்தபோது சொல்லவில்லை, அவர் முதல்வராக இருக்கின்றபோது சொன்னார் என்று இந்திய ஒருமைப்பாட்டிற்கு விரோதமான கருத்தை அவர் முதல்வராக இருந்தாலும், கவர்னராக இருந்தாலும், நிச்சயமாக அவர் தெரிவித்திருப்பாரேயானால் அதற்குரிய சூழ்நிலையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ரெக்கார்ட் இருந்து அவர் உங்களிடத்திலே அனுமதி பெற்றிருப்பாரேயானால் எல்லோருக்கும் நீங்கள் கொடுக்கின்ற அந்தத் தீர்ப்பைத்தான் நானும் இப்பொழுது எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * அந்தப்பகுதியை நீக்கிவிட்டோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய உரிமையை வற்புறுத்துவதை ஒருமைப்பாட்டிற்கு எதிரானது என்று நாம் கருதிக்கொள்ளக் கூடாது. அதை வற்புறுத்திச் சொல்கிறார்கள். மாநிலம் தொழில் மயமாக வேண்டும் என்ற ஆர்வத்திலே சொல்கிறார்கள் என்பதைத்தான் அதிலே இருக்கின்ற உயிரோட்டமான கருத்தாக எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, அது ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக்கூடியது, காங்கிரஸ் கட்சிக்கே, காங்கிரஸ் முதலமைச்சரே பேசினார் என்ற வகையில் அவர் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதுபோல் பல காங்கிரஸ் முதலமைச்சர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநிலத்தின் உரிமைக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு, எல்லைக்கு போய்க்கூட அவர்கள் குரல் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பாராட்டுகின்ற வகையில் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதையும் கூட நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு காங்கிரஸ் கட்சியினுடைய பெருமையை நீங்களே குறைத்துவிடக் கூடாது.

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் திட்டம் வருவதற்கு இடையூறாகவும் இருக்க மாட்டோம். நம்முடைய உரிமையை கேட்டுப் பெறுவதிலே உங்களுக்கு நாங்கள் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல ஆனால் அதே நேரத்தில், * * *
என்பதைத்தான் நான் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொள்கிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சியினர் எல்லாத் தரப்பி லிருந்தும் அந்தந்த மாநிலத்திற்காக போராடிக்கொண் டிருக்கிறார்கள், வாதாடுகிறார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. பிரிந்து போகும் என்பதை ஒரு முதல் வர் பொறுப்பிலிருந்தோ அல்லது கவர்னர் பொறுப்பிலிருந்தோ சொன்னதை நான் நீக்கும்படி கேட்டேன். நீக்கியதற்குப் பிறகு அவர் மறுபடியும் அந்தப் பொருளை திரும்பவும் சொல்லி யிருக்கிறார். அதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீக்கிவிட்டோம். தெளிவாக அப்படிப் பேசவில்லை என்று டீப்பாக திங் பண்ணி நீக்கிவிட்டோம், நான் சொன்னது உள்பட. உரிமை வேண்டு மென்று சொல்கிறார். அது அப்படியே அவைக் குறிப்பில் இருக்கட்டும்.

திரு டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீக்கியதற்கு நன்றி. கருத்து என்னவென்றால் யாருக்குமே உரிமைக்காக போராடுவதற்கு உரிமை இருக்கிறது. அதற்காகத்தான் நாம் இந்த பதவிக்கு வந்து, மக்களுக்காக கடமை செய்ய வேண்டும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரும்பத் திரும்ப நீங்கள் வேறு சொல்ல வேண்டுமா? அவர் சொல்லிவிட்டார். நீக்கவேண்டிய பகுதியை நீக்கிவிட்டோம். அப்புறம் ஒவ்வொ வரும் பேசவேண்டுமா?

திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஏற்கனவே காங்கிரஸ் தரப்பில் டெல்லிக்கு சென்றதை யும், பிரதமரைச் சந்தித்ததையும், சேது கால்வாய் திட்டத்தை வலியுறுத்தியதையும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லிக்கொண்டு மேலும் நீங்கள் வலியுறுத்தி போராடுவதில் இந்த அரசாங்கத்தோடு, இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதில் எல்லோரும் ஒன்றுபட்டு மாண்புமிகு உறுப்பினர் செம்மலை சொன்னதுபோல் அரசாங்கத்தினுடைய தீர்மானமாகவே இதை நிறைவேற்றுவதற்கு, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேண்டுகோள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்காகத்தான் இந்த சேது சமுத் திரத் திட்டம் அல்லது சேது கால்வாய்த் திட்டம் என்று சொல் வது இரண்டு வகையிலும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டியது. ஏனென்றால் மேற்கு கடற்கரையையும், கிழக்கு கடற்கரையை யும் இணைக்கின்ற ஒரு முக்கியமான திட்டம் இது. மாண்பு மிகு உறுப்பினர் சொன்னதுபோல் மன்னார் வளைகுடாவிற்கும் பாக் ஜலசந்திக்கும் இடையில் பல்வேறு இடங்களில் சேது கால் வாய்த் திட்டத்தை நிறுவுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு இறுதி யில் ஆடம்ஸ் பிரிட்ஜ் என்று சொல்லக்கூடிய இடத்தில் கடலை ஆழப்படுத்தி பெரிய கப்பல்கள் வந்து செல்லக்கூடிய நிலையிலே,

மேற்கு கடற்கரை கப்பல்கள், கிழக்கு கடற்கரைக்கும், கிழக்கு கடற்கரை கப்பல்கள் மேற்கு கடற்கரைக்கும் செல்லக் கூடிய ஒரு மகத்தான திட்டமாக இந்த சேது சமுத்திரத் திட்டம் இவ்வளவு ஆண்டுக்காலம் பின் தங்க வேண்டிய அவசியம், தாயில்லாப் பிள்ளையாக இருக்கவேண்டிய அவசியம் என்ன என்று வேதனையாக இருக்கிறது. இரண்டு பிரிவுகளாக இந்தத் திட்டத்தை நாம் ஆராய வேண்டும். ஏனென்றால் 1800 ஆம் ஆண்டில் இது சர்வே செய்யப்பட்டது என்ற குறிப்பு இருக்கிறது.

(பிற்பகல் 1-00)

அப்படியானால் அது கிழக்கிந்திய கம்பெனி காலம். பிரிட்டிஷார் ஆண்டுகொண்டிருந்த காலம் என்று எடுத்துக்கொள்ளலாம். அதற்கடுத்து சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு இரண்டாவது கட்டம். முதல் கட்டம் வெள்ளைக்காரன் ஆட்சியில். அப்போது 9 கமிஷன்கள் அமைக்கப்பட்டு சர்வே செய்யப்பட்டு இந்தத் திட்டத்திற்காக பல கட்டங்களில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் சர் இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் 1955-ல் அமைக்கப்பட்ட குழு தன்னுடைய ரிப்போர்ட்டை 1956-ல் தந்தது.

வெள்ளைக்காரனைப் பொறுத்தவரையில் நான் இந்த மன்றத்தில் குற்றம் சாட்டிப் பேச முடியாது. காரணம் வெள்ளைக்காரன் வியாபாரத்திற்காக கிழக்கிந்திய கம்பெனி சார்பில் வந்தவன். இலாப நட்டக் கணக்குப்பார்த்து காரியங்களைச் செய்திருக்கிறான். சுதந்திரம் வந்ததற்குப் பிறகு வெல்ஃபேர் கவர்ன்மெண்ட் என்று சொல்லப்படுகிற வெல்ஃபேர் ஸ்டேட் என்று வந்தது. அப்படி சுதந்திரம் வந்ததற்குப் பிறகு இந்தியத் திருநாட்டின் ஆட்சியில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்ற வேதனையை இந்த மன்றத்தில் நான் சொல்லாமல் இருக்க முடியாது. அந்த வேதனையைத்தான் சொல்கிறேன்.

இங்கே நம்முடைய உறுப்பினர்கள் அண்ணா அவர்கள் சேலம் உருக்காலைத் தொழிற்சாலைக்கு எழுச்சி நாள் கொண்டாடினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படி எழுச்சி நாள் கொண்டாடி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்திலிருந்து உறுதி செய்யப்பட்ட இந்தத் திட்டம் முழுமையான உருக்காலையாக வரவில்லை; வெறும் ஸ்டீல் ரோலிங் மில் என்ற வகையில் உருட்டாலையாகத்தான் வந்திருக்கிறது. நமக்கெல்லாம் அதிலே மகிழ்ச்சிதானா? நாம் எதைக் கேட்டோம்? என்ன கிடைத்திருக்கிறது? ஏன் இந்தத் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற ஏக்கம் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதில் என்ன கட்சிப் பிரச்சினை இருக்க முடியும் என்பதைத்தான் நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தினுடைய பயனைப் பற்றி நம்முடைய உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். ஒன்றரை நாட்கள் அதிகமாகிறது சுற்றி வருவதால் என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் காரணமாக எரிபொருள் மிச்சப்படுகிறது என்றும் கொழும்பைச் சுற்றிக்கொண்டு வந்தால் ஒரு இலட்சம் ரூபாய் கூடுதலாக ஆகிறது என்றும் சொன்னார்கள்.

இன்னொரு கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தென்மேற்குப் பருவக் காற்று அல்லது வடகிழக்குப் பருவக்காற்று என்ற அந்தக் காற்று வீசுகிற காலத்தில் கூட, இந்த சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் எந்த வகையான ஆபத்தும் இல்லாமல் சிறப்பான முறையில் கப்பல் போக்குவரத்து நடைபெறுவதற்கு உதவியாக இருக்கும். எந்த வகையான பாதகமும் ஏற்படாது. அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பான திட்டம் இந்தத் திட்டம். மேலும் உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். நேரத்தின் அருமை கருதி நான் சுருக்கமாகச் சொல்கிறேன். இந்தத் திட்டம் ஒரு வாணிப முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல. இந்திய நாட்டினுடைய பாதுகாப்பைப் பொறுத்தவரையிலும் கூட இந்த சேது சமுத்திரத் திட்டம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்ல வேண்டும். நம்முடைய பிரதமர் அவர்கள் இந்திய நாட்டின் அமைச்சரை லிபியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். சற்றும் எதிர்பாராத நிலையில் அமெரிக்க நாடு லிபியா நாட்டின் மீது போர் தொடுத்து இருப்பது முறையல்ல என்று அணி சேரா நாடுகளின் பிரதிநிதியை லிபியாவிற்கு அனுப்பினார்கள். அதுபோல் இந்த அமெரிக்க நாடு திரிகோண மலைப் பகுதியிலிருந்து கப்பல் தளத்தின் மூலமாக, இலங்கை சர்க்காரைக் கைவசப்படுத்திக்கொண்டு இந்த நாட்டின்மீது ஒரு கால கட்டத்தில் தாக்குதல் தொடுக்கக்கூடிய நிலைவந்தால் அப்போது தான் இந்தச் சேது கால்வாய்த் திட்டத்தினுடைய முக்கியத்துவம் என்ன என்பது விளங்கும். ஆக அந்த வகையில் இராணுவப் பாதுகாப்பு என்று எடுத்துக்கொண்டாலும் சரி, தமிழ் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டாலும் சரி இந்தத் திட்டம் மிகவும் அவசியம். தென் மாநிலங்கள் முன்னேற்றம் பெற இந்த சேது கால்வாய்த் திட்டம் மிகவும் தேவையானது, பாராட்டப்படவேண்டியது. எனவே நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லி என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன்.

திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டம் அமல் படுத்தப்பட வேண்டும் என்று எத்தனையோ முயற்சிகள் நம்முடைய நாட்டிலே எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இப்போதுதான் முதன்முதலாக ஒரு சமுத்திரத் திட்டத்தை, ஒரு மலையைக் கொண்டு வந்து நாம் நிறைவேற்றி இருக்கிறோம். திரு. செம்மலை அவர்கள் மிக முக்கியமான ஒரு திட்டத்தை இந்திய நாட்டினுடைய பேரரசினுடைய கவனத்திற்குக் கொண்டு

வருவதற்காக இந்த அவையின் உணர்வுகளை ஒருமித்துக் காட்டுவதற்காக இந்தத் திட்டத்தை இங்கே பிரேரேபித்திருப்பதை நான் மனம் உவந்து வழிமொழிந்து வற்புறுத்த விரும்புகிறேன். இதனுடைய இன்றியமையாத தன்மையைப் பற்றி, ஒட்டு மொத்தமாக இந்தியத் துணைக் கண்டத்திற்கே எவ்வளவு நன்மை பயக்கக்கூடிய திட்டமாக இது இருக்கிறது என்பதையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர்கள் மிகத் தெளிவாகவும், ஒப்புக்கொள்ளத்தக்க புள்ளி விவரங்களுடனும் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆகவே அது பற்றி நான் சொல்ல வேண்டியது மிகவும் சுருக்கமாக அமைந்து விடுகிறது.

நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் சேது திட்டத்தை சீதை திட்டம் என்றுகூட வர்ணித்தார்கள். ஆனால் மொழி, நூல் நில ஆராய்ச்சியாளர்களுடைய அறிவொப்புமை சொல்லக் கூடிய உண்மையை வைத்துப் பார்க்கும் போது, சீதை என்ற சொல்லில் சீதை என்ற வார்த்தையை விட, சீது என்ற வார்த்தை தான் மிகப் பொருத்தமாக, நெருக்கமாக இருக்கிறது. ஏன் அப்படிக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் அந்த நாட்டினுடைய உண்மைப் பெயர், தன்மைப்பெயர், சீதுநாடு என்பதுதான். சீது என்றால் யார் என்று கேட்கக் கூடும். ஆதி மனிதனாகிய ஆதாம் அவர்களுடைய மகன் தான் இந்த சீது என்பவன் ஆகும். இப்படிச் சொல்லும் போது பல பேர்கள் வியப்பு அடைந்தார்கள். உலகத்தினுடைய முதல் மனிதத் தோற்றம் எங்கே நிகழ்ந்தது என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவர்கள் அந்த உண்மையை ஏற்றுக் கொள்வார்கள்.

இன்று கூட ஆடம்ஸ் பீக் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த ஆதி மனிதனுடைய நினைவாலே இடப்பெற்ற பெயர்தான். இலங்கையிலே இருக்கக்கூடிய அந்த மலையில்தான் இன்று, சிவனடிபாதம் என்று இந்துப் பெருமக்களும், ஆடம்ஸ் பீக் என்று கிறித்துவப் பெருமக்களும், ஆதாம்பாவா மலை என்று இஸ்லாமியப் பெருமக்களும் ஒருங்கே சுட்டிக் காட்டக் கூடிய ஒரு இடம் இருக்கிறது. ஆதிமனிதனுடைய தோற்றம் நிகழ்ந்த ஒரு இடம் அது. அந்த நிலப்பரப்பும் அந்தத் தன்மைகளும் நம்முடைய நாட்டினுடைய நிலப் பரப்பினூடே ஒத்து அந்தக் காலத்திலேயே இருந்து வந்தது. ஆனால் எந்தக் காலத்திலே இந்தப் பிரிவினை வந்ததோ தெரியவில்லை. யார் பிரித்தார்கள் என்றும் தெரியவில்லை. அந்தப் பிரிவினை இன்று எவ்வளவு பெரிய வினை உணர்வுகளுக்கு இடம் அளித்திருக்கிறது என்பது அண்மைக் கால வரலாறு.

ஆகவே தான் மகாகவி பாரதியார் அவர்கள் இந்த இரண்டு மேற்பரப்புக்கும் ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்றார். சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம் என்றே அவர் பாடினார். ஆனால் இன்று அந்த சேது சமுத்திரத் திட்

டம் எவ்வளவு நாட்களாக விவாதிக்கப்படுகிறது என்று பார்க்கும்போது, ஆங்கிலேயர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்திலிருந்தே இதை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். விடுதலை பெற்ற நாளிலிருந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இருப்பினும் இது பற்றி தெளிவான ரிப்போர்ட், பீசிபிஃலிட்டி ரிப்போர்ட் என்று சொல்லுவார்களே, அப்படிப்பட்ட ரிப்போர்ட்டை அளித்த பெருமை நம்முடைய நாட்டினுடைய பெருமதிப்பிற்குரியவராக விளங்கிய சர். ஏ. ராமசாமி அவர்களுடைய தலைமையிலே இயங்கிய ஒரு கமிட்டியினர் தான் முறையாக, தெளிவாக, திட்டவட்டமாக ஒரு அறிக்கையைத் தந்தார்கள். அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்திருக்கிறேன், 25 ஆண்டுகளுக்கு முன்னாலேயே. அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற வரிகள் என்னுடைய நெஞ்சிலே இன்னும் ஆழமாக பதிந்திருக்கிறது.

அந்தத் திட்டத்தைப் பற்றி அது முடியுமா என்று பல பேர் ஐய வினா எழுப்பிய அந்த நாட்களில் அவர் அதிலே அந்த அறிக்கைக்கு முடிவுரையாகத் தரக்கூடிய அந்தப் பகுதியிலே It is not only possible and feasible but also proftiable என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அவர் 1952-வது ஆண்டு டெல்லி மாநிலத்தினுடைய அவையினுடைய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே அந்த அவையில் பேசியிருக்கிறார்கள். என்னுடைய பெரும் தலைவர் காயிதே மில்லத் அவர்களும் பாராளுமன்ற அவையிலே அதை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

1962-வது ஆண்டு இதே சேது பூப்பிரதேசத்தை உள்ளடக்கிய இராமேஸ்வரம் பாராளுமன்ற தொகுதிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களுடைய கட்சி நண்பர் ஷெரீப் அவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். பிறகு 1964லேயிருந்து நாடாளுமன்றத்திலேயும், மேலவையிலேயும், மக்கள் அவையிலேயும் இடம் பெறும்ப் வாய்ப்பு பெற்ற நானும் வற்புறுத்தி வந்திருக்கிறேன். இப்போது இந்த அவையிலேயும் அதனுடைய இன்றியமையாத தன்மையை அதை நிறைவேற்றுவதனால் தமிழகத்திற்கு மாத்திரம் அல்ல, இந்தியாவிற்கு மாத்திரம் அல்ல, உலகத்தினுடைய கடல் போக்குவரத்திற்கே கூட நன்மை பயப்பதாக இருக்கும் என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளத் தக்க புள்ளி விவரங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

அவற்றையெல்லாம் மீண்டும் குறிப்பிட நான் விரும்பவில்லை. ஆனால் ஒன்று, இந்தச் சபையில் என்ன பார்க்கிறேன் என்றால், நண்பர் கோசல்ராம் அவர்களை நன்றியோடு பல உறுப்பினர் நினைவு கூறுகிறார்கள். உண்மையில் சேது சமுத்திரத்

1986 மே 10] [திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்]

திட்டத்தை நினைக்கின்றபோது அவர்களையும் நினைத்து கூறப்பட வேண்டியவர்கள்தான். ஏனென்றால் அவர்கள் அந்தத் திட்டத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்து, இடைவிடாமல் வற்புறுத்திக் கொண்டிருந்த காலத்தில், நமது முறைக்கு ஏற்பில்லாத ஒரு திட்டத்தை அவர் வற்புறுத்துவதிலே தன்னுடைய நினைவையே இழந்து கொண்டிருக்கிறார் என்றுகேலி பேசியவர்கள கூட நாடாளு மன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். நான் நன்றாக அறிவேன். இப்போது இத்தனை நாட்களாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு திட்டம், மத்திய அரசினாலே கூட இதுபற்றி நன்கு ஆராய்வதற்கு ஒரு குழு போட்டு ஆராயப்பட்ட ஒரு திட்டம். ஏன இதற்காக டோக்கன் அமவுண்ட் கூட போட இதுவரையில் மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்றால், இங்கே அமர்ந்திருக்கிற என்னுடைய பெருமதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்படக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மை தான், நம்முடைய அரசு தான் அங்கே இருக்கிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் எல்லாம் சரி, மத்திய அரசு நம்முடைய அரசு தான். அந்த மத்திய அரசிலே நிதியமைச்சராக இருக்கக்கூடியவர் நம்மவராக இருந்தால், நம்முடைய நாட்டைப் பற்றி அவரும் கொஞ்சம் கவனம் செலுத்தி, கருணை காட்டக்கூடுமென்று கூட நாம் பேசியிருக்கக் கூடும்.

நான் மரியாதையோடு நம்முடைய நண்பர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். நானும் நினைத்துப் பார்க்கிறேன். அந்த வாய்ப்பையும் நாம் பெற்றிருந்தோமே, தமிழ் நாட்டினுடைய ஒரு பேரறிஞர் தான் விடுதலை பெற்ற நாளில் நிதியமைச்சராக வந்தார்கள். கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்கள். அதற்குப் பிறகு சென்னை நகரத்தைச் சேர்ந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் வந்தார்கள். அதற்கு பிறகு மீண்டும் கொங்கு மண்டலத்திலிருந்து சி. சுப்பிரமணியம் அவர்கள் வந்தார்கள். அதற்கு பிறகு நம்முடைய சென்னை நகரவாசியான, இன்றைக்கு துணை ஜனாதிபதியாக ஏற்றம் பெற்றிருக்கிற வெங்கட்ராமன் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றார்கள். இப்படி நான்கு பேர்களை சுதந்திரம் பெற்ற நாட்டிலே நாம் நிதியமைச்சர்களாக அளித்தும் கூட, அவர்கள் காலத்தில் கூட ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கி இதுபற்றி சரியாக ஆராய்ந்து[ஒரு தொடக்கத்தை செய்திருக்கக்கூடாதா என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். ஏறத்தாழ ஒரு தலைமுறையாக இதைப் பேசிக்கொண்டிருக்கிறோம். அரசியலில் அக்கறை கொண்டிருக்கிற எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், அவர்கள் முழுமையாக தமிழகத்தினுடைய நல்வாழ்வைப்பற்றி எண்ணத் தலைப்பட்ட நாளிலிருந்து தமிழகம் தாங்கிய மொத்த இந்தியாவினுடைய நன்மையைக் கருத வேண்டுமென்று அவர்கள் நினைத்துப் பார்க்க முற்பட்ட காலத்திலிருந்து, இன்னும் தாண்டி சர்வதேசத்தில் நடக்கக்கூடிய ஒத் போக்குவரத்துக்கு மேலும் வலிமை தருவதாகவும், வசதி வாய்ப்பைத் தேடித் தருவதாகவும் நம்முடைய நாடு இருக்கவேண்ப்

மென்று அவர்கள் சிந்திக்க தலைப்பட்ட நாளிலிருந்து இது பற்றிப் பேசினாலும், இவ்வளவும் நடக்கவில்லையென்ற ஆதங்கம் தான் இருக்கிறது.

ஆகவே இன்றைக்கு செம்மலை அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஒரு தனியார் தீர்மானம் என்று நாம் ஒதுக்கிவிடாமல், அதை அவர் திரும்பப் பெறச்செய்து, தமிழக சட்டமன்றத்திலே அவையினுடைய முன்னவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தினுடைய, தமிழக மக்களுடைய மொத்தத் தீர்மானமாக அதை முன் மொழிய வேண்டும். இடைக்காலத்தில் இந்த உணர்வு நமக்கு எவ்வளவு ஆழமாக இருக்கிறது, அந்த உணர்வு நம்மை எங்கோ கொண்டு போய் விட்டு விடுமோ என்ற அச்ச உணர்ச்சியில், நான் சொல்வதின் கருத்தை இங்கே இருப்பவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த நிலைக்கு ஆளாக்காமல், அலைக்கழிக்காமல், நம்மை தொல்லைப்படுத்தாமல், துன்பப்படுத்தாமல் மத்திய அரசு நம்முடைய உணர்வை புரிந்து இதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டு வற்புறுத்தி, தமிழ் நாட்டிலே ஒரு தினம் கொண்டாடப் பட்டாலும் கூட, அது எல்லாக் கட்சிகளையும் இணைத்து கொண்டாடப் படக்கூடிய ஒரு உணர்வைக்காட்டக்கூடிய தினமாக ஆக்கப்பட்டாலும் கூட அது நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன்.

நான் தோராயமாக கணக்கு போட்டுப் பார்க்கிறேன். நம்முடைய நாட்டினுடைய காஷ்மீர் எல்லையில் பாதுகாப்பிற்காக நாம் இதுவரையில் விடுதலை பெற்ற நாளிலிருந்து செலவழித்த பணம், ஏறத்தாழ நம்முடைய பாதுகாப்பு பட்ஜெட்டினுடைய தொகையில் 25 சதவீதம் இருக்குமென்று தோராயமாக சொல்ல முடியும். அதிலே 25-லே ஒரு பகுதியாக இந்த சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ நன்மைகள் விளைந்திருக்கும். இப்போது நம்முடைய நண்பர் குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது கூட அங்கே இடையிலே கடலிலே இன்று நிரவலாக இருந்துகொண்டு இருக்கிற அந்தக் கற்கள் எல்லாம் எப்படி, எவ்வளவு சிரமத்தோடு எவ்வளவு பக்தி உணர்ச்சியோடு யார் யாரால் அது கொண்டு வரப்பட்டது என்பதை எல்லாம் அவர்கள் இலக்கிய ஆதாரத்தோடு பேசினார்கள். நான் சொல்ல வருவது, அந்தக் கற்களை எல்லாம் அகற்றவேண்டும் என்பது கூட அல்ல. ஏன் என்றால், அங்கே ஆய்வை நடத்தியவர்கள் அந்தப் பகுதியிலே தான் இந்தக் கால்வாயை வெட்டவேண்டும் என்ற நிலையில் இருந்து வெகுதூரம் மாறியிருக்கிறார்கள். ஒரு பக்தி பூர்வமாக அங்கே கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அந்தக் கற்கள் எல்லாம், அதுவும் உலகநன்மையைக் கருதி அப்புறப்படுத்தக் கூடத்தேவையில்லை. இந்த மண்டபத்திலே கூட பக்கத்திலே தெற்கே 4 மைலிலே அந்த இரண்டு கடல்களையும் ஒரு 18 மைல் நிலப்பரப்பு நாம் வெட்டி விட்டால், இந்த இரண்டு கடல் பரப்

யையும் ஒன்றாக இணைத்து, கற்களும் கடல் அடியில் இருக்கிறது. அந்தப் பக்கத்திலே போகக்கூடிய கப்பல்கள் அதிலே முட்டி மோதி அலைக்கழிந்து விடும் என்ற அச்ச உணர்வோடு இல்லாமல் செல்லக் கூடும் என்று சமீபத்திலே ஆய்வு நடத்தியவர்கள் ஒரு புது அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அப்படி இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், எவ்வளவோ செலவுத் தொகை மிச்சமாகும். என்பதை மாத்திரமல்ல, நம்முடைய இந்தச் சட்டமன்றத்திலே கூட கரை ஓரக் கப்பல் போக்குவரத்து அதிகரிக்க வேண்டும்என்றும் அதை விடவேண்டும் என்று கொள்கை பூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அப்படி செய்யப்படுமானால், தூத்துக்குடி துறைமுகம் உலகத்திலே மிகச்சிறந்த ஒரு துறைமுகப்பட்டினமாக, மற்ற உலகத்தினுடைய கடலாடும் நாடுகள் எல்லாம், தங்களுடைய கப்பலை அந்தத் துறைமுகத்திற்குப் போய்வரக்கூடிய அளவிற்கு விரும்பத்தக்க முறையிலே அது முன்னேறும் என்பது மாத்திரம் அல்ல. இதன் காரணமாக கொச்சி துறைமுகத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து நம்முடைய கரை ஓரக் கப்பல் போக்குவரத்தும் வெற்றிகரமாக நடக்கும் என்பதோடு, இந்தத் திட்டம் நிறைவேறுமானால் உலகத்திலே இன்னொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தாய்லாந்து நாட்டினர் காத்துக்கொண்டுஇருக்கிறார்கள்.

நாம் எப்படி இந்த மண்டபத்தின் பக்கத்தில் 18 மைல் நிலப் பரப்பை வெட்டினால், ஏறக்குறைய 500 மைல் சுற்றி வரக்கூடிய தொலை தூரம் குறைந்து விடும் என்று சொல்கிறோமோ அதைப்போல தாய்லாந்தில் இருக்கக்கூடிய 'Bay of Thailand' என்று சொல்லக்கூடிய பகுதியில் இருக்கக்கூடிய நிலப்பரப்பில் ஒரு 30 மைல் வெட்டினால், அது சிங்கப்பூரைச் சுற்றி, ஏறக்குறைய 1500 மைல் நம்முடைய கீழ்த்திசை நாடுகளுக்கு, நம்முடைய ஜப்பானுக்கு செல்லக்கூடிய தொலை தூரம் சுருக்கமாகிவிடும் என்று கூட அவர்கள் ஆய்வை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். உலகத்திலே வெட்டப்படக்கூடிய கால்வாய்களுக்கு எல்லாம் முந்திய திட்டமாக தயாரிக்கப்பட்டது எனப்பட்டது நம்முடைய திட்டம் என்றாலும் கூட, அது பின்னடைந்து இருக்கிறது. இதைமேலும் நீட்டிப்பது நமக்கு நன்மை தராது என்பதைச் சொல்லி, மத்திய அரசு இந்த ஆண்டாவது அதற்கு ஒரு தொகையை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்தைத் தொடங்கவேண்டும் என்று வலியுறுத்த இந்த வாய்ப்பு தனியார் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஒரு நாள் ஒதுக்கியதிலே நமக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது.

ஆனால் இந்தச் சட்டமன்றம் கலையக் கூடிய கிட்டத்தட்ட கடைசி நாளிலே தான்நஒதுக்கியிருக்கிறார்கள். வாரம் ஒரு முறை தனியார் தீர்மானத்திற்காக நாடாளுமன்றத்திலே வெள்ளிக்கிழமை என்று எப்படி ஒதுக்கப்படுகிறதோ, அப்படி நம்முடைய சட்டமன்றத்திலேயும் ஒதுக்கப்படுமானால், ஏன் என்றால் இந்தச் சட்டமன்றத்திலே நடந்த விவாதங்களை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது இத்தனை நாள் நடந்த விவாதத்தை விட இன்று நடந்த விவாதம் தான் ஒரு இலக்கியச் சுவையோடும்,

பக்திபூர்வமாகவும், புள்ளிவிரத்தினுடைய ஆதாரங்களோடும், அதேநேரத்தில் அரசியல் உணர்வோடும், இன்னும் தெளிவோடும் நடந்திருக்கிறது. இப்படி தெளிவான விவாதங்கள் நடக்கவாவது, தனியார் அலுவல்களுக்கு ஒரு நாள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதி நிலை அறிக்கை விவாதம் இருக்கும்போது, தனி நபர் விவாதம் எடுத்துக் கொள்வதில்லை. அது முடிந்த பிறகு நாம் இப்போது எடுத்துக் கொண்டு இருக்கிறோம். கடைசியாக எடுத்துக்கொள கிறீர்கள் என்று சொன்னதற்காகச் சொல்கிறேன், விதிகளில் அப்படித்தான் இருக்கின்றது.

திரு. ஆ. கா.அ. அப்துல் சமத் : நிதி நிலை அறிக்கை விவாதம் செய்கிறபோதும் கூட பாராளுமன்றத்திலே வெள்ளிக்கிழமை தனியார் தீர்மானத்திற்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விதிகளில் அப்படித்தான் இருக்கிறது. விதிகளைத் திருத்தினால், அதன்படி செய்யலாம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் உறுப்பினர் செம்மலை அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற தீர்மானத்தை வரவேற்று, அதை வலியுறுத்தி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்காலத்திற்கு மேலாக தமிழர்களும், தமிழக அரசும் எழுப்பி வருகிற இந்த உரிமை முழக்கத்தின் ஒலி, மத்திய அரசின் காதுகளை எட்டாதது, மேலும் மேலும் வேதனையானது மட்டுமல்ல, விசித்திரமானதும் கூட.

(பிற்பகல் 1-20)

1862 ஆம் ஆண்டிலே தொடங்கி பல்வேறு நிபுணர்களால் ஒருமுறை அலல, இருமுறை அல்ல, பலமுறை திரும்பத் திரும்ப பரிந்துரைக்கப்பட்ட திட்டம் இந்த சேது சமுத்திரத் திட்டம் என்பனத முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்திக் குறிப்பிட்டார்கள். தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு வேங்கடரமணன் அவர்கள் பேசுகிறபோது மரியாதைக்குரிய பெரியவர் கே. டி. கோசல்ராம் அவர்கள் இந்தத் திட்டத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள், அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் செம்மலை கூறவில்லை என்று வருத்தப்பட்டார்கள். இந்தத் திட்டத்தைப்

பற்றி வலியுறுத்துகின்ற நோக்கம இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட வேண்டுமென்கிற நோக்கத்தோடுதான் எங்களுடைய இதய தெய்வமாக விளங்கி இன்றைக்கு வங்கக் கடற்கரை யோரத்திலே உறங்கிக் கொண்டிருக்கிற கற்பக விருட்சமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட பலமுறை மாநிலங் களவையில் பேசியிருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே கூட இது சம்பந்தமான விளக்கங்களை எழுப்பியிருக்கிறார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடவில்லை என்கிற வருத்தம் எங்களுக்கு நிச்சயமாக இல்லை. அதற்குக் காரணம் இது உண்மையிலேயே நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்கிற காரணத்தாலே எல்லாக் கட்சியினரும் வலி யுறுத்திச் சொல்ல வேண்டும். இதனால் இந்தத் திட்டம் வெற் பெறவேண்டுமென்கிற நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1920 ஆம் ஆண்டில் அன்றையதினம் சென்னை துறைமுகத் தினுடைய பொறியாளராக விளங்கிய ராபர்ட் பிரிஸ்டோ தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பல்வேறு நிபுணர்களால் திரும்பத் திரும்பப் பரிந்துரைக்கப்பட்ட சேது சமுத்திரத்திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாதது கண்டு நான் ஆச்சரியப்படு கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். மரியாதைக்குரிய பிரிஸ்டோ அவர்கள் அன்றைக்கு தான் அளித்த அறிக்கையிலே ரூபாய் 60 இலட்சத்திலேயே இந்தத் திட்டத்தை செயல்படுத்தி முடித்து விடலாம் என்று தனுடைய அறிக்கையை அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். ஆனால் குறைந்த அளவிலே திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அளித்து இருக்கின்ற அறிக்கையை ஏன் இதுவரை காலதாமதம் செய்து நிறைவேற் றப்படவில்லை என்கிற வருத்தம்தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய விளக்கங்கள். இன்றைக்கு வரை இந்த நிலைமையிலே சிறிதுகூட மாற்றம் இல்லை. டாக்டர் இ. இராம சாமி முதலியார் அவர்களுடைய தலைமையின் கீழ் நிபுணர் குழு ஒன்று இந்தத் திட்டத்தினை ஆராய்ந்து தன்னு டைய அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையிலே சேது சமுத்திரத் திட்டமும், தூத்துக்குடி திட்டமும் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே செயல்படுத்தப்பட வேண்டு மென்று வலிமையாக பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுகிற இந்த நேரத்தில் கூட இந்தத் திட்டம் "கிணற்றுக்குள் போட்ட கல்லைப் போல" கிடப்பிலே கிடக் கிறது.

1961 இல் மீண்டும் இந்தத் திட்டம் பற்றி ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவும் அறிக்கையை அளித் தது. ஆனால் இன்றைக்கு வரை நாடாளுமன்றத்திலே அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அறிக்கை வெளி யிடப்படாமல் இந்தத் திட்டத்தை இன்றைக்கு செயல்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இதை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தனித் தீர்மானத் திலேகூட தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல இன்

றைக்கு இந்து மகா கடலினுடைய பரப்பு பல்வேறு நாடுகளால் குறிப்பாக அமெரிக்காவால் இன்றைக்கு இராணுவ மயமாக்கப் பட்டு வருவதை நாம் இன்றைக்கு தெரிந்து கொண்டு வைத்திருக் கிறோம். டிகோகார்சியாவிலும், திரிகோணமலையிலும் அமெரிக் காவினுடைய ராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் திருநாட்டில் பாதுகாப்புக்கு இந்தப் பகுதி ஒரு அறை கூவலாகவே, எதிர்க்காலத்தில் அமையப்போகிறது. போதாக் குறைக்கு இன்றைக்கு கச்சத் தீவு நம்முடைய கையை விட்டுப் போயிருக்கிறது. இது இலங்கைக்கு சாதகமான முறையிலே அமைக்கப்பட்டு இருக்கிற காரணத்தால்தான். அரசியல் கார ணங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் கூட, பொருளாதார காரண மும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது. இலங்கையினுடைய பொருளாதாரப் பகுதி, பொருளாதாரத்தில் கணிசமான பகுதி கடல் வாணிபத்தின் மூலமாகவே இன்றைக்கு கிடைக்கிறது.

சேது சமுத்திரத் திட்டம் தொடங்கினால் இலங்கையி னுடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பு நிச்சயமாக முறிக் கப்படும். வெளிநாடுகளிலிருந்து வருகின்ற கப்பல்கள், இலங் கையைச் சுற்றியே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கி னால் கப்பல்கள் இலங்கையினுடைய வழியில் செல்ல முடியாமல் 500 கிலோ மீட்டர் இலங்கையைச் சுற்றிச் செல்லக் கூடியதை நிச்சயமாகத் தடைப்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கூட முன்னர் பேசுகிற போது குறிப் பிட்டார்கள்.

அப்படி 500 கிலோ மீட்டர் தூரத்தில் செல்லக்கூடிய கப்பல்களின் காலத்தை சுருக்கியும் எரிபொருள்களை சுருக்கியும் கணிசமான அளவுக்கு மிச்சப்படுத்தக் கூடியஒரு சூழ்நிலை உருவாகும். தூத்துக்குடி துறைமுகம் உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறைமுகம் ஆகும். தமிழ்நாடு பகுதியில் உள்ள காங்கேயம் துறைமுகமும் இதனால் வளர்ச்சி பெறக் கூடிய சூழ்நிலை உருவாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தை வலியுறித்துகிறபோது அவர்களோடு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தத் திட்டத்தின் அவசியம் குறித்து பேசியும் விளக்கியும் இருக்கிறார்கள். இது குறித்து இன்றைக்கு இந்திய நாட்டினுடைய குடியரசுத் துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு ஆர். வி. அவர்கள் கூட ஒரு முறை நாடாளுமன்றத்திலே எதிக்கட்சி வரிசையில் இருக்கும் போது 'நான் மாநில அமைச்சராக 16 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து இருக்கிறேன். அப்போது நான் பலமாக கூக்குரல் எழுப்ப விரும்பினாலும் இப்போது தான் அந்த வாய்ப்பு கிடைத்து இருக்கிறது' என்று கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

1986 மே 10] [திருமதி பா. வளர்மதி]

தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகளை, உரிமைகளைப் பெறவேண்டும் என்று குரல் எழுப்புகின்ற நேரத்தில் எல்லாம் மத்திய அரசு வேண்டா வெறுப்பை காட்டுகின்ற மனப் போக்கை ஏன் வைத்து இருக்கிறது என்று தான் இன்றைக்கு விளங்க வில்லை. அதற்கு காரணம் மரியாதைக்குரிய மாண்புமிகு இந்திய நாட்டினுடைய குடியரசு துணைத் தலைவராக இருக்கிற ஆர். வி. அவர்கள் கூட மத்திய நிதி அமைச்சராக இருந்த போது ஒரு உறுதிமொழியைத் தந்தார்கள். இந்தத் திட்டத்திற்கு ஆகிற செலவு ரூபாய் 110 இலட்சம் என்றும் இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதி மொழியைக் கூட நாடாளு மன்றத்தில் மாண்புமிகு ஆர். வி. அவர்கள தந்தார்கள் அப்படித் தந்த பிறகு கூட அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. அது ஏன்? என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்குக் காரணம் இலங்கையின் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்கள் இந்த சேது சமுத் திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கொழும்பு துறைமுகத்தின் முக்கியத்துவம் போய்விடும், இலங்கையின் கப்பல் தொழில் அழிந்து விடும் என்ற அபாயம் இருக்கிறது என்று கேட்டுக் கொண்டதால் இந்தத் திட்டம் அப்படியே வைக்கப்பட்டு இருக் கிறது என்ற குற்றச்சாட்டு இன்றைக்கு பரவலாக பேசப்பட்டு வருகிறது. குற்றச்சாட்டுக்கு இடம் கொடுக்காமல் மத்திய அரசு இந்தத் திட்டத்தில் கவனம் வைத்து நிறைவேற்றித் தர வேண்டும் என்பதை நான் இந்த தீர்மானத்தின் மீது வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திலே வாழ்கிற மக்கள், இலங்கையிலிருந்து அகதிகளாக வருகின்ற மக்கள் பயன் பெறக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டம் செயற்படுத்தப் படுமானால் ஒரு மாவட்டத்திலே வாழ்கிற மக்களுடைய பசிப் பிணியைப் போக்குவதற்கு, வறட்சியை போக்குவதற்கு இலங் கையிலிருந்து வருகிற அகதி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தத்திட்டம் பிரிட்டிஷ் காலத்தில் போடப்பட்ட 9 கமிட்டிகளும், அதற்குப் பின்னர் போடப்பட்ட 3 கமிட்டி களும் ஆக 12 கமிட்டிகளும் பரிந்துரை செய்தும் கூட இந்தத் திட்டத்தை மத்திய அரசு அப்படியே வைத்து இருக்கிறது என்றால் அதற்கு அரசியல் ரீதியான காரணங்கள் எதுவும் இருக்குமோ என்ற அச்சம் கூட இன்றைக்கு ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேச்சுவார்த்தை மூலம் ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசின் ஆலோசனையை எதிர்த்து, இந்திய அரசின் ஆலோசனையைத்தட்டிக் கழித்து ஆயுதம் மூலம் ஒரு இனத்தை அழிக்கின்ற இலங்கைக்கு சரியான பாடம் புகட்ட

இந்தத் திட்டம் பயன்படும். பலகோடி ரூபாயை வட மாநிலங்களில் சிலவற்றிற்கு செலவு செய்கிற மத்திய அரசு இனத கால தாமதப்படுத்துவது தமிழகத்திற்கு பாரபட்சம் காட்டுகிறதோ என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு தமிழ் மக்கள் மத்தியில் எழ ஆரம்பித்து இருக்கிறது. இந்தத் திட்டம் வலியுறுத்தப்படு மானால் இன்றைக்கு சர்வ கட்சித் தலைவர்கள், பேசியிருக்கக்கூடிய கருத்தின் மூலமாக மத்திய அரசு சீக்கிரமாக இணக்கமாக இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன் வரவேண்டும் என்பதை நான் இந்தத் தீர்மானத்தின் மூலம் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவுக்கும், உலகத்திற்கும் போர் அபாயம் நிலவுகின்ற சூழ்நிலையில் இந்திய ராணுவ பாது காப்புக்கு இது ஒரு அவசரமாக அமல்படுத்த வேண்டிய திட்டம் என்று இன்றைக்கு மக்களால் கருதப்படக்கூடிய நிலைமை ஏற் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்பட்டு, கிழக்கு கடற்கரைச் சாலை அமைக்கும் பொறுப்பை முழுவதுமாக மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று கிழக்கு கடற்கரையோரத்தில் குமரி முதல் கல்கத்தா வரை, புதிய அகல இரயில் பாதை போடுவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். இந்தத் திட்டங்களை நிறை வேற்றுவதன் மூலமாக.....(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தின் மீதான விவாதம் அடுத்த தனியார் அலுவல்களுக்காக ஒதுக்கப்படும் நாளில் தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (12-5-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

92. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26-3-1981 ஆம் நாளிட்ட II (1)/CTRE/164 (c)/81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3-1-1986 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

93. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6–9–1977 ஆம் நாளிட்ட II (1)/CTRE/203/77 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20–11–1985 ஆம் நாளிட்ட 1051 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

94. பூந்தமல்லி, ஊரக வேலை வாய்ப்புத் திட்ட சங்கத்தினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு செலுத்தக் கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16–12–1985 ஆம் நாளிட்ட 1102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

95. தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

183. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1986) இணைப்புடன்.

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும்-விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பதினான்காவது பட்டியல்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(197....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 8-(3185)க்கான விடையைக் காண்க).

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக அணைக்கட்டு பாசன திட்டங்களின்கீழ் பாசன நிலங்களுக்கு நில அபிவிருத்தி வரி வசூலிப்பது குறித்த விவரம்.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும் பாசனத் திட்டத்தின் பெயரும்.

(1) தென்னாற்காடு மாவட்டம்.

1. சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம்.
2. வடவார் வீரநந்தாபுரம் பாசன வரி.
3. வீடுர் நீர்த்தேக்கத் திட்டம்.
4. எல்லிஸ்சத்திரம் அணைக்கட்டு திட்டம்.
5. வடக்கனேந்தல் அணைக்கட்டு திட்டம்.
6. கோமுகிநதி நீர்த்தேக்கத் திட்டம்.
7. மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டம்.
8. திருச்செந்தூர் சுனை நீர்ப்பாசனத் திட்டம்.

(2) வடாற்காடு மாவட்டம்.

1. சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம்.
2. சிம்மனப்புதூர் ஓட்டேரி கண்மாய்.

(3) தஞ்சாவூர் மாவட்டம்.

1. தலைஞாயிறு விசையேற்றுத் திட்டம்.
2. ஆய்மூர் II-வது நிலை விசையேற்றுத் திட்டம்.
3. தில்லை விளாகம் விசையேற்றுத் திட்டம்.
4. மணக்கண்டனாறு விசையேற்றுத் திட்டம்.
5. மங்கல் விசையேற்றுத் திட்டம், திருத்துறைப்பூண்டி.
6. கொற்கை தலைக்காடு விசையேற்றுத் திட்டம்.
7. கற்பகநாதர்குளம் விசையேற்றுத் திட்டம்
8. விளாங்காடு விசையேற்றுத் திட்டம்.
9. அம்பலச்சேரி விசையேற்றுத் திட்டம்.
10. கீழ்தொண்டிக்காடு விசையேற்றுத் திட்டம்.
11. விழுந்தமாவடி விசையேற்றுத் திட்டம்.
12. வேளாங்கண்ணி விசையேற்றுத் திட்டம்.
13. வடக்கு இடையாறு வடிகால் திட்டம்(நன்னிலம் வட்டம்)
14. மன்னார்குடி வட்டம் காட்டுவாரி வடிகால் திட்டம்.

15. அக்னி ஆறு அணைக்கட்டு.
16. காஞ்சி விநாயகநல்லூர் வடிகால் திட்டம்.
17. பிச்சன்கோட்டகம் வடிகால் திட்டம்.
18. வளவனாறு விசையேற்றுத் திட்டம்.
19. ஆய்மூர் விசையேற்றுத் திட்டம்.
20. முள்ளியாறு விசையேற்றுத் திட்டம்.
21. பாமணி ஆற்று விசையேற்றுத் திட்டம்.
22. முள்ளியாறு வடிகால் திட்ட ஆயக்கட்டு.
23. தென்னாண்டனர் விசையேற்றுத் திட்டம்.
24. மேல்மட்ட கட்டளைக் கால்வாய்.
25. ஓலவயல் பாசனத் திட்டம்.
26. வல்லமாவடி வடிகால் திட்டம்.
27. வேதபுரி வாய்க்கால் திட்டம்.
28. வெட்டாறு அணைக்கட்டு.
29. பட்டுவளர்ச்சி வடிகால் திட்டம்.
30. மிலட்டூர் அணைக்கட்டு.
31. மகாராஜா சமுத்திரம் அணைக்கட்டு.
32. பாமணி ஆற்று சந்தன வாய்க்கால்.
33. கார்குடி வாய்க்கால் நவீனப்படுத்தும் திட்டம்.
34. ஒக்கநாடு குலையாறு விசையேற்றுத் திட்டம்.
35. அரும்புலியூர் அணைக்கட்டு அடக்காத்து கிராமம்.
36. சாத்தாறு வனச்சனேரி திட்டம் நவீனப்படுத்துதல்.
37. ஆக்கூர் பண்டார ஓடை வடிகால் திட்டம், மாயூரம் வட்டம்.
38. எக்கல்கள்ளிக்குடி திட்டம் நவீனப்படுத்துதல்.
39. அகமதுபடுகை வாய்க்கால்.
40. கந்தப்பாரிசாணார் வாய்க்கால்.
41. மணக்கொண்டனாறு செல்லகொண்டான் வடிகால்.
42. ஐம்புவன் ஓடை பாசன விரிவாக்கத் திட்டம்.
43. அய்யனாறு வடிகால் மேம்பாட்டுத் திட்டம்.
44. சக்கிலியாறு வடிகால் வசதி மேம்பாட்டுத் திட்டம்.
45. வள்ளியாறு அணைக்கட்டு.

(4) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

1. பெரம்பலூர் வட்டம், லாடபுரம் கிராமம், ஈயனேரி ஆற்றுக்கு குறுக்கே அமைக்கப்பட்ட பாசனகுளம்.
2. உடையார்பாளையம் வட்டம், கூவத்தூர் கிராமம், செங்கல் ஓடை குறுக்காக அணைக்கட்டு.
3. உடையார்பாளையம் வட்டம், நடபுரம் கிராமம், மன்னன்குழி ஓடை குறுக்காக அணைக்கட்டு.
4. மணப்பாறை வட்டம் பொன்னியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

5. துறையூர் வட்டம், கொப்பம்பட்டிகுளம்.
6. துறையூர் வட்டம், சோபனாபுரம் குளம்.
7. லால்குடி வட்டம் கள்ளரசர் கிராம குளம்.
8. சண்முகா நதிக்கு குறுக்காக லால்குடி வட்டம் ஸ்ரீதேவி மங்கலம் கிராமத்தில் அமைக்கப்பட்ட குளம்.
9. லால்குடி வட்டம், வாலையூர் கிராம குளம்.
10. புதுமேல்மட்ட கட்டளைக் கால்வாய்.
11. புள்ளம்பாடி கால்வாய் திட்டம்.
12. சின்னாறு திட்டம்.
13. கைலாகாத்தூர் குளம்.
14. முசிறி கால்வாய்.
15. முள்ளிப்பாடி கால்வாய்.
16. பூதலூர் கால்வாய்.
17. பாப்புலர் முதலியார் கால்வாய்.
18. வடுக அணைத்திட்டம்.
19. பொன்னேரி.
20. கீழ்பவானி அணைக்கட்டு திட்டம்.
21. அமராவதி பழைய கால்வாய்.
22. கல்லாறு ஓடைக்கு குறுக்காக கட்டப்பட்ட அணைக்கட்டு.
23. வேங்கனூர் குளம்.
24. பெரம்பலூர் வட்டம், ஈழம் கிராமத்தின் ஓடை அருகே குளம் அமைத்தல்.
25. கல்லாறு அணைக்கட்டு.
26. அருங்கால் ஓடை அணைக்கட்டு.
27. உப்போடை அணைக்கட்டு.
28. ஆமைவாணி ஓடைக்கு குறுக்காக அமைக்கப்பட்ட நக்கம்பாடி கிராம குளம்.
29. நாகலூர் அணைக்கட்டு.
30. பெண்ணமங்கலம் ஓடைக்கு குறுக்காக அமைக்கப்பட்ட குளம்.
31. கொப்பம்பட்டி ஏரி, துறையூர் வட்டம்.
32. துறையூர் வட்டம். சத்தம் வடுகை.

(5) புதுக்கோட்டை மாவட்டம்

1. புதிய மேல்மட்ட கட்டளைக் கால்வாய்.
2. ஓலைவயல் வாய்க்கால்.
3. நரசிங்க காவேரி விரிவாக்கத் திட்டம்.

(6) காமராஜர் மாவட்டம்.

1. ஆலம்பட்டி புதுக்குளம்.
2. அய்யம்பட்டி புதுக்குளம்.
3. முத்தாலாநாயக்கன்பட்டி புதுக்குளம்.
4. வெற்றிலை ஊரணி.
5. முத்துசுவாமிபுரம் புதுக்கண்மாய்.
6. மதியீனி புதுக்குளம்.
7. மீளாம்பட்டி புதுக்கண்மாய்.
8. கம்மம்பட்டி புதுக்கண்மாய்.
9. தேன்கரை புதுக்கண்மாய்.
10. வலையம்பட்டி புதுக்கண்மாய்.
11. குமாரலிங்கபுரம் கண்மாய்.
12. கீழ்த்திருத்தங்கல் கண்மாய்.
13. கஞ்சம்பட்டி புதுக்கண்மாய்.
14. பாலவநத்தம் புதுக்கண்மாய்.
15. திருவிளந்தாள் புதுக்கண்மாய்.
16. பெரவள்ளிக்குளம் புதுக்கண்மாய்.
17. சங்கரநாதன் அணைக்கட்டு.
18. அரிதமால் அணைக்கட்டு நத்தக்குறிச்சி கண்மாய்.
19. அரிதமால் அணைக்கட்டு கீர்தியூர் கண்மாய்.
20. கல்லணையாறு அணைக்கட்டு வண்ணான் கண்மாய்.

(7) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

1. பெரியார் நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டம்.
2. விருச்சுளியாறு அணைக்கட்டு.
3. மணிமுத்தாறு அணைக்கட்டு கோட்டிக்கண்மாய்.
4. தேவர் அணைக்கட்டு கண்டியூர் கண்மாய்.
5. கனம்பிருப்பு அணைக்கட்டு.
6. உப்பாறு அணைக்கட்டு.
7. நத்தாறு அணைக்கட்டு கடம்பங்குடி கண்மாய்.
8. கரூர் அணைக்கட்டு.

(8) இராமநாதபுரம் மாவட்டம்.

1. கல்லேரி கிளைவாய்க்கால்.
2. பாலாறு அணைக்கட்டு பூதனேரி கண்மாய்.

(9) மதுரை மாவட்டம்.

1. வைகை நீர்த்தேக்கத் திட்டம்.
2. வைரவனாறு அணைக்கட்டு மைதலை மண்ணடி கண்மாய்
3. பெரிய அருவி அணைக்கட்டு.
4. குள்ளக்கண்மாய் ஓடை.
5. ஆலங்குளம் அணைக்கட்டு அபிவிருத்தி திட்டம்.
6. பழநியாண்டவர் ஓடை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9. மதுரை மாவட்டம்—தொடர்ச்சி

7. தாடக நாச்சிபுரம் ஓடை குறுக்காக அமைக்கப்பட்ட கண்மாய்.
8. பாட்டைக்குளம் கண்மாய்.
9. மஞ்சள் நதி நீர்த்தேக்கத் திட்டம்.
10. மாலூர் ஓடைக்கு அருகே உள்ள பாசனக் கண்மாய்.
11. உசிலம்பட்டி காட்டாறு அணைக்கட்டு மற்றும் பெரிய கண்மாய்.
12. மஞ்சுளா நீர்த்தேக்கத் திட்டம்.
13. சத்தியாறு அணை.
14. தாடகவுண்டம்பட்டி கண்மாய்.
15. பாலாறு பெருந்தலாறு அணை.
16. மூங்கிலாறு அணைக்கட்டு.
17. பெங்கன் ஓடை கண்மாய்.
18. திருமணிமுத்தாறு அணைக்கட்டு.
19. ஈத்தகோயில் கிராமம் உப்போடை கண்மாய்.

(10) திருநெல்வேலி மாவட்டம்.

1. மண்டைக்காடு கண்மாய்.
2. தாத்தனேரி கண்மாய்.
3. ஆலந்தா காட்டாறு அணைக்கட்டு.
4. வெங்கடேசபுரம் புதுக்கண்மாய்.
5. அருணாச்சலபுரம் புதுக்கண்மாய்.
6. புதுச்சிமாயபுரம் புதுக்கண்மாய்.
7. ஜெகவீரபுரம் புதுக்கண்மாய்.
8. நாச்சியார்புரம் புதுக்கண்மாய்.
9. சிந்தாம்பட்டி புதுக்கண்மாய்.
10. வடமலைபுரம் புதுக்கண்மாய்.
11. மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டம்.
12. சித்தலைக்காரை புதுக்கண்மாய்.
13. கொல்லம்பரப்பு புதுக்கண்மாய்.
14. ராமச்சந்திரபுரம் புதுக்கண்மாய்.
15. அழகப்பாபுரம் புதுக்கண்மாய்.
16. வல்லம்பட்டி புதுக்கண்மாய்.
17. மாலதி அணைக்கட்டு சிம்மபுரம் கண்மாய்.
18. பஞ்சதங்கை கண்மாய்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 10]

10. திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி

19. அருங்குளம் புதுக்கண்மாய்.
20. வேலாயுதபுரம் புதுக்கண்மாய்.
21. சின்னமலை கொண்டான் அணைக்கட்டு.
22. மம்மலைப்பட்டி புதுக்கண்மாய்.
23. பராக்கிராம பாண்டியன் கண்மாய்.
24. கோரம்பள்ளம் கண்மாய்.
25. மேல்கரந்தை புதுக்கண்மாய்.
26. நரசங்குளம் கண்மாய்.

(11) சேலம் மாவட்டம்.

1. மேட்டூர் கால்வாய் திட்டம்.
2. ஜேடர்பாளையம் மதகு.
3. கவரப்பனை கண்மாய்.
4. செக்கடியாறு அணைக்கட்டு.
5. செம்மலை செவ்விக்காடு கண்மாய்.
6. மதுரை காளியம்மன் குளம்.

(12) தருமபுரி மாவட்டம்.

1. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம்.
2. மார்க்கண்டபதி அணைக்கட்டு.
3. திக்கணஹள்ளி கண்மாய்.
4. புலிக்கால் கண்மாய்.
5. மூலஹள்ளி பள்ளம் கண்மாய்.
6. கொடுபாய் பள்ளம் கண்மாய்.
7. முதலைப்பள்ளம் கண்மாய்.
8. பள்ளிப்பட்டி கண்மாய்.
9. மரவத்திபள்ளம் கண்மாய்.
10. சித்தலபாடி பள்ளம் கண்மாய்.
11. கடாரப்பள்ளி அணைக்கட்டு.
12. பெண்டச்செருவு கண்மாய்.
13. மல்லிகார்ஜுனாபுரம் அடரண்டகா கண்மாய்.
14. வெல்லம்பள்ளி ஒடைஹல்லா கண்மாய்.
15. மார்த்தசெக்கடி காட்டாறு குறுக்கே கட்டப்பட்டுள்ள கண்மாய்.
16. சப்பாத்தி கிராமம் கொட்ரட்டாளம் குறுக்கே கட்டப்பட்ட சப்பாத்தி கண்மாய்.
17. சின்னபட்டாம்பள்ளி கிராமம் தங்கூர் ஆற்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட கண்மாய்.
18. சின்னமுதலைப்பள்ளி ரெங்கப்ப நாயக்கர் கண்மாய்.
19. ஜாகிர்கார் கிராமம் ஜாகிர்கார் கண்மாய்.
20. தொரைப்பள்ளி கிராமம் தொரைப்பள்ளி அணைக்கட்டு.

[1986 மே 10

12. தருமபுரி மாவட்டம்—தொடர்ச்சி

21. மகேந்திரமனத்ரம் பெர்செடு கண்மாய்.
22. ஆனைமலைப்பட்டி கிராமம் வளமார் கண்மாய்.
23. ஹிட்டன ஹள்ளி தெப்பை பள்ளம் கண்மாய்.
24. பாலக்கோடு வட்டம் திக்கணபள்ளி கண்மாய்.
25. தேன்கனிக்கோட்டை வட்டம் சின்னப்பட்டி கண்மாய்.
26. அண்டதேயன்பள்ளி வெடச்சனூர் கண்மாய்.
27. கடவராஹள்ளி அணைக்கட்டு ஹீலகம் கண்மாய்.
28. காஜூநாதம் கிராமம் அடியங்கா கண்மாய்.
29. பில்லமருதை கிராமம் கோதநல்லி கண்மாய்.
30. தேன்கனிக்கோட்டை நஞ்சகவுண்டம் அணைக்கட்டு.
31. தொரப்பள்ளம் அக்ரஹாரம் கிராமம் தரப்பாராப்புள்ளி அணைக்கட்டு.
32. ஹோதூர் கிராமம் சென்னியார் கண்மாய்.
33. அஜ்ஜனஹள்ளி கிராமம் இருதலைப்பாடி புள்ளமணி கண்மாய்.

(13) பெரியார் மாவட்டம்.

1. கீழ்பவானி நீர்த்தேக்கத் திட்டம்.
2. பெருமுகை அத்தாணி கால்வாய்.
3. மேட்டூர் அணைத் திட்டம்.
4. அத்தானிப்பள்ளம் கண்மாய்.
5. சென்னப்பட்டி கண்மாய்.
6. கொப்பலூர் கண்மாய்.
7. கோபிச்செட்டிப்பாளையம் மொட்டைமாமி கண்மாய்.
8. புஞ்சைப்புளியம்பட்டி பெரும்பள்ளம் கண்மாய்.
9. உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம் தாராபுரம் வட்டம்.
10. சேரம்பட்டி கிராம கண்மாய்.
11. நல்லாம்பள்ளி அணைக்கட்டு.
12. கொரங்கன்பள்ளம் அணைக்கட்டு.
13. பெருமுலையாறு.

(14) கோவை மாவட்டம்.

1. அமராவதி நீர்த்தேக்கத் திட்டம்.
2. வேட்டைக்காரன்புதூர் கால்வாய்.
3. உடுமலைப்பேட்டை கால்வாய்.
4. மேல்மட்ட கட்டளைக் கால்வாய்.
5. நீலாம்பூர் குளம்.
6. மொட்டணம் குளம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS